வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 கார்த்திகை திங்கள் 28-ம் நாள் (13—12—1964) ஞாயிற்றுக்கிழமை ஷஃபா 8 | இதழ் 29

## மாற்றுக்கட்சிகளுடன் ஒப்பந்தம் இல்லை

### தேர்தலில் தமிழரசு தனித்தே இயங்கும்

**தமிழரசுக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலை முன்னிட்டு எந்த அரசியற் கட்சியுடனும் எந்த விதமான தேர்தல் ஒப்பந்தமும் செய்யவில்லை என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் நமது நிருபரிடம் கூறினர்.**

அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தொகுதிகளிலும் வழமைபோல் கட்சி வேட்பாளர்களை நிறுத்தும் என்று தெரிய வருகிறது. கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியில் கட்சியின் தேர்தல் குழு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

பொதுத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சி, வேறு எந்தக் கட்சியுடனும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதில்லை என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறினர்.

தமிழரசுக் கட்சி யூ. என். பி. கட்சியுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக ஒரு வதந்தி உலவுவதை யிட்டு நமது நிருபர் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை வினவிய போது; அந்த வதந்தியில் எள்ளளவும் உண்மையில்லை என்று கூறியதுடன், வேறு எந்த அரசியற் கட்சியுடனும் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

### தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு

பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளராகத் தோற்ற விரும்பும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கான விண்ணப்பப் பத்திரங்களை, கட்சித் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தமிழரசுக் கட்சி வேட்புரிமை பெற விரும்புவோர் செயலாளர், தமிழரசுக் கட்சி, 16, அல்பிரட் கவுஸ் தோட்டம், கொழும்பு-3 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகிறார்கள்.

## ஏராளமான பொருள் இறக்குமதிக்கு அனுமதி

### அரசாங்கத்தின் தேர்தல் உபாயம்

**அயல் நாட்டுப் பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்கு திடீரென அரசாங்கம் சில வர்த்தகர்களுக்கு அனுமதி கொடுத்துள்ளது. அத்துடன் பண்டாரநாயக்காவைப் பற்றிய செய்திப் படத்தை, நாடெங்கும் திரையிடவும் ஏற்பாடு நடைபெறுகிறது. தேர்தற் பிரசாரத்துக்காக இவ்விரு முறையையும் ஆளும் கட்சி பயன்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.**

இறக்குமதி வர்த்தகத்திற்கான அனுமதிச் சீட்டுகள் வழங்குவதில் ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம் தாராள மனப்பான்மையைத் திடீரெனக் கையாளுவதாக வதந்தி அடிபடுகிறது. இத் துறைக்கு போதுமான அளவு அந்நியச் செலாவணி உபயோகத்துக்கும் உத்தரவுகள் வழங்கப்படுகிறதாம்.

இத் திடீர் மாற்றத்துக்கு பொதுத் தேர்தலே காரணம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இன்று சந்தையில் கிடைக்காத அயல் நாட்டுப் பொருட்கள் பல விற்பனைக்கு வந்து விடுமானல் நாட்டில் எதுவித தட்டுப்பாடும் இல்லை என்று பொது மக்களிடம் பிரசாரம் செய்து வாக்குச் சம்பாதித்துவிட இம் முயற்சியை ஆளும் கட்சி செய்துள்ளதாக ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)


## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2-40 |
| நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-25 |
| மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| சிங்கள கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| மேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-50 |
| No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக்கவருடன்) | 2-75 |
| No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-20 |
| No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-60 |
| No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 |
| No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| No. 6 பிளாஸ்ரிக் பின்னஸ் டயறி 'A' (பக்கம் 1 நாள்) | 3-85 |
| No. 7 பிளாஸ்ரிக் பின்னஸ் டயறி 'B' (பக்கம் 2 நாள்) | 3-30 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 3-60 |
| பிளாஸ்ரிக் சிங்கள டயறி ,, | 2-20 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 3-30 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5-50 |
| No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) | 3-70 |
| No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி ,, | 3-30 |
| No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 3-30 |
| No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-75 |
| No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1 நாள்) | 4-95 |
| No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2 நாள்) | 4-40 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 5-25 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 6-50 |
| ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-80 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-75 |

இன்னும் பல உண்டு.

காகிதப் பஞ்சம் காரணமாக சொற்ப தொகையே தயாரித்துள்ளோம். பிந்தினல் கிடைப்பதரிது—இரட்டிப்பு விலை கொடுத்தும் வாங்க வேண்டி நேரிடலாம்.

மற்றும் விபரங்களுக்கு

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை**

161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

போன் : 79141

கிளை : யாழ்ப்பாணம்—போன் : 236.


அட்டனில்

## இ. தொ. கழக மாநாடு

### ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன

அட்டன், டிச, 10.

**இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாடு 12ம் திகதி சனிக்கிழமையும், 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மிகவும் சிறப்பாக அட்டன் நகரில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டதாக செய்தி கிடைத்துள்ளது.**

மாநாட்டு ஏற்பாடுகளை இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள், நிர்வாகச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் நஸ்கேலியா மாவட்டப் பிரதிநிதி திரு. கே. பி. செல்லத்துரை, தலவாக்கொல்லைப் பிரதிநிதி திரு. மு. எல்லாவன், பதுளைப் பிரதிநிதி திரு. ஆர். எம். இராமையா, துவரெலியாப் பிரதிநிதி திரு. பீ. கிருஷ்ணசாமி முதலியோர் கவனித்துவருகின்றனர்.

மாநாட்டுக்கு நல்லூர் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியும், இ. தொ. கழகத் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமை வகிப்பார்.

சனியன்று காலை அட்டன் கைலண்ட்கல்லூரியில்பேராளர்மாநாடு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இம்மாநாட்டில் 1000 பேர்கள்வரைபிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநாட்டில் தோட்டக்குழு முக்கியஸ்தர்களும், வாலிப முன்னணி உறுப்பினர்களும், மாதர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஞாயிற்றுக் கிழமையன்று அட்டன் டன்பார் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். காலை 9 மணிக்கு பிரின்சஸ் படமாளிகைச் சந்தியிலிருந்து ஊர்வலம் பிறப்படும்.



மாநாட்டுத் தலைவர் டாக்டர் நாகநாதன்

இவ்வூர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொள்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

# சிலம்பின் செல்வி சிறப்புடையவளே!

ஈழத்து அரியநாயகம்

கண்ணகியின் கற்புத் திறனைச் சீதையுடன் ஒப்பிட்டு கண்ணகியின் கற்பு களங்கமுடையதே என நிலைநாட்ட முனைவது தவறு. கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்தது முதல் மதுரை சென்று இறந்தது வரை நிகழ்ந்தவையாவும் கண்ணகியின் தவறே எனக் காட்ட முயல்வதும் தவறு. இராமன் காட்டிற்குச் சென்ற பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் காரணம் சீதைதான் என்பதை எண்ணிப் பார்த்திலார் முடிவே இது. சீதையின் கற்பு களங்கம் அற்றதாயின் இராமாயணத்தில் காணும் பயங்கர விளைவுகள் நிகழ்ந்திருக்க மாட்டா.

## சீதையின் பிடிவாதம்

கைகேகியின் சூழ்ச்சியால் காட்டிற்குப் புறப்பட்ட இராமன் சீதையிடம் வந்து, ஒப்பிலாத என் தம்பியாகிய பரதன் இவ்வுலகை ஆள்வான். நான் எனது தாய் தந்தையரின் ஆணையைத் தலைமேற் கொண்டு மின்னல், இடி முதலிய சூழ்நிலையுடைய கரியமேகம் தவழும் காட்டைக் கண்டு வருவேன. இங்கு நீ வருந்தாது இரு. மேலும் நினது குளிர்ந்த செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற சிவந்த பாத தாமரைகள், அரக்கினை உருக்கினாற் போன்று அழலுகின்ற காட்டு வழியில் உள்ள பரற்கற்கள் வருத்துதற்குரியன அல்ல அல்ல எனப் பலவாறு கூறினன்.

ஆனால் சீதையோ கணவனின் சொல்லைக் கேட்கவில்லை எப்படியும் வருவேன் எனப் பிடிவாதமே பிடித்தாள். பிடிவாதத்துடன் மட்டும் நில்லாது இராமனைப் பார்த்துக் கூறினள் "பரிவு இகந்த மன்தோடு பற்று இலாது ஒருவுகின்றனை" என. இவ்வாறு கணவனைப் பார்த்துக் கற்புடைய பெண் கூறுவாளா? சீதை இவ்வாறு கூறியதைக் கேட்ட இராமன் மேற்கொண்டு ஒன்றும் சொல்ல முடியாது அழைத்துச் செல்கிறான்.

## கண்ணகியின் பெருந்தன்மை

கண்ணகியோ அப்படியல்ல, மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்த கோவலன் "நம் குலத்திலுள்ளோர் தேடித் தந்த செல்வமெல்லாம் தொலைத்துவிட்டேன். இப்பொழுதுள்ள வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது" எனக் கூறினன். இந்நிலையில் சீதை இருந்து இருந்தால் கணவன் மீது குற்றமும் குறையும் சுமத்தி இருப்பாள். ஆனால் கண்ணகியின் கற்புத் திறன் இங்கேதான் தெரிகின்றது:— 'நலங்கேழ் முறுவல் நகை முகங்காட்டிச் சிலம்புகொள்மென்' என்றாள் கண்ணகி.

வண்ணச் சீராடி மணமகள் அறிந்திலாத கண்ணகி, வான்விழியா வைகறை யாமத்து மீன் நிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக் காரிருள் நின்ற கடை நாட்கங்குலில் கோவலன் என்னோடு இங்கு எழுவென்று சொன்னவுடன் எழுந்து சென்றாள்.

## கவுந்தி அடிகளின் நோக்கு

கணவன் எழுவென்றவுடன் எழுந்த கண்ணகியும், காட்டிற்கு வர வேண்டாம் எனப் பல முறை கூறிய பொழுதும் வருவேன் எனப் பிடிவாதமாகச் சென்ற சீதையும் ஒரு நிலையில் வைத்து எண்ணிப் பார்க்கக் கூடியவர்களா? கவுந்தியடிகள் கோவலனிடம் கூறும் பொழுது சீதையின் பிரிவே இராமனுக்குத் துன்பத்தினைத் தந்தது என்று கூறுகின்றார். அத்தகைய கவுந்தி அடிகள் கண்ணகியைப்பற்றி ஆயர் முதுமகளாகிய மாதரியிடம்:—

"கடுங்கதிர் வெம்மையில்
காதலன் தனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புல
வாடித்
தன்துயர் காணாத் தகைசால்
பூங்கொடி
இன்துயர் மகளிர்க் கினறிய
மையாக
கற்புக் கடம்பூண்ட
இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்
யாமங் கண்டிலாமால்"

என்று பாராட்டுகின்றார்.

## கற்பின் சிறப்பு

மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகியை மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! எனப் பலவாறு பாராட்டியதை நோக்குகின்ற பொழுதே கண்ணகியின் கற்பின் திறனை நாம் எண்ணி எண்ணிப் பெருமிதமடைகிறோம். மாதரி வீட்டில் கோவலன் கண்ணகியை

"நாணமும் மடனும் நல்லோ
ரேத்தும்
பேணிய கற்பும்
பெருந்துணையாக
என்னோடு போந்திங்
கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே
புனைபூங்கோதாய்
நாணின் பாவாய் நீணில
விளக்கே
கற்பின் கொழுந்தே
பொற்பின் செல்வி"

என ஏற்றிப் போற்றினன். இன்ப நிலையில் பாராட்டுவதிலும் பார்க்கத் துன்பத்திலும் துயரத்திலும் இருந்த பொழுது பாராட்டுவதே உண்மையானதும் சிறப்புடையதுமாகும்.

"பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு" என்ற வள்ளுவரின் இலக்கியத்திற்கு இலக்கணமாக விளங்கியவள் கண்ணகி. கற்பில் மாசறு பொன்னாகிய கண்ணகியைக் குறையுடைய சீதையாகிய உரைக் கல்லில் உரைத்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறுவது தவறுடையதாகும்.

# கைவலிமை தாராய்!

—"பாண்டியூரன்"—

குறிஞ்சிக் குமரீ! குளிர்போர்த்த குன்றழகி!
அறிஞர் தமக்கு அருஞ்செல்வீ!
வறிய தொழில்
ஆளர் துயரை அறியாயோ...?ஏன் மவுனம்
ஆளவந்தார்க் கானேம் அவல!

வானஞ் சொரியும்; மலர்கள் வரவேற்கும்;
தேனருவி பாயும்...;திசைநோக்கில்
ஊனுருகிப்
பாய்கிறதே அம்மா! பயனறியாப் பாட்டாளி
நாய்களிலும் கீழோ? நவில்!

பச்சை 'றவுக்கை' பருவப்பெண் போட்டது போல்
உச்சி மலையை உணர்வித்தாய்;
அச்செறிவை
ஆக்கியவன் உந்தன் அழகைப் புசிக்கவில்லை!
தாக்கிடுவோர் கையில் தவில்!

ஆக்கிப் படைத்தான்; அருந்திச் சுவைக்குமுனர்
தூக்கிவிடச் செல்லும் துயர்கண்டேன்!
சாக்குரலைக்
கேட்டதனாற் றானோ கிளர்ந்தாய் நதியாக...
வாட்பகையில் உண்டோ மலர்ச்சி?

வெண்பட்டு மேகம் விரித்து முகமலரின்
கண்மூடிற் காதல் கனிவாமோ?
அண்ணார்ந்து
பார்த்துத் தலைவன் பரதேசம் செல்கின்றான்
ஏர் உழுவார்க் கேனிவ் விடர்?

செப்பப் படுத்திச் செழித்த விளைவாக்கி
ஒப்புவித்துச் செல்லுவதும் ஒப்பாமோ?
முற்பவத்திற்
செய்த வினையோ...?சிச்சி அறி னம்!
கைவலிமை தாராய் கனிந்து!

# கோவலன் வீழ்ச்சிக்கு காரணம் பல

சிவயோகம் பேரம்பலம்

'கோவலன் வீழ்ச்சிக்கு யார் காரணம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் அக் கட்டுரையாசிரியர் கோவலனுடன் மதுரை செல்ல இடைத் தூரக்களைப்புக் காரணமாக மறுத்துவிட்டாள் என்று கண்ணகிமேல் ஆதாரமற்ற பழி சுமத்தப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். சிலப்பதிகாரம் முழுவதையும் படித்து இன்புறாது—எம்

## கருத்துமேடை

மனக்கண்ணில் இப் புதுக் கருத்துக்கள் எவ்வாறு தோன்றலாம்—என அவ்வாசிரியர் ஏன் உணரத் தவறினாரோவென தெரியவில்லை. கோவலன்—கண்ணகி மதுரையடைந்தமையை நாம் இளங்கோ கண்ட காவியத்தின்மூலம் அறியாமலில்லை.

## மதுரை மூதூர் யாதென வினவினாள்

'மதுரை என்று இங்கு குறிப்பிட்டது மதுரைத் தலைநகரையே. அதாவது கண்ணகி ஆயர் பாடியில் ஐயையுடன் தங்கியிராது, தன் களைப்பை மறந்து சிலம்புவிற்கச் சென்றகோவலனுடன் பாண்டியன் அரண்மனை வரை செல்லாததையே—கண்ணகி சிலம்பு விற்கச் சென்ற கோவலனுடன் செல்லாமைக்கு இடைத் தூரக்களைப்புத்தான் காரணம் என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் ஆதாரமில்லாமலில்லை. அவ்வாதாரம் நேரே கூறப்படவில்லை. அறிவுக்கண் கொண்டு நுணுகி நோக்கவேண்டும். மதுரைமாநகர் அடைய முன்பே களைப்பின் காரணமாகத்தான் கண்ணகி கோவலனிடம்' மதுரை மூதூர் யாதென வினவினாள்.

'முதிராக் கிளவியின்
முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர்
யாதென வினவ'
(நாடுகாண்காதை 40—41)

எனவே மதுரை எல்லை அடையமுன்பே 'இறுங்கொடி நுசுப்போடினைந்தடி வருந்திய' தேமொழி மதுரைத் தலைநகர் வரை செல்லாமைக்கு அவள் இடைத் தூரக்களைப்புத்தான் காரணமென்பது ஊகிக்கப்பாலது.

## பிரிவுக்கு காரணம் யார்?

கலைப்பிரியனாகிய கோவலன் கலையரசி மாதவியிடஞ் சென்றான். அது அவன் செய்த தவறன்று. ஆனாற் கலையை அனுபவித்த கோவலன் மாதவியையும் அனுபவித்துவிட்டான். அனுபவித்ததுடன் விட்டிருந்தாலும் அவனை மன்னித்துவிடலாம். ஆனால் மனையகம் மறந்து விடுதலறியா விருப்பினனாகி மாதவியுடனிருந்தமைதான் கோவலன் செய்த பெருந்தவறு.

மேலும் அக் கட்டுரையாசிரியர் கோவலன் மாதவியை விட்டு நீங்கியமைக்குக் காரணம் மாதவியின் பரத்தைத் தன்மைதான் என்கிறார். கோவலன் உத்தமனாகவிருந்திருந்தால் விலைமகளிர்க்குரிய பரத்தைத்தன்மையில் ஏன் அகப்பட வேண்டும். ஆட்டத்தைப் பார்த்தவன் ஆளையும் பார்த்துவிட்டான். கலையை ரசித்ததுடன் வீடு சென்றிருக்கலாமே? அதுவுமன்றி விலைமாதாக இருந்தாலும் மாதவியின் மாசற்ற ஒழுக்கத்தை நோக்குமிடத்தும் கதையில் வேறு இடங்களில் கோவலன் விட்ட தவறுகளை நோக்குமிடத்தும் கோவலன்தான் மாதவியைப் பிரிந்தமைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டுமென்பதை நன்கு உணரலாம்.

## கோவலன் குறைகள்

ஆரம்பத்தில்மாதவியிடம் கலையழகைக்கண்டு கட்டழிந்து உலவாக்கதை பல பேசி, உள்ளொன்றும் புறம் பொன்றும் உரைக்க அறியாத கலைநெஞ்சம்படைத்த அத் தூய கோவலன் பின்பு ஏன் மாதவியை 'சலம்புணர் கொள்கைச் சலதி' (கனாத் திறன் 55) மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் என்றெல்லாம் வைகின்றான். இது அவன் தடுமாறு உள்ளத்தைக் காட்டவில்லையா? ஆசிரியர் இளங்கோவே, 'கோவலன் போலத் தென்றல் வீசிற்று, என்று கூறுமிடத்து அவன் நிலையற்ற உள்ளத்தைச் சுட்டிக்காட்டுவது போன்றிருக்கின்றது. தேனுள்ள இடத்துப் பாயும் வண்டு போன்றாரும் கோவலன். மாதவியுடன் வாழுமிடத்து தன் நம்பிக்கை இழக்கின்றான் கோவலன். ஐயப் பேயின் வலையிற் சிக்கிய கோவலன் மாதவி கானல்வரியின் உட்கருத்தை அறியமுடியாதவனாகி அவளைப் புறக்கணிக்கின்றான். மேலும் தன் தெய்வமான கோவலன் தன்மைகளுக்கு எதிர் பேசாத கண்ணகியே.

——போலுமென்
வாயல் முறுவற்கவர்
உள்ளகம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர்
(கொலைக்கள 80-81)

என்று கணவன் தவற்றினை எடுத்துக் கூறுகின்றாள். இதிலிருந்துகோவலன் அக்காலத்திற்கு அப்பாற்பட்ட பெரியோர் போற்றாத ஒழுக்கமுடையவனாகவிருந்தானென்பது தெளிவாகவில்லையா? எனவே மாதவியைப் பிரிந்தமைக்கும் இவன் தடுமாறு முள்ளமே காரணமாயிருந்திருக்க வேண்டும். கோவலன் நற்குணங்கள் அவன் குறைபாடுகளை மறைக்கலாம். ஆனால் அதற்காக அவனிடம் குறைபாடுகளில்லை என்று கூறமுடியாது.

## வீழ்ச்சிக்கு காரணம்

கோவலன் வீழ்ச்சிக்கு யார் காரணம் என்ற கட்டுரையாசிரியர், மேலும் 'கோவலன் வீழ்ச்சிக்குக் காரணம் கண்ணகியல்ல என்று துணிந்து கூறலாம்' என்று கூறியிருக்கிறார். 'கண்ணகி மட்டும் காரணமல்ல' என்று அவர் கூறியிருந்தால் அது வரவேற்கத்தக்க ஒரு கருத்தாக அமைந்திருக்கும். 'சிலம்பின் தலைவி சீதையிலும் ஒரு படி குறைந்தவளா' என்ற கட்டுரையிற் கூறிய கண்ணகியிலுள்ள ஒரு சில குறைபாடுகளும், இக் கட்டுரையிற் கூறிய கோவலனின் குறைபாடுகளும், ஊழ்வினையும், சமுதாய நிலையும் ஒன்று சேர்ந்து கோவலன் வீழ்ச்சிக்குக் காரணமாயின என்றுதான் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விளுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

கண்ணன்,
புதுவட்டகொடை

கே: என்னை ஒரு பணக்கார வீட்டுப் பெண் காதலிக்கிறுள். அவளை நான் காதலிக்கலாமா?

ப: காதலிக்கலாம். காதலுக்குத்தான் கண்ணில்லையே! பணக்கார வீடா இல்லையா என்பது காதலுக்கு எப்படித் தெரியும்?

கே: ஆண்கள் பொதுவாக எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?

ப: காதல் செய்து களைப்படைந்துவிட்டால் கல்யாணம் செய்து கொள்ளலாம்.

கே: பணக்காரர்கள் ஏழையை போல் நடிக்கிருர்களே, அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஏழை பணக்காரனைப் போல பாசாங்கு செய்யும் போது, பணக்காரன் ஏழையைப் போல நடிப்பதில் என்ன தவறு?

கே: பணத்திற்கும் பண்பிற்கும் உள்ள தொடர்பு என்ன?

ப: பண்பு உள்ளத்தையொட்டியது. உள்ளம் பணத்தால் பாதிக்கக் கூடியது. எனவே பண்பு பணத்தால் பாதிக்கும்.

வெ. சுப்பிரமணியம்,
கொட்டாஞ்சேனை

கே: திரு. சி. பி. டி. சில்வா திடீர் என்று பாராளுமன்றத்தில் செய்த திடீர்க் கிளர்ச்சியைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: இக் கிளர்ச்சி திடீரென நடைபெற்றதன்று. முன்னரே திட்டமிடப்பட்டது தான். அதனை வெளியிடாமல் ஓர் இரகசியமாகப் பாதுகாத்து வந்தன பத்திரிகைகள். சுதந்திரக் கட்சி ஒரு 'நெல்லிக்காய் மூடை. பலதரப்பட்ட கருத்துள்ளவர்கள் தற்காலிகமாக அக் கட்சியில் கூடியிருக்கின்றனர். அவர்களில் வலதுசாரிகள் இடதுசாரிகள், நடுவழிசாரிகள், தீவிரவாதிகள், மிதவாதிகள், யு. என். பியை ஆதரிப்பவர்கள், அதனை எதிர்ப்பவர்கள் சந்தர்ப்பவாதிகள், நியாய புத்தியுள்ளவர்கள், அநியாய புத்தி படைத்தவர்கள், வகுப்புவாதிகள், வகுப்புவாதத்தை விரும்பாதவர்கள், முதலாளித்துவத்தை எதிர்ப்பவர்கள், அதனை ஆதரிப்பவர்கள் கொம்யூனிஸ—விரோதிகள், இன்னும் இப்படி பலவிதமான கொள்கையையுடையவர்கள் கூடி நின்றுகூத்தடிக்க பொதுவான ஒரு கொள்கை வேண்டுமென்பதற்காகவே "நடுவழிக் கொள்கை" என்னும் ஒரு புதிய கொள்கையை இக் கட்சி கண்டுபிடித்தது. இக் கொள்கையும் நிலையற்றது. இதனுல் முரண்பட்ட கருத்துள்ளவர்களை எந்நாளும் ஒன்றுகக் கூட்டி வைக்க முடியாது. அவர்கள் பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து சிதறுண்டு கட்சி கரைந்து போவதை யாருமே தடுக்க முடியாது. திரு. சி. பி. டி. சில்வா கட்சியைக் கரைக்கும் வேலையை இப்பொழுது தொடக்கி வைத்துள்ளார். இனி அது தொடர்ந்து செல்லும், இது எனது ஆருடமல்ல. சமுதாய அமைப்பின் கண்ணேட்டத்தில் ஒரு கட்சியின் தன்மையைப் பற்றிய விமர்சனம் இது.

ஃ

ச. சுந்தரேஸ்,
வல்வெட்டித்துறை

கே: இதுவரையும் அரசாங்கத்திற்கு தீவட்டி பிடித்து வந்த திரு. துரையப்பா அவர்ககள், வியாழனன்று கொழும்பில் நின்றும், அன்று நடந்த வாக்கெடுப்பின் போது கலந்துகொள்ளாததின் மர்மமென்ன?

ப: அவர்தான் சுதந்திரக் கட்சியின் நடு வழிக் கொள்கையை சரிவரக் கடைப்பிடிப்பவர். அன்று அவர் இரு பக்கத்திற்கும் வாக்களிக்காமல் நடுவழிக் கொள்கையைக் காப்பதற்காகவே அந்தப் பக்கம் தலைகாட்டாது இருந்துவிட்டார்.

கே: கடந்த வெள்ளி இரவு அம்மாவினது அறி[illegible]ளத்திலும், ஆங்கிலத்திலும் ஒலி பரப்பாகி, தமிழில் மட்டும் ஒலிபரப்பாது மறுநாள் ஒலிபரப்பப்பட்டதேன்?

ப: இத்தகைய பாரபட்சந்தான் அரசாங்கம் தோல்வியடைய காரணமாயிருந்தது. இன்னும் புத்திவரவில்லையே!

ஃ

பழனிவேல்,
புதுவட்டக்கொடை

கே: எனக்கு 31 வயது ஆகிறது. இதற்குள், இருமுறை திருமணம் நடந்து இரண்டு மனைவிகளையும் இழந்துவிட்டேன். 3-வது திருமணம் செய்து கொள்ளலாமா?

ப: செய்துகொள்ளுங்கள்! பொதுத் தேர்தல்களில் இருமுறை போட்டியிட்டு மண் கவ்விய த. பெ. தலைவர் அடுத்து வரும் 3-வது பொதுத் தேர்தலிலும் போட்டியிடப் போகிறாராமே.

ஃ

பா. சோமசுந்தரேஸ்வரன்,
சாவகச்சேரி

கே: அரிசி சாப்பிடுவதை நிறுத்தும் வண்ணம் இந்திய மக்களை வேண்டுகின்றுரே சாத்திரி!

ப: சோறு தின்பதை நிறுத்தி விட்டால் அரிசிப் பஞ்சம் ஏற்படக் காரணமில்லை என்ற இரகசியத்தைக் கண்டு பிடித்திருக்கிறார் சாத்திரியார்.

ஃ

எஸ். ஆசிர்வாதம்,
கொழும்பு—12

கே: மலைநாட்டு தலைவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் காங்கிரசுத்தலைவர்கள் இனியாவது தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து தமிழ் இனத்திற்காக பாடுபட்டாலென்ன?

ப: நல்ல யோசனைதான்— ஆனால் செய்யமாட்டார்கள். [illegible] மையை இழந்து வெறும் தொழிற் சங்கங்களாகி விட்டன. அந்தத் தலைவர்களும் அரசியற் கட்சிகளில் சேராமல் தொழிற் சங்கத் தலைவர்களாகவே இருப்பதில் பலவகையில் நன்மையுண்டு என்று கருதுகிறார்கள் போலும்.

ஃ

முத்துக்குமாரசாமி, காவத்தை

கே: இலங்கை இந்தியப் பிரச்சினை பற்றி முடிவு செய்த பின்னர் இப்போது இந்தியாவிலும் இலங்கையிலும் எதிர்ப்புகள் பெருகி வருகின்றனவே. இந்த திர்ப்பின் முடிவு எப்படியிருக்கும்?

ப: எதிர்ப்பு வலுத்தால் ஒப்பந்தம்வலுவிழந்துவிடும். ஒப்பந்தந்துக்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவே, அரியணை உரையில் அதற்கு முதலிடம் கொடுத்தார் பிரதமர். அரியணை உரையைப் பாராளுமன்றம் திருத்தி விட்டதால், ஒப்பந்தத்துக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. எனவே ஒப்பந்தம் இப்பொழுது உயிரற்ற சடலம்.

ஃ

எம். எம். மர்ஜினு,
கிண்ணியா—9

கே: முன்னர் இருமுறை அரைமந்திரிப் பதவியைப் பெற முயற்சித்துத் தோல்வி கண்ட போது, தனக்கு அப்பதவியை அளித்தார்கள், நான்தான் பெற மறுத்துவிட்டேன் என்று கூறிய மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது, இன்று அப்பதவியை "மறுக்காது' ஏற்றுக் கொண்டதன் காரணம் என்ன?

ப: அவர் என்றுமே "மந்திரி" பதவிக்கு ஆசைப்பட்டவரல்ல என்பது-மறு நாள் பாராளுமன்றத்தில் வீழ்ச்சியடையப் போகும் அரசாங்கத்தில் முதல் நாளன்று உதவி மந்திரிப்பதவி ஏற்றுக் கொண்டதிலிருந்து தெரியவில்லையா? நீடித்து நிலைக்கும் அரசாங்கமாக இருந்திருந்தால் அவர் அப் பதவியை ஏற்றிருக்கமாட்டார்.

ஃ

ஏ. வி. சின்னா,
போமண்ட் எஸ்டேட்

கே: இங்குள்ள இந்தியர்கள் எல்லோரும் தாயகம் திரும்பி விட்டால் அரசாங்கத்துக்கு என்ன பலன் கிடைக்கும்?

ப: ஒருபலனும் கிடைக்காது. ஏனெனில் இங்கு இந்தியர்கள் (டி. ஆர். பி. பெற்றவர்கள்) சுமார் 28,000 பேர்கள்தான் இருக்கின்றனர்.

ஃ

தங்கவேல், வேவள்ளி

கே: காதல் என்பது ஒரு மாங்கொட்டை அதை அளவோடு சுவைத்தால் இன்பம் தரும். (சுவை தரும்) அல்லது நறுக்கென்று கடித்தால் பல்தான் உடையும் என்று யாரோ ஒரு அறிஞர் கூறியிருக்கிறுர்...

ப: அப்படியா? அந்த உபதேசத்தை நீங்களே கடைப்பிடித்து உண்மையை அறியலாமே!

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டக்கொடை

கே: அரியணை உரை வாக்கெடுப்பில் ஒரு நியமன எம். பி. இருபக்கமும் வாக்களிக்காமல் நடுநிலைமை வகித்த மர்மம் என்ன?

ப: பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும்......

ஃ

சின்னச்சாமி, பலாங்கொடை

கே: இலங்கை ஜனநாயக நாடாக இருந்தும் சர்வாதிகார ஆட்சி நடத்த நினைக்கிறதே ஏன்?

ப: ஜனநாயகத்தில் எத்தனையோ தினுசு—சர்வாதிகாரத்தில் எத்தனையோ ரகம். இங்குள்ள ஜனநாயகம் எந்நேரத்திலும் எளிதில் சர்வாதிகாரமாக மாறக் கூடியதே. ஆகையால்தான் சர்வாதிகாரம பற்றி நினைக்கின்றனர்.

### பிக்கோபதேசம்

பிக்குகளின் உபதேசங்களை மக்கள் கேட்டு நடந்தால் தவறுகள் எதுவுமே நடைபெறுது.
உதவி அமைச்சர்

—சமரசிங்கா

நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை. 1956ம் ஆண்டு முதல் சிங்கள மக்களும் தலைவர்களும் பிக்குகளின் உபதேசங்களையே பின் பற்றினர், அது மட்டுமல்ல உதவி அமைச்சரின் அரசாங்கத்தையும் வீழ்த்த அதே பிக்குகள் தானே உபதேசித்தனராம்.........!

### பிரதமருக்கு

அடுத்த பொதுத் தேர்தலில் பிக்குகளும் போட்டியிடுவர்?

—செய்தி


அப்படியானுல் அடுத்த பிரதமர் ஒரு பிக்குணியாக இருப்பாரோ?

### உபதேசம் உனக்கல்ல

தோட்டத் தொழிலாளர்களுக்குவிசேஷ வாழ்க்கைப்படி ரூ 17-50 வழங்கப்பட வேண்டும்.

—இ. தொ. க. பிரமுகர்

இது தொழிலாளர்களுக்கான உபதேசமே தவிர தலைவர்களுக்கு அல்ல. ஏனெனில், தலைவர்களின்




சொந்தத் தொழிலக ஊழியர்களுக்கேஇந்த விசேட வாழ்க்கைப்படி அளிக்கப் படுவதில்லையே!

### விட்டால் ஆபத்து!

அரசாங்கம் வீழ்ந்தமைக்காக நாங்கள் கண்ணீர் விடப்போவதில்லை.

—எட்மண்ட்

அவர்கள் கண்ணீர் விட்டாலும், கண்ணீரும் செந்நீராக விருக்கும் போலும்!

### வேண்டிய சக்திகள்

முற்போக்கு சக்திகளுக்கு எதிராக அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் பிற்போக்குச் சக்திகள் போராடத் தொடங்கி விட்டன.

—ஒரு கொம்யூனிஸ்டு

மாஸ்கோவுக்கோ அல்லது செஞ்சீனுவுக்கோ உடனடியாகத் தந்தி கொடுத்து 'வேண்டிய சக்தி'களைத் திரட்டிக் கொள்ள வேண்டும்,என்று மறை முகமாகக் கூறுகிறுர் போலும்!

### நிலையா உண்மை

கொம்யூனிச வரலாற்றில் குருஷ்சேவின் பெயரையே அழித்து விடுவதற்கான முயற்சிகளை புதிய ருஷ்ய அரசாங்கம் எடுத்து வருகிறது.

—செய்தி

கொம்யூனிச தலைமை, கொம்யூனிச சித்தாந்தம் சகலதுமே அநித்தியம் என்பதை இந் நடவடிக்கை உலகத்துக்கு நன்கு அறிவுறுத்துகிறது.

### எச்சரிக்கை

உலக ஜனத் தொகை வருடா வருடம் ஆறரைக் கோடி வீதம் அதிகரிக்கிறது.

—செய்தி

ஆகாய வெளி மண்டலங்களில் விரைவில் குடியேற்றம் ஆரம்பித்தாக வேண்டு மென்பதையே இச்செய்தி அறிவுறுத்துகின்றது.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறந்து வந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி மறைந்தது ஏன்?

கடந்த ஆகஸ்டு மாதம் வெளியிடப்பட்ட ஒரு இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தலைத் தொடர்ந்து பல வர்த்தக நிலையங்கள் தம்மிடம் கடமையாற்றிய சிங்களவரல்லாதாருக்கு வேலை நீக்க முன்னறிவித்தல்களைக் கொடுத்திருந்தன. சில வர்த்தக நிலையங்களில் சிங்களவரல்லாதார் பலர் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டுமுள்ளனர். இந்தக் கட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய வம்சாவழியினரும் மலாயர்களுமாவர்.

இவ்வாரம் வெளியான ஒரு அறிக்கையில் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தனது முன்னைய முடிவை நிறுத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் இந்திய கடவுச் சீட்டு அல்லது விசா வைத்திருப்பவர்களான இலங்கையரல்லாத வர்த்தக ஊழியர்கள் குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே முன்னைய (ஆகஸ்ட் 27ம் திகதிய) அறிக்கையின் பிரகாரம் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்ட வர்த்தக ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டியது வர்த்தக நிலையங்களின் தவிர்க்க முடியாத கடமையாகும். வெளியேற்றப்பட்ட ஊழியர்களுக்கு வேலை வழங்குவோம் என்று வெறுமனே கூறிவிட்டால் மட்டும் போதாது; வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு உடன் வேலை வழங்க வேண்டும். இது சரியாக அமுல் நடத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு மொழி வழித் தொழிற் சங்கக் கூட்டணியினது என்பதையும் நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

### தமிழரசாரின் தனித்துவம்

அரியணை உரைமீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்குச் சாதகமான முறையில் நடந்துகொள்ளும் வண்ணம் அமைச்சர்கள் சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் கேட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. அரசாங்கத்திற்குச் சாதகமாக வாக்களிக்காவிட்டாலும், நடுநிலை வகிக்கும் வண்ணம் சில அமைச்சர்கள் தமிழரசுத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்களாம். நடுநிலை வகிக்க விரும்பாவிட்டால்; ஒரு சில தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையாவது வாக்களிப்பில் கலந்து கொள்ளாது வெளியில் அனுப்பும் வண்ணம் கேட்டனராம்.

மேலும் அரசாங்கத்திற்குச் சாதகமான முறையில் நடந்துகொண்டால் சில சலுகைகள் வழங்குவதாகவும் கூறினார்களாம் அமைச்சர்கள். அரசாங்கத்தின் சகல கோரிக்கைகளையும் தமிழரசுத் தலைவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். இதனால் கூட்டரசாங்கத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிட்டது. 1960ம் ஆண்டு மார்ச் மாதமும் இப்படியொரு சந்தர்ப்பம் தமிழரசுக் கட்சிக்குக் கிட்டியது. அப்பொழுதும் இதே முறையைக் கையாண்டு ஐ. தே. கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்தது தமிழரசுக் கட்சி.

தமிழினத்துக்கு விரோதமான சக்திகளை முறியடிப்பது தமிழ்பேசும் மக்களின் தலையாய கடமை. இதையே தமிழரசுக் கட்சி செய்துள்ளது. இரண்டு தடவைகள் இந்நாட்டின் தனிச் சிங்கள ஏகாதிபத்திய அரசை முறியடித்த பெருமை தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ளது. இதனால் ஒரு உண்மை புலனாகிறது; தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுக்கும் எந்த சிங்கள அரசும் நீண்டகாலம் பதவியில் நிலைத்திருக்க முடியாது. எனவே சகல சிங்களக் கட்சிகளுக்கும் ஒரு உண்மையைக் கூறிவைக்க விரும்புகிறோம். அடுத்து இந்த நாட்டில் ஒரு நிலையான அரசாங்கத்தை உருவாக்க விரும்பினால்; இநத நாட்டின் சிறுபான்மைத் தேசிய இன மக்களான தமிழ்பேசும் மக்களின் அபகரித்த உரிமைகள் அனைத்தையும் உடன் வழங்குகள். அவர்களுக்கு அரசியற் சமத்துவம் கொடுத்து நாட்டில் நல்லதொரு சமத்துவ சமதர்ம அரசை உருவாக்குங்கள். நாட்டில் நல்ல அரசு உருவாக இது தவிர்க்க முடியாதது.

### யாழ்ப்பாண மக்களின் கவனத்துக்கு

அரியணை உரைமீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணப்பிரதிநிதி திரு. அல்பிறட் துரையப்பா யாழ்ப்பாணத்திலிருந்து 3ம்

### வார சாரம்

திகதி பிற்பகல் பறந்துவந்தார் தலைநகருக்கு. பறந்து வந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி பாராளுமன்றத்தைஎட்டியும் பார்க்கவில்லை. அவரது வாக்கின்றியே கூட்டரசாங்கம் முறியடிக்கப்பட்டு விட்டது.

ஆனால், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர் யாழ்ப்பாணம் வைத்திஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரை கழ்த்துகையில் தமிழினத்துக்கு பாதகமான சகலவற்றையும் எதிர்ப்பது தமது கடமையென்றும், அக் கடமையில் தான் தவறவில்லையென்றும் கூறியுள்ளார்.

அரியணை உரையில் குறிப்பிடப்பட்டிருந்த சகல விடயங்களும் தமிழ்பேசும் மக்களுக்கு விரோதமானது என்பதை நியாயபுத்தி படைத்த சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மேலும், அரியணை உரைக்கு பாதகமான முறையில் தமிழ்பேசும் பிரதிநிதிகள் அனைவரும் வாக்களித்துள்ளார்கள். இந்த நிலையில் பறந்துவந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி மறைந்து நின்றதின் மூலம் தமது தலையாய கடமையில் நின்று தவறிவிட்டார். யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளரின் எண்ணத்தையும் பிரதிபலிக்கத் தவறிவிட்டார். எனவே யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்களுக்கு இதன் மூலம் ஒரு உண்மையைக் கூறிவைக்க விரும்புகிறோம். கட்டுப்பாடான ஒரு இயக்கத்தின்பிரதிநிதியைத் தெரிவுசெய்யத் தவறியமையால் உங்கள் எண்ணத்தை பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கத்தவறிவிட்டீர்கள் ஆகவே, வருங்காலத்திலும் இத்தகைய தவறை இழைக்காது பார்த்துக்கொள்ளுங்கள். இது உங்கள் கடமையும் கூட.

### கண்டம் தப்பியது

அரியணை உரை மீதான வாக்கெடுப்பில் கூட்டரசாங்கம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் சர்வாதிகாரச் சாயல் ஓரளவு தென்பட்டது. அடுத்து என்ன நடக்கும் என்பதை எவரும் அறுதியிட்டுக்கூற முடியாத நிலை தென்பட்டது.

எதிர்ப்புக் கூட்டங்கள் ஆதரவுக்கூட்டங்கள் என்று பல நடைபெற்றன தலைநகரில். இடையில் கைக்குண்டுகளும் தலைகாட்டின. எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாககப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இத்தனைக்கும் பின்னர் 17ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படுமென்ற செய்தியை அமைச்சரவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இச்செய்தி வெளியான பின்னரே சனநாயகவாதிகள் மத்தியில் அமைதிதென்பட்டது. நாடு சர்வாதிகாரம் என்ற கண்டத்திலிருந்து தப்பியுள்ளது.

# தேயிலை, றப்பர் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும்

## இ. தொ. கழக மாநாட்டுத் தீர்மானங்கள்

அட்டன், டிச. 10

தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்சமயம் அமுலில் இருந்து வரும் தினச் சம்பள முறைக்குப் பதிலாக மாதச் சம்பள முறை ஏற்படுத்தப்படல் வேண்டும். இன்றைய விலைவாசியுயர்வை சமாளிக்கக் கூடியதாக தேயிலை, இறப்பர் தொழிலாளர்களுக்கு பின்வரும் முறையில் குறைந்தபட்ச மாதச் சம்பளம் கொடுக்கப்படல் வேண்டும்.

| | ஆண் | பெண் | பிள்ளை |
|---|---|---|---|
| தேயிலைத் தொழிலாளர் | 92-00 | 78-00 | 69-00 |
| இறப்பர் ” | 95-00 | 86-00 | 76-00 |

பயிற்சி பெற்ற தொழிலாளர்களாகிய தொழிற்சாலை வேலையாட்கள், கவ்வாத்து வெட்டுபவர்கள், மருந்து அடிப்பவர்கள், தவறணையில் கன்று பயிரிடுபவர்கள், கங்காணி வேலை செய்பவர்கள் ஆகியோருக்கு விசேட சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் ஒரு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இம் மாநாட்டில் மேலும் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்களின் விபரம் வருமாறு:

**இலாபத்தில் ஒரு பங்கு:**

தொழிலாளர்களுக்கு தோட்ட இலாபத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும், தொழிலாளருக்கு இலாபத்தில் எவ்வளவு கொடுக்கப்பட வேண்டுமென நிர்வாகமும், தொழிலாளரும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.

**பென்சனும், நஷ்டஈடும்:**

(அ) வயோதிகர்களுக்கும் சுகவீனத்தால் வேலை செய்ய முடியாதிருப்பவர்களுக்கும் சாதாரணத் தொழிலாளியின் மாதச் சம்பளத்தில் பாதிச் சம்பளம் மாதா மாதம் பென்சனாக வழங்கப்பட வேண்டும்.

(ஆ) 1934ம் ஆண்டின் சம்பள அடிப்படையில் கணிக்கப்பட்ட தொழிலாளர் விபத்து நஷ்ட ஈட்டுச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்.

**குழந்தைச் செல்வம் பிறப்பு சகாயப் பணம்:**

வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேறுபாடின்றி இரண்டு மாதங்களுக்கு பிள்ளைப் பேற்றுக்காக சம்பளத்துடன் கூடிய ஓய்வு கொடுக்கப்பட வேண்டும்.

**வேலை நேரம்:**

(அ) ஒரு வாரத்தில் 40 மணி நேரமே வேலை நேரமாக அமைய வேண்டும்.

(ஆ) பெண்கள் 40 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்வதை தடுப்பதற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும். (பெண்களின் வலிமை, சுகாதாரம், பிள்ளை வளர்ப்பு, வீட்டு சுகாதாரம், குடும்ப வேலைகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்கு இந்நிலையை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது)

(இ) தோட்டங்களில் 'கொந்தராத்' முறையில் வேலை கொடுப்பதை ஒழிப்பதற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

**சுகாதாரம் வீட்டு வசதி:**

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களை ஒரு வீட்டில் வசிக்கச் செய்யக் கூடாது. தோட்டத் தொழிலாளர் (இந்தியர்) சட்டத்தின் 24ம் (1)ம் பிரிவின்படி கணவன், மனைவி, 12 வயதுக்குட்பட்ட ஒரு குழந்தையுடன் கூடிய ஒரு குடும்பத்துக்கு ஒரு வீடு கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) வீடுகள் காற்றோட்ட வசதியுள்ளனவாயும் தரைகள் சிமிந்தியிடப்பட்டனவாயும் இருத்தல் வேண்டும். சட்டப்படி வருடா வருடம் வீடுகள் வெள்ளையடிக்கப்பட வேண்டும்.

(இ) போதிய தண்ணீர் வசதியும், மலசலகூட வசதியும் இருக்க வேண்டும். சட்டப்படி குளிக்கும் வசதியும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

**விடுமுறை தினங்கள்:**

சுதந்திர தினம், மே தினம்," தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி பெரிய வெள்ளி, நத்தார், முகம்மது நபி பிறந்த தினம், றம்ழான், விசாகம் ஆகிய தினங்கள் விடுமுறை தினங்களாக ஆக்கப்படவேண்டும்.

**தொழிற் தகராறுகளும் பிரச்சினைகளும்:**

(அ) தொழிற் தகராறுகளை உடனுக்குடன் தீர்க்கக் கூடியதாக தொழில் அதிகாரிகளுக்குத் தகுந்த அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) வேலை நீக்க உத்தரவுகளை எதிர்த்து தொழில் விசாரணை மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மனுக்களை தாமதமின்றி விசாரணை செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளைத் தொழில் அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

(இ) தொழிலாளர்கள் மீது நிர்வாகம், நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் எழுத்து மூலம் காரணம் காட்டி விளக்கம் கேட்கப்படல் வேண்டும்.

(ஈ) நிர்வாகிகளோ அல்லது தொழில் அதிகாரிகளோ தொழிற் தகராறு பற்றி விசாரணை நடத்தும் சமயங்களில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளிகள் கலந்துகொள்ளும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

(உ) ஒரு தொழிலாளிமீது நிர்வாகம், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்போது அத்தொழிலாளியின் குடும்பத்திலுள்ள இதர தொழிலாளர்கள் தண்டிக்கப்படுவதையும் நீதிமன்றங்களில் தண்டனைக்குள்ளாகும் தொழிலாளர்கள்மீது நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதையும் நிறுத்த வேண்டும்.

(ஊ) தொழிற் சங்கக் கூட்டங்களையும் வகுப்புகளையும் நடத்துவதற்காகவும் தொழிலாளர்களுடன் நேரில் தொடர்பு கொள்ளுவதற்காகவும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் ஊழியர்களும் நிர்வாகத்தின் அனுமதியின்றி தோட்டத்திற்குள் போய் வருவதற்கு உரிமை அளிக்கக் கூடியதாகத் தொழில் அலுவலகங்கள் அடையாளச் சீட்டுகள் வழங்கல் வேண்டும். இச் சீட்டுகளைத் தோட்ட நிர்வாகம் தோட்டங்களில் பிரவேசிப்பதற்குப் போதிய அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு. என். பி.யுள் நுழைய பிலிப் முயற்சி

## 'அவர் மார்க்சீயத்தை கைவிடவில்லையே!'—ஜே. ஆர்.

"திரு. பிலிப் குணவர்தன யு. என். பி. யில் சேர முயற்சி செய்கிறார். திரு. டட்லி அதை ஆதரித்தாலும், தான் ஒரு மார்க்சீய வாதியல்ல என்று திரு. பிலிப் கூறுததால் அவரைச் சேர்ப்பது ஆபத்தாகும் என்று திரு. ஜே. ஆர். கூறுகிறாராம்"

'கம்கருவா' என்னும் சிங்கள வாரப் பத்திரிகை 5-11-64ந் திகதி இதழில் எழுதுவதாவது:—

'யு. என். பி யில் சேருவதற்கு திரு பிலிப் குணவர்தன பேச்சு வார்த்தை நடத்துவது அரசியல் அரங்கில் புதிய சம்பவமாகும். பொதுத் தேர்தல் மூலம் தான் தனியாக வெற்றி பெற்று பிரதம மந்திரியாக முடியுமென்ற நம்பிக்கை அவருக்குக் கிடையாது. புரட்சி செய்வதற்குத் தனது தலைமையில் தொழிலாளர், விவசாயிகள் திரளவில்லை. என்பது அவருக்குத் தெரியும்.

அரசாங்கத்துள் நுழைந்து பிரதம மந்திரிப் பதவியைக் கைப்பற்ற என் எம். பெரேராவுக்கு முயற்சி செய்ய முடியுமென்றால் யு. என். பியில் நுழைந்து தமது கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு, சந்தர்ப்பம் பார்த்து பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொள்ள திரு. பிலிப்புக்கு ஏன் முடியாது? இது பற்றி தமது சீடர்களுக்கு அவர் விஷயங்களை விளக்கிக் கூறியுள்ளாராம்.

திரு. பிலிப்பைச் சேர்த்துக் கொள்வதை யு. என். பியில் ஒரு கோஷ்டியினர் ஆதரிக்கின்றனரெனினும் ஒரு கோஷ்டியினர் எதிர்க்கின்றனர். இந்தத் திட்டத்துக்குத் திரு. டட்லி சம்மதமாம்.

திரு. பிலிப், தான் ஒரு மார்க்சியவாதி அல்ல என்று கூறிருப்பதால் அவரைப் எடுப்பது ஆபத்து என்று திரு. ஜே ஆர். ஜயவர்தன கூறுகிறாராம்.

யு. என். பி. வாலிபர்களைக் கொண்ட ஒரு தொண்டர் படை அமைக்கப்படுமென்றும் அதற்குத் திரு. ராஜரத்ன தலைமை தாங்குவார் என்றும் கூறப்படுகிறது,

### தேர்தல் பிரச்சினைகள்

'அடுத்துவரும் பொதுத் தேர்தலில் தற்போதைய சுதந்திரக் கட்சி எம். பி களில் யார் யாரை மீண்டும் கட்சி வேட்பாளர்களாக நிறுத்துவதென்று பிரதம மந்திரி ஏற்கனவே தீர்மானித்துவிட்டாரென்றும் தெரிகிறது.

சமசமாஜக் கட்சி 25 தொகுதிகளுக்கு மேல் போட்டியிடாதென டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பிரதமருக்குத் தெரிவித்துள்ளாராம் கொம்யூனிஸ்ட், சமசமாஜ கட்சிகளுடன் சுதந்திரக் கட்சி போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்று தெரிகிறது.

## சிங்கள இதழ்களில் . . .

கூட்டரசாங்கத்தின் 14 அம்சக் கோரிக்கை, பௌத்தத்தை அரசாங்க மதமாக்குதல், இலங்கை - இந்திய பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் என்ற பிரச்சினைகளை முன்வைத்து சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டியிடுமாம்" இவ்வாறு ஒரு செய்தியை 8-12-64ந் திகதி 'தவஸ' பத்திரிகை பிரசுரித்துள்ளது.

### சுப தினங்கள்

"இரணம" என்னும் சிங்களச் சோதிடப் பத்திரிகையின் ஆசிரியர் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு மே மாதம் முடியுமுன்பு சுபதினம் கிடையாதென்று கூறுகிறார்.

ஆயினும் அதுவரை தேர்தலை ஒத்திப் போட முடியாத நிலைமை தோன்றியிருப்பதால் அவர் மிகச் சிரமப்பட்டு கீழ்க் காணும் சுப தினங்களைக் கணித்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைத்தல்: 1964 டிஸம்பர் 23-ந் திகதி.

அபேட்சப பத்திரம் தாக்கல் செய்தல்:— 1965 ஜனவரி 20-ந் திகதி. தேர்தல் நடத்துதல்:— மார்ச் 24-ந் திகதி. புதிய பாராளுமன்றத்தைக் கூட்டி அரியணை உரை நிகழ்த்துதல்:— 1965 ஏப்ரல் 7-ந் திகதி காலை 10.02 மணி.

—தவஸ (8-12-64)

### தென்னைச் செய்கைக்கு காணிப் பங்கீடு

வவுனியா மாவட்டத்தில் தென்னைச் செய்கைக்காக 280 துண்டுகள் பங்கீடு செய்யப்பட விருக்கின்றன. தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் மேட்டு நிலமும் ஒரு ஏக்கர் வயல் நிலமும் அளிக்கப் படும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட அதிபரால் டிசம்பர் 24ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப் படும். இதற்கான முழு விபரங்களையும் 23-11-64ல் யாழ்ப்பாணம் சச்சேரியிலிருந்து யாழ் மாவட்ட நிலைய அதிபர் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் காணலாம்.

### இதற்காகவா! வசதிக் கட்டணம்?

விவேகானந்த மாவித்தியாலய மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வசதிக் கட்டணத்திலிருந்து கலைவிழாச் செலவு, மந்திரி வரவேற்புச் செலவு, அச்சுக் கூலி, ஆசிரியர் பிரயாணச் செலவு, பெற்றோர் ஆசிரியர் சங்கச் செலவு ஆகிய செலவுகள் செய்யப்பட்டிருந்ததென கணக்குக் காட்டப் பட்டதாக அறியப்படுகிறது. கல்வித் திணைக்களக் கணக்காய்வாளரின் விசாரணைக்குப் பின் மேற்படி செலவுகளுக்கான தொகை ரூபா 1807 சதம் 33 எனவும் இந்தத் தொகை சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவுக்கடிதம் சென்ற 5-12-64ம் திகதி பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

## சூதறியாத் தொழிலாளர் சமசமாஜிகளின் சூழ்ச்சிக்குப் பலி

திருகோணமலையில் ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆயுதந்தாங்கிய பொலீசார் திருமலைத் தெருக்களினூடாக எப்போதும் ரோந்து சுற்றிக் கொண்டே திரிகின்றனர்.

சிற்சில இடங்களில் கைக்குண்டுகளும் வீசப்பட்டுள்ளதாம். சில தமிழ்த் தொழிலாளர்களின் இல்லங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலை உருவாவதற்குக் காரணகர்த்தாக்கள் இங்குள்ள சமசமாஜக் கட்சி ஆதரவாளர்களே என்று கூறப்படுகிறது.

தமிழ் பேசும் தொழிலாளர்களை துறைமுகத்துள் பிரவேசிக்க விடக்கூடாது; துறைமுகத் தொழில் பூராவையும் தாங்களே கைப்பற்றிவிடவேண்டும் என்று சிங்கள வகுப்புவாத வெறியர்கள் அந்தரங்கமாகச் செய்து வரும் சூழ்ச்சியின் பிரதிபலிப்பே இன்று திருகோணமலைத் துறை முகத்தில் எதுவித தொழிலும் நடைபெறாமல் ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது.

சில தமிழ் பேசும் தொழிலாளர்களை துறைமுக வேலைகளுக்கு அனுமதிக்கக் கூடாதென்று சமசமாஜக் கட்சி ஆதிக்கத்திலுள்ள ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்கம் 'சத்தியாக்கிரகம்' என்ற போர்வையில் ஏதோ ஒரு வகைப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறது.

### கிழக்குத் தபால்

தமிழ் தொழிலாளர்களின் வயிற்றில் அடிப்பதையே கருத்தாகக் கொண்டு சமசமாஜிகள் திட்டமிட்டுச் செய்து வரும் இந்தச் சதிச் செயலைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு சில தமிழ்த் தொழிலாளர்களும் இந்த அர்த்தமற்ற போராட்டத்துக்கு ஆதரவு கொடுப்பது வியப்பையும் வேதனையையும் கொடுப்பதாகவுள்ளது.

### அவர்களின் கோரிக்கை

ஒரு இஸ்லாமிய தொழிலாளரை வேலை நீக்கம் செய்து விட்டால் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவதாக சமசமாஜக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள திருகோணமலைத் துறைமுகத்தில் சத்தியாக்கிரகம் செய்யும் சிங்களத் தொழிலாளர்கள் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இச்சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் சிங்கள முதலாளிகளும், திருகோணமலையை அடுத்துள்ள பகுதிகளில் குடியேறியிருக்கும் சிங்களவர்களும் என்றே தெரியவருகிறது.

சத்தியாக்கிரகம் என்ற பெயரில் தமிழ் பேசும் தொழிலாளர்களை ஒழித்துக் கட்டவே சிங்களத் தொழிலாளர்கள் முயலுகின்றனர் என்ற உண்மை புலப்பட்டு விட்டமையினால், இருநூறுக்கும் அதிகமான தமிழ்த் தொழிலாளர்கள் சமசமாஜக் கட்சி ஆதிக்கத்திலுள்ள தொழிற் சங்கத்திலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் கூறப்படுகிறது.

### கட்சிக் கிளைகள்

மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்குடா, கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய ஆறு தொகுதிகளிலுமுள்ள கிராமங்களனைத்திலும் தமிழரசுக் கட்சிக் கிளைகளை இம் மாத இறுதிக்குள் ஆரம்பிப்பதென கடந்த ஞாயிற்றுக்கிழமை 6-ம் திகதி மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)




இனும்!
'குருண்டிக்' ரேடியோ செட் ஒன்றையும் மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் இலவசமாக பெறுங்கள்.

அத்துடன்
பெருவாரியாக பாட்டரிகளை வாங்கும் விற்பனையாளர்களுக்கும
பிரத்தியேக பரிசுகள்




"குருண்டிக் ரேடியோ பாட்டரி சீட்டிழுப்பு"

1-12-64 தொடக்கம் இந்த சீட்டிழுப்பு திகதி முடிவடையும் வரை "குருண்டிக்" ரேடியோ பாட்டரி ஒன்றை வாங்கும் ஒவ்வொரு வாடிக்கைக் காரர்களுக்கும் ஒரு தொடர் இலக்கமிடப்பட்ட கூப்பன் இலவசமாக வழங்கப்படும்.

நீங்கள் கொள் முதல் செய்யும் நேரத்தில் உங்கள் விற்பனையாளரிடமிருந்து இந்த இலவச கூப்பனை தயவு செய்து வற்புறுத்தி பெற்று அவைகளைப் பத்திரமாக உங்களுடன் வைத்திருங்கள்.

முடிவு திகதிக்குப் பின் உங்கள் பரிசுகளைக் கோருவதற்கு வசதியாக, அதிர்ஷ்ட இலக்கங்களைக் கொண்ட கூப்பன்களின் விபரங்களை பத்திரிகை வாயிலாக பிரசுரிக்கப்படும்.

சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோடு - தெற்கு,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஞ்சு மனதில்..........

# பேய் பிசாசு பூதம்

## .........புகுவது கூடாது

எத்தகைய சுவையானாலும் குழந்தைகள் அத்தகைய சுவையை அனுபவித்து அறிவதனால் சுய சிந்தனை மலர்வதாக மேலை நாட்டு அறிஞர்கள் கூறுகிறார்கள். இக் கருத்து ஓரளவு நலம் தருவதாயினும் பெரும்பாலும் தீங்கு பயக்கலாம்.

இம்முறை ஒரு விஷப்பரீட்சையும் ஆகும்.

'சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது' என்பது முதுமொழி. நாம் கடந்த வாரம்சுட்டிக்காட்டிய மேல் நாட்டு அறிஞரின் கூற்றுப்படி நெருப்பைத் தொட்டு அனுபவித்துப் பார்க்கக் குழந்தையை அனுமதித்தால், சூட்டினால் ஏற்படும் பயம் அக் குழந்தையை எந்தக் காலத்திலும் வாட்டி வதைக்கவே செய்யும். தீயை அக்குழந்தை எந்தக் காலத்திலும் அணுக மாட்டாது.

'சூட்டின் தன்மையை ஓரளவு காட்டி குழந்தையை எச்சரிப்பது அனுபவ ரீதியாக தாய்மாருக்கு இயற்கையாக ஏற்படுகிறது' என்று வேறோர் அறிஞர் இந்தச் சூட்டுப் பிரச்சினையை முடிவாக்குகிறார்.

சின்னஞ் சிறு குழந்தைகளை நாம் நீர்நிலையங்களுக்கு அருகே அழைத்துச் செல்லவும் அஞ்சுகிறோம். தண்ணீரில் விளையாட குழந்தைகளுக்கு அவா அதிகம். மேலைநாட்டவர்கள் தங்கள் பச்சிளம் பாலகர்களை முரட்டுத்தனமான அலைகளைக் கொண்ட கடலிலே வீசி எறிந்து, அவர்களுக்கு இளமையிலேயே நீச்சற் பயிற்சிக்கு அரிச்சுவடி கற்றுத்தருகின்றனர். அத்துடன் பயமின்மையையும் ஊட்டுகின்றனர்.

பெரியவர்களாகிய நாமே பலவிடயங்களுக்காகப் பயப்படுகிறோம். பொதுவாக துணிவு என்பது நம்மிடம் துளி கூட இல்லை என்றேகூறலாம். நாம் எவற்றிற்கெல்லாம் பயப்படுகின்றோமோ, அவற்றுக்கெல்லாம் நமது வாரிசுகளையும் பயப்பட வைக்கிறோம்.

பேய், பிசாசு, பூதம் போன்றவற்றைத் துணைக்கழைத்து பிஞ்சு உள்ளங்களில் பயப் பிராந்தியைப் புகுத்திவிடுகிறோம். சிறிசுகளைக் குழப்படி செய்யாதிருக்க இந்தக் கேவலமான முறையைக் கையாளுகிறோம். இதனால் பிஞ்சு மனத்தில் பெரும் பயங்கரம் தோன்றுவதால், மன வளர்ச்சி குறுகி, எதையும் ஆராயும் தன்மை மங்கி, மருட்சியும் வெருட்சியும் தலையெடுக்கின்றன.

எதையும் ஆராய்ந்தறிய ஆசைப்படும் குழந்தைஎழுப்பும் வினாக்களை, அலுப்புத் தன்மையினாலும், வேலைத் தொல்லைகளினாலும் பெரியவர்கள் தட்டிக் கழித்து பதிலளியாது விடுவதுடன், மிரட்டியடிக்கின்றனர். பேய், பிசாசு, பூதம் முதலியவற்றை ஏவி குழந்தைகளின் பிஞ்சு மனத்தை பாழடிக்கின்றனர்.

'பதில் சொல்லும் பக்குவம்' என்பது பற்றி அடுத்தவாரம் ஆராய்வோம்.

**சின்னஞ் சிறிசுகள்**

**'கமல மலர்'**

**கேட்கும் கேள்விகள்**

## சமையற் கலை

### குளிர் பானம்

**1. தோடம்பழ பானகம்**

தேவையான பொருட்கள்:

தோடம் பழங்கள் 12
மேற்படி பழங்கள் இரண்டின் வெண்ணிற தோல்.
சீனி — ¾ இறுத்தல்.

செய்முறை:

சீனியை ஒரு பைந்து நீரில் கரைத்து தோடம்பழத்தின் வெண்ணிறத் தோலை அதிலிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். சீனி கரைந்து பாகு கொதிக்கும்வரை நன்றாக துளாவிக்கொள்ளவும். ஒருமுறை கொதித்தபின்னர் இறக்கி ஆற வைக்கவும்.

பாகிலே மிதக்கும் தோலை அகற்றிவிட்டு தோடம்பழங்களைப் பிழிந்து சாறெடுத்து இரண்டு பைந்து தண்ணீருடன் கலந்து வடித்துக் கொண்டு பாகுடன் கலக்கவும்.

தேவையான போது இக் கலவையை அளவுக்கு எடுத்து, ஐஸ் கட்டியும் சேர்த்துப் பாவிக்கலாம்.

**2 அன்னாசிப்பழ சர்பத்**

தேவையான பொருட்கள்:

அன்னாசிப்பழம் — 1
சீனி — 1 இறுத்தல்
எலுமிச்சம்பழம் — 2.

செய்முறை:

அன்னாசிப்பழத்தின் தோலை நீக்கி சிறு சிறுதுண்டுகளாகநறுக்கிக்கொள்ளவும். சீனியை ஒரு பைந்து தண்ணீரில் கலந்து அடுப்பில் வைத்து பாகாக் காய்ச்சி எடுக்கவும்.

இச் சீனிப்பாகை அன்னாசித்துண்டுகளின்மீது ஊற்றி, இருமணிநேரம் ஊறவைத்து பின்னர் இரு பைந்து நீருடன் கலந்து ஒரு சாடியில் வடித்து எடுத்து வைத்துக் கொண்டுதேவையான அளவு ஐஸ் சேர்த்து பரிமாறலாம்.

—செல்வி நளினி நாதன்

# இன்பம்..!

**நிமிடக் கதை**

விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள் கௌரி. தாய் தடுத்தும், தமக்கை சமாதானம் பண்ணியும் அவளுடைய அழுகையை நிறுத்த முடியவில்லை.

கோபாலன் சென்ற திக்கையே பார்த்து ஏங்கி அழுது கொண்டிருந்தான். பரீட்சைக்குப் படிப்பவன் போல் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு திறந்திருந்த கதவினூடாக கௌரியின் அழகையே இரசித்துக் கொண்டிருந்தேன்.

அவள் அழுகையை நிறுத்த தங்களால் இயன்றவரை முயற்சித்துத்தோல்வி கண்ட என் அத்தையும், மைத்துனியும் (கௌரியின் தாயும் தமக்கையும்) சென்ற பின்னர் நான் மெதுவாக எழுந்துசென்று கௌரியை அணுகினேன். இயற்கையிலேயே சிவப்பான அவளுடைய முகத்தில் கோபமும் துக்கமும் மேலும் செம்மையைப் படரவிட்டு அவளுடைய அழகை மேம்படுத்தின. மெதுவாக அவளுடைய முகத்தை என் முகம் நெருங்கியது.

'பளார்'

ஆமாம், எனது கன்னத்தில் அவளுடைய கை விளையாடி விட்டது. என்னையும் மீறிய வெறி என்னை உந்த, அவளுடைய இரு கைகளையும் முரட்டுத் தனமாகப் பிடித்துக் கொண்டு அவளுடைய இரு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டேன்.

தீயை மிதித்தவள் போல் பெரும் கூக்குரலிட்டாள். அத்துடன் என்னுடைய முரட்டுப் பிடியையும் உதறிவிட்டாள்.

அவளுடைய சப்தம் அடுப்படியிலிருக்கும் அத்தைக்குக் கேட்டு விடக்கூடாதே என்பதற்காக கௌரியின் வாயையும் எனது கையினால் மூடிவிட எடுத்த முயற்சியும் பலிக்கவில்லை. எனது கையையும் கடித்து ரணமாக்கி விட்டாள் எவ்வளவுதான் ஆண்மகனானாலும் பெண்ணான கௌரியின் பலத்துக்கு முன்னால் நான் தலை கவிழ வேண்டியிருந்தது. பலம் கொண்ட மட்டும் என்னைத் தாக்கினாள். பீறிட்டுக் கத்தினாள்.

அவளுடைய அவலக்குரல் கேட்டு அத்தையும் மைத்துனியும் அடுப்படியிலிருந்து மீண்டும் ஓடி வருவது தெரிந்ததும் என் சட்டைப் பைக்குள்ளிருந்த அந்தப்பொருளை எடுத்து அவள் முன் போட்டு விட்டு ஓடிச் சென்று அறையுள் ஒளிந்துகொண்டேன்.

'ஏண்டி, கோபாலன் கொண்டு போயிட்டான் என்று கத்தினையே; இங்கே இருக்குதே உன் பொம்மை!' என்று அத்தை நான் போட்டுவிட்டு வந்த பொம்மையை எடுத்துக் கொடுத்தாள்.

ஐந்து வயதான கௌரி வைத்து விளையாடிய பொம்மையைப் பறித்து என்னிடம் தந்துவிட்டு அவளுடைய அண்ணன் கோபால் ஓடி விட்டான். அவளைக் கிண்டிவிட்டு அழவைத்து வேடிக்கை பார்ப்பதில் கோபாலும் நானும் தினசரி அடையும் இன்பத்துக்கு அளவேது?

—விஜயா.

# மங்கையர் சங்கம்

**கூந்தல் அழகு**

## சிகைக்காய் பரிமள தூள்

பெண்களின் அழகை மேம்படுத்திக் காட்டுவது அவர்களின் கரிய கூந்தலாகும். அக் கூந்தலின் கருமை குன்றாமலும், கவர்ச்சி குறையாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

கூந்தலுக்கு நாம் சவர்க்காரம் தேய்க்கிறோம். சவர்க்காரங்களில் சேர்க்கப்படும் சில திராவகங்கள் கூந்தலின் தன்மையைக் கெடுத்துவிடுகின்றன. இதனால் விரைவில் நரை ஏற்படவும், மயிர் கொட்டுப்படவும் ஏதுவாகிறது. மயிரின் உயிர்ச் சத்துக்கள் நீங்கி வலுவிழந்துவிடுகின்றன.

வாரம் ஒரு முறை முழுகும்பொழுது பெண்கள் தங்கள் கூந்தலிலுள்ள அழுக்கை நீக்க கீழ்க்கூறப்பட்ட பரிமள பொடியை உபயோகித்தல் நலம்.

### சீயக்காய் பரிமள தூள்

தேவையானபொருட்கள்:

சீயக்காய் 1 இறுத்தல்
கஸ்தூரிமஞ்சள் கால் "
பச்சைப்பயறு கால் "
பூலாங்கிழங்கு கால் "
எலுமிச்சம்பழம் 20.

செய்முறை:

எலுமிச்சம் பழங்களின் சாற்றுடன் மேலே கூறப்பட்ட பொருட்களைச் சேர்த்து, அளவாகத் தண்ணீரும் சேர்த்து நான்கு நாட்களுக்கு ஊறவைக்கவும். பின்னர் வெய்யிலில் உலர வைத்து இடித்துத் தூளாக்கி வைத்துக்கொள்ளவும். முழுகுவதற்கு முன்னர் வேண்டிய அளவு இப் பொடியை எடுத்து வெந்நீரில் பிசைந்து தலையில் நன்றாகத் தேய்க்கவும்.

—சரசுவதி புருகேசு

### வேறோர் முறை

தேவையான பொருட்கள்:

சிகைக்காய் 1 இறுத்தல்
வெந்தயம் ½ "
பாசிப்பயறு ½ "
நற்சீரகம் ⅛ "
எலுமிச்சம்பழக் கோது
தோடம்பழத்தோல் முதலியவை ½ கொத்து.
கோரைக் கிழங்கு
கிச்சிலிக் கிழங்கு.

செய்முறை:

கோரைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு ஆகியஇரண்டையும் நீக்கி ஏனையவற்றை நன்றாக வெய்யிலில்காயவைத்த பின்னர் கலந்து தூளாக்கி வைத்துக் கொள்ளவும். கிழங்கு இருவகையினையும் உலரவைத்து தனியாகப் பொடியாக்கி தனியாக வைத்துக்கொண்டு முழுகும் பொழுது இரண்டு பொடிகளிலும் சிறிதளவு எடுத்துக் கலந்து தலையில் தேய்த்து முழுகினால் சுகத்துடன் கேசத்தில் பரிமள மணம் சுகந்தமும் வீசும்.

—சிவயோகம் பேரம்பலம்

# மக்கள் குரல்

## எதிர்க்க வேண்டும்

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் எமக்கு வேதனை அளிக்கிறது. மக்களை ஆடுமாடுகளைப் போல் பங்கு போடும் திட்டம் மனிதாபிமானத்துக்கே ஒவ்வாதது. நேரு அவர்கள் இப்பிரச்சினையை இழுத்தடித்ததற்கு அந்தரங்கக் காரணம் ஒன்றிருந்தது. இதை உணராத சாஸ்திரியார் இலங்கை அரசின் மருட்டலுக்குப் பணிந்து பின் வாங்கிவிட்டார். தோல்வி கண்டுவிட்டார்.

இவ்வொப்பந்தத்தை தமிழரசுக் கட்சியும், தமிழக தி. மு. கவும் இணைந்து எதிர்க்க ஆவன செய்ய வேண்டும்.

—சந்திரா-சிவம்,
கொழும்பு—14.

## பஸ் எங்கே போகிறது?

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இப்பகுதிகளினூடாகச் செல்லும் பஸ்களிலுள்ள பெயர்ப்பலகைகளில் தமிழ் எழுத்துக்களை மட்டும் மறைத்து விட்டு சிங்களம் மட்டும் தெரியக்கூடியதாக இட்டுச் செல்வதைப் பார்க்கும் போது வேதனை ஏற்படுகிறது.

ஊரின் பெயர் சிங்களத்தினால் மட்டும் இருப்பதால் 'பஸ்' எந்த ஊருக்குச் செல்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் பிரயாணிகள் கஷ்டப்படுகிறார்கள். அன்றியும் இச்செயல் இனத்து வேசத்தை எழுப்பி விடக் கூடியதாகவும் இருக்கிறது.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்க உறுப்பினர்கள்
—சம்மாந்துறை

## போதாத கந்தோர்

பெரிய பட்டினமாகிக் கொண்டுவரும் சம்மாந்துறைக்கு ஒரே ஒரு உபதபாற் கந்தோர் மட்டும் இருப்பதால் மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

இந்தத் தபாற் கந்தோர் தரம் உயர்த்தப்படுவதற்கேற்ற வருமானம் இருந்தும் பலர் பலமுறை முயற்சி செய்தும் எதுவும் நடக்கவில்லை. தபால் இலாகா இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

—சம்மாந்துறை செயின்

## விஜயா 'பொடி'

ஏங்களை ஏமாற்ற ஆரம்பித்துள்ள நிமிடக் கதைக்காரி 'விஜயா' யாரோ? அவர் எழுதுகின்ற கதைகள் எல்லாமே ஒரே ஏமாற்றத்தைக் கொடுக்கின்றன. சின்னஞ்சிறு கதையாக எழுதிவிட்டு இரசிகர்களைத் தடுமாற வைக்க இவர் எங்கு கற்றுக் கொண்டார். ஒரு நிமிடக் கதைக்குள்ளேயே இத்தனை 'பொடி'களை வைத்தாரென்றால் சில நிமிடங்களை எடுக்கும் சிறு கதைகளுக்குள் எவ்வளவு 'பொடி' வைப்பாரோ தெரியவில்லையே!

—த. சாந்தாதேவி
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வகைப் பேராசிரியர்களுள்

# உலகமெங்கும் தமிழைப் பரப்ப முயலும் ஒருவர்

## தமிழ் தந்த பயணம் 4

### பேராசிரியர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல்.

தனி நாயக அடிகளார் தமிழ்க் கல்வியில் மாணவர்களுக்குஆர்வத்தை ஊட்டவும் தமிழ் கற்போர் தொகையைப் பெருக்கவும் பெரு முயற்சிகள் செய்து வருகின்றனர். தமிழைச் சிறப்பாகக் கற்க விரும்பும் மாணவர்களுக்குப் பண உதவி நல்கியும் ஊக்குகின்ருர். பல்கலைக் கழகத்திடம் மட்டுமன்றிச் செல்வர்களிடத்தும் பணம்பெற்று மாணவர்களுக்கு உதவுகின்ருர்.

பல்கலைக் கழகங்களிலே தமிழ்வளர்க்கும் பணியிலீடுபட்டுள்ள பேராசிரியர்கள் பல போக்குக்களையுடையவர்கள். சிலர் தங்கள் தொழில் நிலைத்திருந்தாற் போதும் என்றுஎண்ணிவாழ்கின்றனர். சிலர் தங்கள் மாணவர்களைமட்டும் பட்டம் பதவிபெறச் செய்தாற் போதும் எனக் கருதுகின்றனர். சிலர் பேச்சிலும் எழுத்திலும் தமிழ் மொழிக்கு ஆக்கம் நல்க வேண்டுமென முழங்குவர்; ஆனுற் செயலில் இறங்கமாட்டார். தீவிர செயலில் இறங்கிஞல், மேலதிகாரிகள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள்முதலானேருக்குப் பிடிக்காது என்று பயப்படுவர். சிலர் தங்கள் ஓய்வு நேரத்தைப் பொருவீட்டுந் துறைகளில் மட்டுமே போக்குவர். இவர்களைச் சேராமல் தனித்து உயர்ந்து நிற்பவர் தனி நாயக அடிகளார். உலகமெங்கும் தமிழ் முழங்க வேண்டும், உலக அரங்குகளில் தமிழ் இடம் பெற வேண்டுல், தமிழ் தழைத்து உயர்ந்து சிறந்து பரந்து வாழவ்வண்டுமென்று எண்ணி ஓயாமல் உழைப்பவர். அவர் துறவு வாழ்வைமேற்கொண்டவர் எனினும் தமிழ்க் காதலைத் துறவாதவர்.

**வாய்ப்புக்கள்**

'குடிசெய்வல் எனும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்ருர் வள்ளுவர். தமிழை-தமிழ்க்குடியை-தமிழினத்தை உயர்த்த முயலும் தனி நாயக அடிகளாருக்கு மலாயாப் பல்கலைக் கழகத்தில் பல வாய்ப்புக்கள்—வேறெந்தத் தமிழ்ப் பேராசிரியருக்குங் கிடைக்காத வாய்ப்புக்கள்—கிடைத்துள. இந்த வாய்ப்புக்களை எல்லாம் அவர் தமிழைச் செழிக்கச் செய்தற்கே பயன் படுத்துகிருர். தமிழுக்குப் பெருந் தொண்டு செய்தவர்களிற் சிறந்தவர்கள் துறவிகளே யாவர். இப்பொழுது தமிழ்த் தாய் தன்னேரில்லாத் துறவியாகிய தனிநாயக அடிகளாரைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தனிநாயக அடிகளாருடன் சேர்ந்து சில திங்கள் தொழிலாற்றினமையாலும், அவரும் உளங்கலந்து என்னுடன் தமிழைவளர்க்கும் பணிகளிற் பங்குகொண்டமையாலும் அவருடைய 'தமிழ்க் காதலை' யான் நன்கு அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

நான் கோலாலம் பூருக்குச் சென்ற அடுத்தநாள் மலாயாப் பல்கலைக்கழகத்துக்குப் போகும் வழியில் தனி நாயக அடிகளார் வீட்டுக்குச் சென்றேன். அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலின் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது. தனியாக அடிகளாருடைய இல்லம் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியிலேயேயுள்ளது. பேராசிரியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் பல்கலைக்கழகம் வீடுகளைக் கட்டிக் குறைந்த வாடகைக்குக் கொடுத்துள்ளது. இந்த வீடுகள் ஒன்றிலேயே தனிநாய அடிகளார் ஒரு பணியாளுடன் வாழ்கின்ருர். என்னை அழைத்துச் சென்றவர்களுக்கும் எனக்கும் குளிர்பானம் கொடுத்து உபசரித்துச் சில நிமிட நேரம் உரையாடிய பின், அவர்என்னைமட்டும் அழைத்துக்கொண்டு இந்தியத் துறைக்கு உரிய கட்டடத்துக்குச் சென்ருர். அங்கே அவருடைய அலுவலகத்துட் சென்று இருவரும் பல்கலைக் கழக அமைப்புமுறை, இந்தியத்துறை ஆற்றும் பணி முதலியன குறித்துக் கலந்து உரையாடினேம். யான் கற்பிக்க வேண்டிய வகுப்புக்கள்பாடங்கள், கற்கும்மாணவர்களின் தகைமை முதலியனபற்றி அவர் எடுத்துகாத்தார். உரையாடல் முடிந்த பின்னர் மீண்டும் அவருடைய இல்லத்துக்குச் சென்று அங்கு என்னைக் காத்துக்கொண்டிருந்த அன்பர்களுடன் யான் என் வீட்டுக்குத் திரும்பினேன்.

அடுத்த நாள் பல்கலைக்கழகத்துக்குச் சென்று எனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் செய்யத் தொடங்கினேன். தமிழிலே சிறப்புப் புலமை பெறும் மாணவர்களுக்கே—(ஆனசு வகுப்பினருக்கு) யான் முதலிற் கற்பித்தேன். இலக்கியம், இலக்கணம், இலக்கிய வரலாறு, சைவ சித்தாந்தம் முதலியன யான் கற்பித்த பாடங்களாகும்.

இந்தியத்துறையில் தமிழ், சமக்கிருதம் என்பனவற்றுடன் இந்திய தத்துவம், கலை முதலியனவுங் கற்பிக்கப்படுகின்றன. தமிழரின் சமுதாய வரலாறுதென்னிந்திய வரலாறு முதலியனவுஞ் சிறப்பிடம் பெற்றுள. இவற்றைக் கலாநிதி சி. அரசரத்தினம் அவர்கள் கற்பிக்கிருர். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து அங்கு சென்று பணியாற்றுகிருர். சமக்கிருதத்தைக் கற்பிப்பவர் திரு. கில்லிங்கிலி எனும் பிரித்தானியராவர். தமிழ் கற்பிப்பதற்குச் சென்னையிலிருந்து வந்த அ. ச. விசுவநாதன் அவர்களும் திரு. அருணசலம் அவர்களும் சிங்கப்பூரினரான ச. சிங்காரவேல அவர்களும் உளர்.

முதலாம் ஆண்டினருக்கு இந்திய தத்துவத்தின் ஒரு பகுதியாகச் சைவ சித்தாந்தத்தை ஆங்கிலத்திற் கற்பிக்கும் பணி எனக்குக் கொடுக்கப்பட்டது. முதலாம் ஆண்டிலே சைவ சித்தாந்தம் கற்றவர்களில் மலாயரும் சீனரும் பெரும் பகுதியினர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழைமட்டுமன்றித் தமிழரின் தனி நெறியான சைவ சித்தாந்தத்தையும் மலாயர்களும் சீனர்களும் விரும்பிக் கற்கின்றனர் அங்கு ஆனுல், எங்கள் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எங்களுடன் வாழும் சிங்கள மக்கள் தமிழை ஒதுக்கி அழிக்க முயல்கின்றனர்.

**தமிழ் நேசன்**

நான் மலாயாப் பல்கலைக் கழகத்திற் பணியாற்றும் செய்தியைத் தமிழ் நேசன் எனும் நாளேடு வெளியிட்டது. நான் மலாயாவுக்குச் சென்றபொழுது மலாயா

(10-ம் பக்கம் பார்க்க)


# பொய் என நிரூபித்தால் ஆயிரம் ரூபா பரிசு!



சூப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும் மை வெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரிகத்தின மூலமாகவும் வாழ்க்கையிலுள்ள பலவிதமான சிக்கல்களையும் போக்கிக் கொண்ட பலவிதப்பட்ட பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற சான்றிதழ்கள், பாராட்டுகள், ஆட்டோகிராப்பிலுள்ள கையெழுத்துக்கள் ஆகியன பொய் என உறுதிப்படுத்துபவர்களுக்கு பரிசு சொந்தமாகும்.

மேலும், சிலர் மூலமாகவோ அல்லாவிடில் மாணவர்களை விட்டோ, சாந்தி, மாந்திரீகம், வைத்தியம் செய்வதில்லை. அப்படி வேறொருவரை விட்டு செய்யும், காரியங்கள் சரிவராமல் போகக் கூடுமென்பதற்காக, நானே எல்லாவற்றையும், என்னுடைய கையாலேயே செய்வதால் நூற்றுக்கு நூறு வீத பலன் தருமென உறுதி தருகிறேன்.

## இங்கு குறிப்பிட்டுள்ள வகைகளில் உங்களுக்குத் தேவையானது ஏதாவது இருக்கின்றதா?

வசதியின்மை, கடன் தொல்லை, ஆகிய எந்த விஷயம் பற்றியோ மனவேதனை, கவலை இருந்தால் அவற்றைப் போக்கி மனத்தை ஒரு நிலைப் படுத்துவதற்கு என்னைச் சந்திக்கவும். அல்லாவிடில் எழுதி அனுப்பவும். ரகசியங்கள் வெளியிடப்படமாட்டா. லக்ஷக்கணக்கான மக்கள் இங்கு குறிப்பிட்டுள்ள விஷயங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். அவற்றிற்கு சான்றிதழ்கள் உண்டு. அவற்றை காரியாலயங்களில் பார்க்கலாம்.

சீதனத்தோடு அல்லது சீதனமில்லாமல் சாதகம் கேட்டல், பார்த்தல், ஆகியவற்ருல் கல்யாணப் பேச்சுகள் தடைப்படுதல், வயது கூடி விவாகமின்றி விவாக சம்பந்தங்கள் முறிந்து போகின்றவர்களுக்கு எதிர்பார்க்கும் கல்யாணம் அல்லது விவாகம் சந்தோஷமாக நடைபெற, காதலனுடைய, காதலியுடைய காதல் ஒருபோதும் மாருமல் அன்பு நிலையாக இருக்க, தேவையில்லாதவர்களை துரத்தி தேவையானவர்களை வசியம் செய்வதற்கும் ஒரு பக்கமுமுள்ள பெரியார்கள், சொந்தக்காரர்கள் ஆகியோரைச் சந்தோஷப்படுத்துவதற்கும் கணவன்—மனைவிக்கிடையே உள்ள கருத்து வேறுபாடு, ஊடல் சண்டை, சச்சரவு, நம்பிக்கையின்மை, ஆகியவற்றை நீக்கி, சந்தோஷமாக, கீழ்ப்படிவாக, அன்பாக இருக்கவும். குடும்ப முன்னேற்றத்திற்கும், உத்தியோகங்கள் கிடைப்பதற்கும், தொழில், வியாபாரம், பதவி உயர்வு, வேளாண்மை அபிவிருத்தி அடைவதற்கும், காசு, பொருள் சேர்வதற்கும், சேமிப்பதற்கும் பரீட்சை, போட்டி, நேர்முகப் பரீட்சையில் வெற்றி பெற, கற்கும் பாடம் மனதிற் படிய, சபைக் கூச்சம், நடுங்கும் சுவாவம் நீங்கி சிறந்த பேச்சாளராக விளங்க, மற்றும் அனைவரும் விரும்ப கண்திஷ்டி, வாய்திஷ்டி, எதிரிகளின் தொல்லை, ஸ்தான தோஷம், கிரக தோஷம், பில்லி, சூனியம், ருதுவாகும்போது ஏற்படும் தோஷங்கள், முனித் தோஷம், பெண்கள் உடல் இளைத்தல், மெலிதல், நஞ்சு உட்கொண்டு இருத்தல் ஆகியவற்றைப் போக்குவதற்கும், ஆண்—பெண் இருபாலாருக்கும் ஏற்படும் தோஷங்கள், மர்ம வியாதிகள், சாஸ்திர முறைப்படி மேலும் வாராமல் தடுப்பதற்கு, மருந்திஞல் குணப்படுத்த முடியாத நோய்களுக்கு, அஞ்சனம் போட்டு சுகப்படுத்துவதற்கு, வீடு, வாசலைப் பாதுகாத்துக் கொடுப்பதற்கு, சூனியம், கொடுவினைகள் பாதிக்காமல் இருப்பதற்கு செய்நன்றி மறத்தல், அவமானப்படுத்தல்.

பிழை, குற்றம் செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்த வகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, குற்றத்தை உணரச் செய்ய மற்றும் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்க எம்மிடம் வாருங்கள். சூப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மை வெளிச்சத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும்.

## நான் செய்து கொடுத்த வைத்தியம், மாந்திரீகம் பிழைத்ததில்லை

4 தேவாலயங்களிலும் என்னுடைய கைகளினுலேயே கடமைகள் நடைபெறுவதால் தெய்வ பலத்தாலும், மந்திர சக்தியினுலும் நிறைவேற்றித் தர முடியும்

நேரில் சந்தித்தல் : செவ்வாய்-சனி வரையும் தலைநகரில் (கொழும்பு) ஞாயிறு, திங்கள் கம்பளையில் மட்டும்.

கவர்ன்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

## பீ. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா. அருந்த எல்லெணிய தலைமைக் காரியாலயம், கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 டிசம்பர் மாதம் 13ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# மீண்டும் ஒரு வாய்ப்பு

பொதுத் தேர்தல் அண்மிவிட்டது. உரிமைகளைப் பெறுவதற்காகத் தமிழ்பேசும் மக்களின் கைவசமிருக்கும் போர்க் கருவிகளில் 'வாக்குச் சீட்டும்' ஒன்று. அதனைப் பிரயோகிக்கும் வாய்ப்பு அவர்களுக்குமீண்டும்கிடைத்துள்ளது.

நாட்டின் பொதுப் பிரச்சினைகள் தமிழ்பேசும் மக்கள் உட்பட அனைவருக்கும் பொதுவானவையே. வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகள் ஏற்றம், சாமான்கள் தட்டுப்பாடு, வர்த்தக மந்தம், பொருளாதார நெருக்கடி போன்றவை தமிழ்பேசும் மக்களையும்பாதிக்கின்றன. ஆனால் அவர்களுக்கென அடிப்படைப் பிரச்சினைகளும் வேறு உண்டு குடியுரிமை மொழியுரிமை, நிலவுரிமை, அரசியல் ஆதிக்க உரிமை ஆகியவை அவர்களின் ஜீவாதாரமான பிரச்சினைகளாகும்.

இந்த அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் பாராளுமன்றத்துள்ளும் புறம்பும் போராடி வந்துள்ளனர். பாராளுமன்றத்துக்கு வெளியே தமிழரசுக்கட்சி நடத்திய உரிமைப் போராட்டங்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. சிங்கள ஆட்சியாளர்களைக் கதிகலங்கச் செய்தவை.

பாராளுமன்றத்திலும் பெரும் போராட்டங்களை நடத்தியுள்ளனர் தமிழரசுப் பிரதிநிதிகள். அவர்கள் அங்கே தமிழ்பேசும் மக்களின் உரிமைகள்பற்றி ஓயாது குரலெழுப்பி வந்துள்ளனர். சிங்கள வகுப்புவாதிகள் தமிழ்பேசும் இனத்துக்குச் செய்த துரோகங்களையும், அநீதிகளையும் அவர்களின் பாரபட்சமான கொடிய செயல்களையும் பாராளுமன்றத்தின் மூலம் உலகறியச் செய்தவர்களும் தமிழரசுப் பிரதிநிதிகளே ஆட்சியாளரின் அக்கிரமங்களை பாராளுமன்றத்தில் நேருக்கு நேர் அவர்களுக்கு இடித்துக் கூறியவர்களும் அவர்களே. பாராளுமன்றத்துள் நல்லூர் பிரதிநிதி கர்ஜிக்கத் தொடங்கிவிட்டால், ஆட்சியாளர் பெட்டிப் பாம்பாகி விடுவர். அவர் கொடுக்கும் சொற்சூடு அமைச்சர்களின் உள்ளத்தையும் பொசுக்கும். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி சாங்கோபாங்கமாக விஷயங்களை அலசி ஆராய ஆரம்பித்துவிட்டால், ஆளும் கும்பல் அதிர்ச்சியடையும் தமிழரசுத் தலைவர் திட்டவட்டமான சொற்களைப் பிரயோகிக்கும்போது ஆளவந்தார் வாயடைத்து நிற்பர். இதர தமிழரசுப் பிரதிகளும் சொற்போர் நடத்துவதில் முன்னணியிலேயே நின்றனர்.

தமிழரசுப் பிரதிநிதிகள் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பொறுத்தலவரையில் பாராளுமன்றத்தில் இதுகால வரை இம்மிகூட விட்டுக்கொடுக்கவில்லை. இனிமேல் விட்டுக் கொடுக்கப் போவதுமில்லை.

அதுமட்டுமன்று. சிங்களப் பெரும்பான்மையோரிடையே அவ்வப்போது தோன்றும்பிளவுகளைப் பயன்படுத்தி சிறுபான்மையோருக்கு அநீதி இழைக்கும் அரசாங்கங்களை வீழ்த்தவும் தயங்கவில்லை தமிழரசுப் பிரதிநிதிகள். அன்று ஐ. தே. கட்சி ஆட்சியை வீழ்த்தினர். இன்று கூட்டரசாங்கத்தை வீழ்த்தியுள்ளனர். இவ்விரண்டும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை அபகரித்து அவர்களின் உரிமைப்போராட்டங்களை மிருகத்தனமாக நசுக்கி பேயாட்டம் ஆடியவைகளே. அவை ஒழிக்கப்பட வேண்டியவை எனவே வாய்ப்புக் கிட்டியதும் அவற்றை ஒழித்துக்கட்டி விட்டனர் தமிழரசுப் பிரதிநிதிகள். அவர்களின் ஒத்துழைப்பின்றி எந்த ஆட்சியும் நீடித்து நிலைத்து நிற்க முடியாதென்பதை இருமுறை நிரூபித்துக் காட்டிவிட்டனர்.

போலி வாக்குறுதிகளையோ, அற்ப சலுகைகளையோ ஏற்று ஆட்சியாளர்களுக்கு சப்பைக்கட்டு கட்ட என்றுமே முன்வந்ததில்லை நமது பிரதிநிதிகள். அவர்கள் பாராளுமன்றத்தினுள்ளும் தியாகிகள்தான். வெளியிலும் தியாகிகள்தான்.

அடிக்கடி சிங்கள அரசாங்கங்களை வீழ்த்துவதில் தமிழ்பேசும் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது என்று கேட்கலாம். தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பின்றி இந்த நாட்டில் ஓர் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை உணர்த்துவதும், சிறுபான்மையோரின் வல்லமையை எடுத்துக்காட்டுவதுமே அரசாங்கங்களை வீழ்த்துவதின் ஒரே நோக்கம். இதனைச் சிங்களக் கட்சிகள் உணர்ந்துவிட்டால், தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக அவர்களின் உரிமைகளை வழங்கவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

சிங்களக் கட்சிகள் இந்த உண்மையை உணரும் வரை அவற்றின் அரசாங்கங்களை சமயம் பார்த்துவீழ்த்த தமிழரசுப் பிரதிநிதிகள் தயங்கமாட்டார்கள். தயங்கவும் கூடாது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை இவ்வாறு பாராளுமன்றத்திலும் வெற்றிகரமாக நடத்த வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒரே கட்சிக் கொடியின் கீழ் அணிவகுத்து நிற்க வேண்டும். ஒரே கட்டுப்பாட்டுக்கு அடங்கி ஒரே மனிதனைப் போல செயலாற்ற வேண்டும்.

இத்தகைய ஒரு கட்சி தமிழரசுக் கட்சி ஒன்றே. இக்கட்சிப் பிரதிநிதிகள் மட்டுமே ஒரு போர்ப் படையைப் போல பாராளுமன்றத்துள் கட்டுப்பாடாக செயலாற்றுகின்றனர். ஓர் உறுதியான கொள்கையின் அடிப்படையிலேயே அவர்கள் இயங்குகின்றனர். தமிழ் பேசும் மக்களின் உரிமைகள்தான் அவர்களின் பேச்சும் மூச்சும்.

சுய—இச்சைகளுக்கோ, தனி நபர்களுக்கோ இந்த ஆற்றல் கிடையாது அவர்கள் கட்டாக் காலிகள். அவர்களுக்கு உறுதியான கொள்கையோ வேலைத் திட்டமோ கிடையாது. தத்தம் விருப்பம் போல செயலாற்றுவார்கள். சந்தர்ப்பம் பார்த்து மக்களைக் காலை வாரிவிடுவார்கள். சேற்றில் நடப்பட்ட கழியைப் போல அங்குமிங்கும் அசைந்தாடுவார்கள். சுயநலனை முன்னிட்டு எப்பக்கத்திற்கும் கை உயர்த்துவார்கள். இவர்களை மக்கள் நம்புவது மண் குதிரையை நம்புவதைப் போலாகும்.

அரியணை உரை மீது வாக்கெடுப்பு நடந்த போது யாழ்ப்பாணப் பிரதிநிதி ஓடி ஒளித்துக் கொண்டதிலிருந்தே இந்த உண்மை புலனாகிறது. சுய-இச்சைகளின் துரோகச் செயல்களை அறிந்து கொள்வது கடினமன்று. கடந்த பொதுத் தேர்தலின் போது மக்கள் ஒரிரு சமசமாஜிகளையோ, கொம்யூனிஸ்டுகளையோ பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்திருந்தால் அவர்கள் இம்முறை அரசாங்கத்துக்குச் சார்பாக வாக்களித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அன்று அவர்களை அடியோடு மண்கவ்வச் செய்ததின் நன்மை இப்பொழுது நன்கு புலனாகிறதல்லவா?

தமிழ் பேசும் மக்கள் அடுத்து வரும் தேர்தலில் இவ்விஷயத்தில் விழிப்பாக இருத்தல் வேண்டும். உதிரிக் கட்சிகளையும் தனி நபர்களையும் உதறித் தள்ளி விட வேண்டும். அவர்களுக்கு இம்மியும் இடம் கொடுத்துவிடக் கூடாது. தேர்தலை முன்னிட்டு திடீர் திடீரென காளான் கட்சிகள் முளைக்கும். பலர் பலவிதமான வேடம் பூண்டு தேர்தல் அரங்கில் வந்து நடிப்பார்கள். அவர்களெல்லோரையும் மக்கள் அடியோடு நிராகரித்து விடவேண்டும்.

தேர்தல் சமயத்தில் தமிழ்பேசும் மக்கள் என்றுமில்லாதவாறு தங்களின் மகத்தான கட்டுப்பாட்டையும் அசைக்க முடியாத ஐக்கியத்தையும் எடுத்துக் காட்ட வேண்டும். தமிழரசுக் கட்சி தங்களின் ஏகப் பிரதிநிதித்துவ ஸ்தாபனமென்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்ட வேண்டும். இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் தமிழ் பேசும் மக்கள் தவற மாட்டார்கள் என்பதே எமது திடமான நம்பிக்கை.

# தோல்வி காட்டும் படிப்பினை
## காலம் காட்டும் கண்ணாடி

அரியணை உரையில் ஆட்சிபீடம் கண்ட தோல்வி அராஜகம் தலைதூக்கவும், அவசரகால நிலைமை தோன்றவும் வழி வகுக்குமோ என்று அஞ்சப்பட்டது. அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. ஆனால் ஆளும் கட்சி மட்டுமல்ல இந்நாட்டின் அரசியல் வாதிகள் அனைவருமே நல்லதொரு பாடத்தைப் படித்துவிட்டனர். அதுதான், தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் கட்சியின் தயவின்றி எந்த ஆட்சியும் நிலைக்கமுடியாது என்பதே!

தமிழ்பேசும் மக்கள் கடந்த காலத்தில்இனவெறியர்களிடம் பெற்ற அடி, உதை, கல்லெறி,கைக்குண்டு வீச்சு, சொல்லம்புகள் யாவும் இன்று திசைமாறித் திரும்பிவிட்டன.

எந்தத் தலைவர்கள் இத்தகைய காடைச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டுத் தமிழ் பேசும்மக்களைஅடிமைப்படுத்த எத்தனம் புரிந்தார்களோ அதே தலைவர்களை நோக்கி இத்தகைய பாணங்கள் படையெடுத்தன என்பதைக் கண்ணாரக் கண்டோம்.

1956ம் ஆண்டு ஜூன் 5ல் காலிமுகக் கடற்கரையில் தமிழ்பேசும் தலைவர்களின் பச்சை இரத்தம் பாய்ந்து கறை ஏற்படுத்தியது. மமதை மேற்கொண்ட ஆட்சிபீடம் அன்று ஆணவ வெறிகொண்டாடியது.

கல்லோயாப் பள்ளத்தாக்கிலே சூதுவாது தெரியாத தமிழ்பேசும் பெண்டிரும் பிள்ளைகளும் கொடிய வெறியர்களின் வெறியாட்டத்துக்குப் பலியாயினர்.

1958ல் தென் இலங்கையில் திட்டமிடப்பட்ட காடையர்கள்-வெறிபிடித்த சிங்கள எதேச்சாதிகாரிகளின் ஏவுகணைகள்—தமிழ் பேசும் மக்களின் குருதியில் நீச்சலடித்து விளையாடினர்.

### பழைய நினைப்பு போகவில்லை

தமிழ்பேசும் மக்களை சிங்கள அரசியல் வாதிகள் எவரும் மக்களாக இதுவரை மதித்ததில்லை. முன்னைநாளில் தமிழ்பேசுவோரின் தலைவர்களாக விளங்கிய சிலரின் பதவிவெறியை அவதானித்த இன்றைய சிங்களத் தலைவர்கள், இன்றுள்ள தமிழரசுக்கட்சித் தலைவர்களையும் விலைகொடுத்து வாங்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர். இத்தனை வருடங்கள் பழகியும் இன்றுள்ள எமது தலைவர்களின் இலட்சிய மனப்பான்மையை சிங்களத் தலைவர்கள் அறிந்துகொள்ள முடியாதமையையிட்டு நாம் பரிதாபப்படாமலிருக்க முடியாது.

1960ம் ஆண்டு யூ. என். பி. ஆட்சிபீடமேறி அரியணையினை மகாதேசாதிபதி நிகழ்த்தியபோது, தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தமிழரசுத் தலைவர்கள் கைகொடுக்க மறுத்தமையினால் ஆட்சியே கவிழ்ந்தது.

சுதந்திரன் அரசியல் நிருபர்

அன்று யூ. என். பி. வீழ்ச்சி அடைந்தமையினாலேயே சிறிமாவோ ஆட்சி பின்னர் தலையெடுக்க முடிந்தது.

அரசியல் வரலாறு போதித்த இந்த அரிய உண்மையினை மறந்துவிட்ட இதே ஆட்சி குற்றுயிராக வீழ்ச்சி அடைய ஆதிகாரணமாக விருந்தவர்கள், அதே தமிழரசுத் தலைவர்கள் என்பதை எந்த அரசியல் வாதியும் மறுக்கவோ மறைக்கவோ மறக்கவோ முடியாது. பழைய தமிழ்த் தலைவர்களைப்போல் இன்றுமுள்ள தலைவர்கள் பதவிக்கோ, புகழுக்கோ இனத்தைக் காட்டிக்கொடுக்கவில்லை என்பது உறுதியாகிவிட்டது.

### உதைத்தவர்களை உதைத்தனர்

தமிழ்பேசும் மக்களும் இந்நாட்டவரே. அவர்கள் மானத்துடன் வாழ்வதற்கு சில உரிமைகளை விட்டுக் கொடுங்கள் என்று எத்தனையெத்தனை முறைதான் இந்த அரசிடம் தலைவர்கள் கேட்டனர்?

ஒரு சிறிதளவாவது விட்டுக்கொடுத்ததா இந்த அரசு? சிங்களத்தைச் சிறுபான்மையோரின் தொண்டைகளுக்குள் புகுத்துவதில் கண்ணும் கருத்துமாகவிருந்தது இந்த அரசு. தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துவந்த அரிய சிறியஉரிமைகளையும் பிடுங்க ஆரம்பித்தது. தமிழ் அரசாங்க ஊழியர்களின் சேவைகளையும் அபகரித்து எண்ணற்ற ஊழியர்களை தொழிலிழந்து அல்லலுற வழிவகை தேடியது.

இத்தனையும் செய்த இந்த ஆட்சி பீடத்தை நீடிக்க வைக்க உதவிசெய்ய வேண்டும் என்பது எந்தத் தர்மத்துக்கும் அடுக்காது என்று கண்ட தலைவர்கள், உதவி செய்ய மறுத்தார்கள். ஆகவே, அரியணை உரை வாக்கெடுப்பிலேயே ஆட்சி கழிந்தது.

### திரும்பிய சரித்திரம்

அது மட்டுமல்ல!

அன்று தமிழ் பேசும் மக்கள் தலைவர்களை காலி முகத்தில் வைத்து சிங்கள வெறிபிடித்த சில தலைவர்கள் ஏவிவிட்ட காடையர்கள், கல் கொண்டும், பொல் கொண்டும், கடும் வசை பொழிந்தும் தாக்கினார்களல்லவா?

இதோ! அதே காலி முகக் கடற்கரை அருகமைந்த பாராளுமன்ற முன்றலில் சில தலைவர்கள் காடையர் கைப் பொம்...

(9-ம் பக்கம் பார்க்க)

# தொண்டமானின் தடுமாற்றம்

அரியணை உரை வாக்கெடுப்பின் போது திரு. தொண்டமான் நடுவுநிலைமையாளர் போல் இருந்துவிட்டமை அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. புதன் கிழமை விவாதங்களின் போது ஆட்சியைகண்டித்ததோடு, திருத்தப் பிரேரணை ஒன்றையும் கொண்டு வந்த திரு. தொண்டமான், அரியணை உரையையும் அதனுள் பொதிந்துள்ள சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தையும் ஆதரிப்பவர் போன்று வாக்களியாதிருந்து விட்டார்.

அரசாங்கத்துக்குச் சாதகமாக வாக்களிக்காமல் விட்டு விட்ட அவரை பாராட்ட வேண்டியது அவசியம்தான். ஆனால், எதிர்க்கட்சிகளுடன் இணைந்து, தமது இனத்தவர்களுக்கே தீங்கு பயக்கும் திட்டங்களைக் கொண்ட அரியணை உரையை நிராகரிக்க வேண்டுமென்று வாக்களிக்காமல்விட்ட அவரை நாம் கண்டிக்காமல் விட்டு விட முடியாது.

அரசாங்கத்தின் மறைமுகமான நிர்ப்பந்தத்தினாலேயே அவர் இப்படி நடந்திருக்கலாம். இதே அரசாங்கத்தின் நிர்ப்பந்தம் இருக்குமானால் திரு. தொண்டமான் தம்முடையதும், தமது இனத்துடையதுமான சகல கொள்கைகளையும் விட்டுக் கொடுத்து விடுவார் என்று நாம் ஏன் கருதக் கூடாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரபட்சம் காட்டாது உரிமை வழங்குக

## தொழிலாளர் கழகத்தின் கோரிக்கைகள்

இந் நாட்டை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட தமிழ் பேசும் மக்களனைவருக்கும் பாரபட்சமற்ற முறையில் குடியுரிமை, வாக்குரிமை வழங்குவதுடன், தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு தமிழுக்கும் சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து வழங்கவேண்டும் என்று அட்டனில் நடைபெறும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படவிருக்கிறது.

தொழிலாளர் கழக மாநாட்டில் இம்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம் என்று அறியப்படுகிறது:-

இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் பாரபட்சமற்ற முறையில், இந் நாட்டின் இதரகுமக்கள் அனுபவிக்கும் குடியுரிமைக்குச் சமமான குடியுரிமை வழங்கப்படவேண்டும்.

இலங்கையின் இதர குடிகள் அனுபவிப்பதுபோன்ற வேறுபாடற்ற வாக்குரிமை தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும்.

நாட்டின் தேசிய ஒற்றுமையைக்கருதி தமிழ்மொழி ஒழிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்திசிங்களமொழியுடன் சம அந்தஸ்துள்ள அரசாங்க மொழியாக தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளில் தோட்டங்களில் வேலைக்குப் பதிவு செய்ய முடியாதவர்களை, தோட்டங்களுக்கு அருகில் உள்ள முடிக்குரிய காணிகளிலும் கிராம விஸ்தரிப்புக்காக எடுக்கப்படும் காணிகளிலும் குடியேற்றவேண்டும் இவ்வசதியில்லாத இடங்களில் வேலையற்றவர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்ற வசதி செய்து கொடுக்கப்படவேண்டும்.

### கல்வியும் சமூக நலனும்

தோட்டப் பகுதித்தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய் மொழியிலேயே சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை கல்வி பயிலக்கூடியதாகத் தோட்டப் பாடசாலைகள் தரம் உயர்த்தப்படவேண்டும்.

தமிழ்ப்பிள்ளைகள்எல்லோரும் எதுவித பாரபட்சமுமின்றி பல்கலைக் கழகத்தில் கல்விபெறும் உரிமைகொடுக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் கூட்டுறவுக் கடை, வாசிகசாலை, சிறுவர் விளையாட்டுப் பூங்கா, பயிற்சி பெற்ற தாதியுடன்குழந்தை பராமரிப்பு நிலையம் ஆகிய வசதிகளும் செய்துகொடுக்கப்படவேண்டும்.

## அமைச்சரின் மௌன மர்மம்?

அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயிக்கும் துறையில் பிரதமர் சிறிமாவோவுக்கு வலதுகையாக விளங்கி வந்த ஒரு அமைச்சர் சில மாதங்களாக மௌனம் சாதித்து வந்தமை அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. கூட்டரசாங்கம் அமைத்த பின்னரே தான், இந்த அமைச்சர் அமைதியைக் கடைப்பிடித்தாராம்.

சில வருடங்களாக ஆளும் கட்சியையும் அமைச்சர்களையும் ஆட்டிப்படைத்து வந்த இந்த அமைச்சரின் சில அந்தரங்கங்களை சமசமாஜக் கட்சி பிரமுகர் ஒருவர் அறிந்து கொண்டமையினால். இந்த நபர் தலையெடுக்க முடியாது போய் விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

கூட்டரசாங்க அமைப்பை மேற் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர் தொடர்ந்து எதிர்த்து வந்தார் என்றும், சமசமாஜக் கட்சிப் பிரமுகரிடம் இவரைப் பற்றிய பல தகவல்கள் சிக்கிய பின்னரே அமைதியாக கூட்டரசாங்க அமைப்பை ஏற்றதுடன், ஆட்சி பீடத்துக்கு 'புத்தி மதி' கூறு வதையும் கைவிட்டார் என்றும் தெரிய வருகிறது.

அடுத்த பொதுத் தேர்தலில் இந்த அமைச்சர்போட்டியிடுவார் என்பதும் ஐயமாக விருப்பதாக அரசியல் வட்டாரங்களில் செய்திகள் அடிபடுகின்றன.

## இ. தொ. கழக கோஷங்கள்

அட்டன், டிச. 10

இலங்கைத் தொழிலாளர் கழக மாநாட்டையொட்டி நடைபெறும் பொதுக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் பின் வரும் கோஷங்கள் தொழிலாளர்களால் எழுப்பப்படுமென்று தெரிகிறது.

| | |
|---|---|
| இலங்கைத் தொழிலாளர் கழகம் | வாழ்க. |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | வாழ்க. |
| தமிழ் பேசும் தொழிலாளர்களே | ஒன்று சேருங்கள். |
| மலையக வாலிபர்களே | ஒன்று சேருங்கள். |
| நாங்கள் கோருவது | அடிப்படை உரிமைகள். |
| அரசியல் உரிமை | எங்களுக்கு வேண்டும். |
| பிரஜா உரிமை | எங்களுக்கு வேண்டும். |
| வாக்குரிமை | எங்களுக்கு வேண்டும். |
| இந்தியாவுக்கு | போகமாட்டோம். |
| எங்கள் நாடு | இலங்கை நாடு. |
| மாதச் சம்பளம் | எங்களுக்கு வேண்டும். |
| இலாபத்தில் பங்கு | எங்களுக்கு வேண்டும். |
| சுகாதார வசதியுடன் | வீடு வேண்டும். |
| வாசிகசாலைகள் | எங்களுக்கு வேண்டும். |
| மேற்படிப்பு வசதிகள் | எங்களுக்கு வேண்டும். |
| சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் | ஒழிக. |
| எமது மொழி | தமிழ் மொழி. |
| உயிரைக் கொடுத்தும் | மொழியைக் காப்போம். |
| அரை மாதச் சம்பளம் | பென்சனுக வேண்டும். |
| எமது போர் | உரிமைப் போர். |
| வகுப்பு வாதிகள் | நாங்களல்ல. |
| வடக்கும் கிழக்கும் | மலையகமும் ஒன்றே. |
| உயிரைக் கொடுத்தும் | உரிமைகள் பெறுவோம். |

## கிழக்குத் தபால்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சகல தொகுதிகளிலுமிருந்து தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

திரு. சி. மூ. இராசமாணிக்கம், செனட்டர் மு. மாணிக்கம், ஜனுப் மசூர்மௌலானு, திரு. க. கந்தசாமி, திரு. அ. குருஸ் ஆகியோர் பேசிய பின்னர்—கிளைகளை அமைக்க சகல ஏற்பாடுகளையும் செய்ய செனட்டர் மாணிக்கம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக் குழுவின் செயலாளராக திரு. க. கந்தசாமி பணிபுரிவார்.

—பாடும் மீன்.


## காய்கறி விதைகள்-பூக்கள்

இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும்
அன்றலர்ந்த மலர்கள்—காய்கறி விதைகள்

விநியோகிப்பதில் 23 வருடங்களாகப் பிரசித்திபெற்ற நிலையம்

எஸ். ஏ. பெர்னுண்டோ

23 ஆண்டுகளாக நம்பிக்கைக்கு பிரசித்தி பெற்று ஈடிணையற்று விளங்குகிறது.

எல்லோரும், எஸ். ஏ. பெர்னுண்டோவிடமிருந்து ஓடர் செய்வதற்குக் காரணம்.
அவர்களது மதிப்பு என்றும் நிலைத்திருப்பதாகும்.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:

**எஸ். ஏ. பெர்னுண்டோ,**

த. பெ. இலக்கம் 16, பழைய பஜார்,
நுவரெலியா.

தொலைபேசி: 283 தந்தி: பாத்திமா


## சோதிடர்கள் நடாத்திய அலரிமாளிகை ஆராய்ச்சி?

பாராளுமன்றத்தைக் கலைத்து விட மகா தேசாதிபதிக்கு அறிவிக்கப் போகிறேன் என்று அறிவித்த பிரதமர் சிறிமாவோ காலத்தைக் கடத்தி வந்தமையினால் நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பாராளுமன்றத்தை எப்பொழுது கலைப்பது? எப்பொழுது பொதுத் தேர்தலை வைப்பது என்பதையிட்டெல்லாம் அலரி மாளிகையில் பெரிய ஆராய்ச்சிகள் நடை பெற்றதாம். இவை அரசியல் ரீதியில் நடைபெறவில்லை - என்பது உண்மை தான். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல சோதிடர்கள் தருவிக்கப்பட்டு சாதக பாதக கணிதங்கள் மேற்கொள்ளப்பட்டதாம். இரவு பகல் என்று பாராது இந்தச் சோதிடர்கள் அம்மையாரினதும், சுதந்திரக் கட்சியினதும் சாதகங்களை இந்தச் சோதிடர்கள் புரட்டிப் புரட்டி ஆராய்ந்தார்களாம்.

சோதிடத்தில் நம்பிக்கையில்லை என்று கூறும் சமசமாஜித் தலைவர் ஒருவரும் தமது பிறந்த நாள் கோள்களையிட்டு பயபக்தியுடன் ஆராயத் தலைப்பட்டதாவும் செய்தி கிடைத்துள்ளது.

## தோல்வி.......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாகினர் என்ற செய்தி கிடைத்துள்ளது.

1958-ம் ஆண்டு பொல்லநறுவையில் ஒரு பெரும் இனவெறி பிடித்த படையினைத் திரட்டி, தமிழ் பேசும் மக்களின் உடமைகளையும் உயிரையும் அபகரிக்க எத் தலைவர்கள் திட்டங்கள் தீட்டினர்களோ, அதே தலைவர்கள் தாங்கள் வளர்த்து விட்ட காடைத்தனத்துக்குப் பயந்து தலைமறைவாகித் திரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

### அன்று வெடித்த வெடி

1958 ஆண்டு ஜூன் மாத மத்தியிலே கல்குடா பிரதிநிதி திரு. மாணிக்கவாசகர் இல்லத்திலே சில தமிழரசுத் தலைவர்களின் உயிரைப் பறிக்க கைக்குண்டு வீசப்பட்டதல்லவா? அன்று வெடித்த வெடிக்கு யார் திரியிட்டுத் தீ மூட்டினர்களோ.......

அதே தலைவர்களின் இல்லங்கள் இன்று கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகிவிட்டதை கண்ணாரக் காண்கிறோம்.

## இ. தொ. கழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஊர்வலம் டன்பார் மைதானத்தைச் சென்றடைந்ததும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

பொதுக் கூட்டத்தில் கழக முக்கியஸ்தர்களும், தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், மொழி வழித் தொழிற் சங்கப்பிரதிநிதிகளும், கலந்து சொற்பொழிவாற்றுவார்கள்.

## ஏராளமான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### திரைப் படம்

'பண்டாரநாயக்காவின் இறுதி யாத்திரை' என்ற தகவல் இலாகாவின் முன்னைய திரைப் படத்தில் பல புதிய பிரதிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் அவை இலங்கை எங்கணும் திரையிடப்படும் என்றும் தெரிய வருகிறது. இதுவும் ஆளும் கட்சியின் தேர்தற் பிரசாரத்தில் ஒன்ருக விருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.


## வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை,
தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட
கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்
முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும்
ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் குற்றம்

இவ்வாரச் சிறுகதை

வானம் திறந்து வைத்த குங்குமச் சிமிழாய்க் காட்சியளித்தது. அலுப்போடு ஈருருளியைச் சுவரில் சாற்றிவிட்டு உள்ளே நுழைந்தார் றசூல். மாலைப் பொழுதின் மங்கிய செவ்வொளியில், திண்ணைப் படியில் அமர்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த அலிமா, தந்தையின் வரவு கண்டு எழுந்து நின்றாள்.

'அலிமா! உம்மாவுக்கு எப்படி?' என்று வந்ததும் வராததுமாக விசாரித்தார்.

'படுக்கிருங்கள்...அப்படியே தான் இருக்கு...'

'சரி நீ போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா...' என்று கூறிவிட்டுக் கனத்துக் கொண்டிருந்த காக்கி உடைகளை மாற்றினார். இந்த இருபது வருடங்களாகக் கனமற்றிருந்த அந்த உடைகள் இன்று மட்டும் ஏனோ கனமாயிருந்தன?

சாளரத்துக்கு நேரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு சோர்வோடு சாய்ந்தார். சிலுசிலுவென இதமாக வீசிய தென்றல் கூட அவருக்கு அனலாய்த் தோன்றியது. மெதுவாய்க் கண்களை மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

காலை, தன் கீழுள்ள ஒரு இளம் பொலீசுக்குக் கூறிய வார்த்தைகள் அவரது நெஞ்சில் தட்டாமாலை சுற்றியது.

'இதோ பாருங்கள் மிஸ்டர்! நான் இந்த உத்தியோகத்துக்கு வரும்போது 'மகனே! கடமையையே முக்கியமாக மதிக்க வேண்டிய தொழிலுக்குச் செல்லும் நீ பணத்துக்காகக் கடமையை மறந்து விடாதே' என்று கூறினார். அவரும் போய் எத்தனையோ ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் நான் இன்று வரை யாரிடமும் கை நீட்டியதில்லை. இனிமேலும் நீட்டவே மாட்டேன். நேற்று நீங்கள் செய்த வேலை என்னால் மன்னிக்க முடியாதது. தாமதிக்காமல் அதைக் கொடுத்துவிட்டுக் கடமையைச் செய்யுங்கள்.'

சட்டத்தை மீறிக் கசிப்புத் தயாரித்த ஒருவனைக் கைப்பற்றச் சென்ற அவன், தன் சகாக்களோடு சேர்ந்து பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பிவிட்டான். அதை எப்படியோ அறிந்த அவர் மனம் எரிமலையைக் கக்கியது.

'என்ன வாப்பா யோசிக்கிறீங்க?' என்று கேட்டுக் கொண்டே தண்ணீரை நீட்டினாள், அலிமா. 'ஒன்றுமில்லை...' என்றார்.

'ஒருநாளுமில்லாத வாட்டம் தெரியுது. எதையோ என்னிடம் மறைக்கிறீங்க...' என்றாள் அலிமா.

'உன்னிடம் எதையாவது மறைத்தேனா? இல்லையே'

'அப்படியானால் இப்போது மட்டும் ஏன் மறைக்க வேண்டும்.'

'ஒன்றையுமே மறைக்க வில்லை. காலையில் ஒன்று நடந்துவிட்டது. அதைத் தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அது உனக்குத் தேவையில்லாதது...' என்று கூறிவிட்டுத் தண்ணீரைக் குடித்தார்.

'என்ன வாப்பா நடந்தது?...' என்று விடாமல் கேட்டாள்.

இடையில், பக்கத்தறையிலிருந்து அவளது தாயின் இருமல் சத்தம் பலமாகக் கேட்டது. பதறிக்கொண்டு தந்தையும், மகளும் ஓடினர்.

வரண்டு மஞ்சள்பாரித்த தன் அன்னையின் வதனத்தைக் கூர்ந்து நோக்கியவாறே, பக்கத்தில் அமர்ந்து நெஞ்சைத் தடவிக் கொடுத்தாள். உரித்தெறிந்த நாராய்த் தோல் போர்த்த எலும்புக் கூடாய்க் கட்டிலோடு கட்டிலாகத் துவண்டு கிடக்கும் தன் இல்லாளின் கோலத்தை ஆதங்கத்தோடு நோக்கி நின்றார், றசூல். வேதனையால் அவரது பரந்து விரிந்த மார்பு விம்மித் தணிய நெடு மூச்சுக்கள் நெக்குருக வெளியேறின.

பஞ்சடைந்த கண்களால் கணவனையும், மகளையும் மாறிமாறி நோக்கினாள், அன்னை.

'என்ன உம்மா...தண்ணீர் தரவா?...' என்று கேட்டாள் அலிமா. 'ஆம்' என்ற பாவனையில் தலை அசைக்கவே எழுந்து தண்ணீர் எடுக்கச் சென்றாள்.

சோகத்தின் விளிம்பில், தன்னையே நோக்கி நிற்கும் கணவரைக் கையைக் காட்டிப் பக்கத்தில் அமரச் சொல்லி 'என்...ன?...அலிமாவை நான் மணக்கோலத்தில் பார்க்கவே...முடியாதா...?' என்று ஜீவனற்ற குரலில் கேட்டாள்.

'என்ன செய்வது? கையிலிருந்த பணமெல்லாம் வைத்தியம், என்று கரைந்து போயிற்று...எல்லாவற்றுக்கும் ஆண்டவன் உதவி செய்வான்...தினமும் நான் இதே யோசனையில் தான் இருக்கிறேன்...' என்று கண்கள் பனிக்க, நெஞ்சமலர் துன்பத்தால் கசங்க கூறினார்.

'இனிமேல்... என்னைப்... பற்றிக்...கவலைப்படாதீங்க ...நான்... இன்றைக்கோ...... நாளைக்கோ...அதற்கிடையில் அலிமாவை...மணக் கோலத்தில் பார்க்க வேணும்...இந்த... ஆசையை மட்டும்...' முடிக்குமுன் இருமல் தொண்டையைப் பிய்த்துக் கொண்டெழுந்து, உயிரை வாங்கியது,

'பயப்படாதே...நான் எப்படியும் உன் ஆசையை நிறைவேற்றியே தீருவேன். ஆண்டவன் நம்மைக் கை விடமாட்டான செய்னு! உலகத்தில் பிறந்த எந்தப் பெண்ணும் வாழாமலில்லையே! நம அலிமாவும் வாழ்வாள்... கட்டாயம் அவ கழுத்திலே தாலி ஏறும்.. நீ ஒனறும் பயப்படத் தேவையில்லை...' என ஆறுதலாட்டியவாறே, மனைவியின் நெஞ்சைத் தடவிக் கொடுத்தார்.

அலிமாவும் வெந்நீருடன் உள்ளே வரவே, அவர் எழுந்து வெளியில் சென்றார். மீண்டும் அதே நாற்காலியில் இடிந்து போய்ச் சாய்ந்தார். உளக் கடலில் எழுந்த கொந்தளிப்பில் ஆதாரம் தேடித்தவித்தார். கடைசியில், துரும்புக்குப் பதிலாக மரக்கலமே கிடைத்துவிட்ட நிம்மதி பிறந்தது. கரையேற முடியாதவனுக்கு எப்படியும் வழி பிறந்தால் சரிதானே?

மறுநாள் நேரத்தோடு விழித்து விட்டார். உள்ளத்தின் பரபரப்பு செயலிலும் பிரதிபலித்தது. அலிமாவை எதிர்பார்க்காது தன் கைகளாலேயே பாலூற்றி மனைவிக்குக் கொடுத்து, 'செய்னு! உன் ஆசை நிறைவேறும்...என் வாழ்க்கையிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளது. இனிமேல் பணத்திற்கு அடுத்ததுதான் கடமை...'என்று ஏதோ புதிர் போடுவது போல் கூறிவிட்டு, ஈருருளியைத் தள்ளிக் கொண்டு வெளியேறினார்.

அவர் காரியாலயத்துள் நுழைந்ததும் 'ஐயா...இன்றைக்கு அவனைக் கையோடு கொண்டு வருகிறோம்...' என்று கூறிக் கொண்டு வந்தான், அவன்.

'முதலில் ... அவனிடமெடுத்த பணம் எங்கே;' என்று கேட்டார். அவரையறியாமலே அவரது உடலில் ஒருவகை அமங்கல உணர்வு இழையோடியது.

'வைத்திருக்கிறோம்... நாங்கள் செய்த மன்னிக்க முடியாத குற்றத்தை உங்களுடைய ஒரு சில வார்த்தைகள் தண்டனையளித்துத் திருப்பி விட்டன. உங்களை நான் ஒரு தெய்வமாக மதிக்கிறேன். உண்மையிலேயே உங்களைத் தெய்வமாக மதிக்கிறேன், ஐயா!' என்று உணர்ச்சியின் ஆழத்தில் அமிழ்ந்து, தன்னையே மறந்து, தானே உணர்ச்சி மயமாகிக் கூறினான்.

'மிக்க மகிழ்ச்சி தம்பி...! ஆனால் இந்த உலகத்தில் பணம் முககிய இடம் பெற்றிருக்கும் வரை யாரும் இலட்சியவாதம் பேச முடியாது. நேற்றுவரை உறுதியோடு இருந்த நான், இன்று என் மனச்சாட்சியைக் கொன்று விட்டு உறுதி குலைந்து நிற்கிறேன்...' என்று சிந்தனை வயமாகக் கூறினார்.

'என்ன...? உறுதி குலைந்து விட்டீர்களா?' நீங்களா உறுதி குலைந்து விட்டீர்கள்?' எனப் பரபரப்போடு வினவினான்.

'எல்லாம் ஆறுதலாகக் கூறுகிறேன். பின்நேரம் என்னை வீட்டில் சந்தியுங்கள். பண்டாவையும் கூட்டி வாருங்கள்! அதுவரை நீங்கள் வாங்கிய பணம் என்னிடமே இருக்கட்டும்...' என்று கைகளைப் பிசைந்தார்.

இமைகொட்டக்கூட மறந்து, ஆச்சரியம் ஏமாற்றம், எல்லாம் ஆட்கொண்டவனாய் அவரையே நோக்கி நின்றான். அவனது கைகள் 'பக்கெற்'றிலிருந்த நோட்டுக்களை அவர் முன் நீட்டியது.

அவனை ஊடுருவி நோக்கினார். 'என்ன தம்பி? என் பேச்சைக் கேட்டதும் பயந்து விட்டவன் போலாகி விட்டீர்கள்? இத்தனை காலமும் சந்தர்ப்பமும், சூழ்நிலையும் என் இலட்சியத்தை எதுவும் செய்யாது என்று எண்ணி இருந்தேன். விதி வெறும் வேதாந்தம் என்று ஒதுக்கி வந்தேன். ஆனால், இன்று விதி இருப்பதை உணர்கிறேன் தம்பி! அதன் விளையாட்டால்தான் மனிதர்கள் தவறு செய்கின்றனர்...மறையப் போகும் ஒரு ஜீவன், தன் ஆசையைக் கொன்று விட்டு மடிவதை யாரும் விரும்பமாட்டார்கள். அந்த ஆசையை வாழச் செய்யஎன் மச்னசாட்சியைக் கொன்றுவிட்டேன் தம்பி...! என்று நெடுமூச்செறிந்தவாறே கூறினார்.

அவனது நெஞ்சில் பேரலைகள் மோதிப் பிளந்தன. மௌனச்சிலையாய் நின்றான். தெய்வத்தின் நிலையில் உள்ளத்தில் நிலைத்தவரைத் திடீரென்று ஒரு மனிதப் பேயின் நிலைக்கு இறக்கிவைக்க அவனது மனம் அருவருத்தது.

அவன் ஏன் இப்படியாகி விட்டான் என்பதைப்புரிந்து கொண்ட அவர் 'சரி நீங்கள் போய் வேலைகளைக் கவனிக்கலாம்... எல்லாம் பேசவேண்டிய இடத்தில் பேசுவோம்' என்று கூறியவாறே, அவனை நிமிர்ந்து பார்க்க அஞ்சுபவராய்த் தலையை நிலம் நோக்கித் தாழ்த்தினார்.

அவன் வழக்கம் போல் கையை உயர்த்தி மரியாதை செய்து விட்டுக் கம்பீரமாக நடந்தான். அவனது சப்பாத்தின் ஒலி 'டக்,டக்' கென்று மெது மெதுவாய் மறைந்தது.

கையை விரித்து உற்றுப் பார்த்தார் நீல நோட்டுக்கள் அவரைப் பார்த்துக் கலகலத்தன. கை நடுங்கியது. பணநோட்டுக்கள் பஞ்சாகக் காற்றில் பறந்தன.

(யாவும் கற்பனை)

எம். ஐ. எம். தாஹிர்

# திருக்கேதீச்சரத்தில் சிரமதான இயக்கம்

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் இத்திங்கள் 18ம் நாள் திருக்கேதீச்சரத்தில் நடைபெற விருக்கும் சிரமதான இயக்கம்பற்றி பின் வரும் அறிக்கையை இந்து வாலிபர் சங்கச் செயலாளர் விடுத்துள்ளார்:

சென்ற ஆண்டு திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற சிரமதானத்தில் பங்குபற்றிய தொண்டர்களின் கருத்துக் கேற்ப எமது சங்கம்இவ்வாண்டும் திருக்கேதீச்சரத்தில் வருகிற மார்கழித் திங்களில் ஒரு சிரமதான இயக்கத்தை நடாத்த உத்தேசித்துள்ளது.

சென்ற ஆண்டுபோலல்லாது இவ்வாண்டு திருவெம்பாவை நாட்களின் இறுதியில் சிரமதானம் ஆரம்பமாகும். அதாவது மார்கழித் திங்கள் நாலாம் நாள் (18-12-64) தொடக்கம்13ம் நாள் (27-12-64)வரைநடைபெறவிருக்கிறது.

சிரமதான இயக்கத்தில் பங்கு பற்றும் தொண்டர்களுக்குத் தங்குவதற்கு இடவசதியும், உணவு வசதியும் திருக்கேதீச்சர திருப்பணிச்சபையினரால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. பிரயாணச் செலவைமட்டும் தொண்டர்கள் தாமே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். மாணவ மாணவிகள் தம் பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் வருதல் விரும்பத்தக்கது.

ஆகவே இப்பணியிற் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் தயவுசெய்து தமது பெயர் முகவரியோடு தாம் எத்திகதிதொடக்கம் பங்குபற்ற விரும்புகிறார்கள் என்பன போன்ற விபரங்களை எமக்கு விரைவில்(17-12-64க்குமுன கிடைக்கக்கூடியதாக) அனுப்பிவைத்தால் நாம் அவர்களுக்கு இட, உணவு வசதிகள் செய்வதற்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கும் உதவியாக இருக்கும்.

கடிதங்கள் யாவும் கீழ்க் காணும் முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.

பொதுச் செயலாளர்,
இந்து வாலிபர் சங்கம்,
221, செட்டித்தெரு,
கொழும்பு-11.

# பல்வகைப் பேராசிரியர்களுள்


(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் தமிழில் ஒரேயொரு நாளேடு தான்வெளிவந்தது. சிங்கப்பூரிலிருந்து வெளிவந்து சிறந்த தொண்டாற்றிய 'தமிழ் முரசு' தொழிலாளரின் பிணக்குக் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது. எனவே, தமிழ் நேசன் மட்டுமே தமிழுக்குத் தொண்டாற்றிற்று. அதன் உரிமையாளர திரு. மலையாண்டிச் செட்டியாரும், முகாமையாளர் திரு. நடராசன் அவர்களும், ஆசிரியர் முருகு சுப்பிரமணியன அவர்களும்தெய்வபக்தியும் தமிழ்ப்பற்றும் மிக்கவர்கள். தமிழ்மொழியினதும் தமிழ் இனத்தினதும் ஆக்கங் கருதி அவர்கள் தம நளேட்டின் வாயிலாகப் பலபணிகளைச்செய்து வருகின்றனர். இலங்கையிலும் தமிழ்நாட்டிலுமுள்ள நாளேடுகள் பலவற்றிலும் பார்க்க, மலேசியாவிலுள்ள நாளேடுகள்தமிழ் மொழியின் ஆக்கத்துக்கும் தமிழ்ச் சங்கங்கள் தமிழ்க் கழகங்கள், போன்ற தமிழரின் பொது நிலையங்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் உழைக்கின்றன. பிற பத்திரிகைகளில் விளம்பரப் பகுதிகளில்வெளியிடப்படும் விடயங்களை மலேசியப் பத்திரிகைகள் செய்திகளாக வெளியிட்டுத் தமிழ் மக்களின் பொதுப் பணிகளை ஊக்குகின்றன.

### முகாமையாளரும் ஆசிரியரும்

திரு. நடராசன் அவர்கள் தமிழ்ப் புலமையும், சமயப் பற்றும் நிறைந்தவர். 'நடனம்' எனும் புனை பெயருடன் நூல்களுக்கு அவர் எழுதும் மதிப்புரைகள் இலக்கியத் திறனாய்வுக்கு எடுத்துக்காட்டுக்களாக மிளிரத்தக்கன. தமிழ்நேசன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் பத்திரிகைத் தொழிலிற் பல்லாண்டு பயிற்சிபெற்றவர். தமிழகத்திலும் சிங்கப்பூரிலும் தாம் பெற்ற பயிற்சியினாலும், தம் பெரும் பண்பினாலும் தமிழ் நேசனைச் சிறந்தவொரு நாளேடாக அவர் வளர்த்துளர். அடக்கமும் ஆன்றபுலமையும் பயிலுதற்கினிய பண்பும் நிறைந்த அவர் பத்திரிகை ஆசிரியர்கள் யாவரும் பின்பற்றுதற்கு உரிய ஓர் இலட்சியப் பத்திராசிரியராவார்.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலுமுள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்களிற் பலர் பொதுப்பணிகளில் ஈடுபடுவதில்லை. ஈடுபட வேண்டுமெனும் உளப்பாங்கும் அவர்களிடத்து இருப்பதாகக் கூறமுடியாது. சிலர் 'துட்டில்லாமல்' ஏன் ஊருக்கு உழைக்கவேண்டும் என்பர். இந்தத் தனித்து வாழும் போக்குக்குமாறாகப்பொதுப் பணிகள் பலவற்றிற் பங்கு கொண்டு ஓய்வின்றி உழைப்பவர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள். அவர்கள் போகாத ஊர்களும், உரை நிகழ்த்தாத விழாக்களும் இல்லை எனலாம். அவருடைய ஓய்வு நேரம் முழுவதும் ஊர்தோறும் உரையாற்றுவதில் கழிகின்றது. தம் எழுத்தாலும் உரையாலும் அவர் செய்யும் தமிழ்ப் பணிகளை அளவிட்டுரைக்க முடியாது. அமைதியாகவும்தெளிவாகவும் கருத்துக்களைத் தொடர்புறுத்திக் கேட்போரைப் பணிக்கும் முறையில் ஆற்றொழுக்குப் போல அவர் பேசுவதைப் பல முறை கேட்டிருக்கிறேன். பல மேடைகளில் என்னுடன் அவரும் உரையாற்றியுளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று படுவோம்! விரைந்து செல்வோம்!

## கழகத்தின் தலைமை மலையக மக்களுக்கு வாழ்வளிக்கும்

**இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாட்டையொட்டி எழுது வினைஞர் சங்கத் தலைவரும், மொழி வழித் தொழிற் சங்க கூட்டணியின் செயலாளருமான திரு. செ. கோடீசுவரன் இவ் விசேட கட்டுரையை எழுதியுள்ளார்.**

மலைவாழ் தமிழ்த் தொழிலாளர்களின் மொழி வழித் தொழிற்சங்கமான இலங்கைத்தொழிலாளர்கழகத்தின் முதலாண்டு பேராளர் மாநாடு அட்டனில் நடைபெறுவதறிந்து உள்ளம் உவகை எய்துகிறது.

ஈழத்துத் தமிழர்களின் இழி நிலையை கண்டு இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் இருண்ட வாழ்வில் மொழி வழித் தொழிற் சங்கங்கள் எழுஞாயிறென எழுந்தன.

### தமிழ் தொழிலாளரும் சிங்கள கட்சிகளும்

தமிழினத்தை அழித்து ஒழிக்கும் நடவடிக்கையிலே தமிழ்பேசும் தொழிலாளர்களேமுதற் பலிகடாக்களாக்கப்பட்டு வந்தனர் இந்நாட்டு தமிழ்பேசும் இனத்தின் சரி அரைப்பங்கினரை யூ. என். பி. அரசாங்கம் அழிக்க முற்பட்டபொழுது; அந்த



கட்டுரை ஆசிரியர்

அரைப்பங்கினர் தமிழினத்தின் உழைப்பாளிகளான-மலைநாட்டுத் தொழிலாளர்களாகவே இருந்தனர்.

'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தை அமுல்நடத்த முற்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் உழைப்பாளிகளான அரசஊழியர்களையே கொலைக்களத்துக்குக் கொண்டு சென்றது. தமிழினத்தை அழிக்க-சிங்கள அரசு-தமிழ்த் தொழிலாளர்களை முதற் பலிகடாக்களாகியபொழுது- தொழிலாளர் தோழமையை-ஒற்றுமையை முன்பு வலியுறுத்திவந்த இடதுசாரிகளும் அரசாங்கத்தின் அநீதிகளுக்கு எதிராக அவர்கள்பேசும் 'வர்க்க ஒற்றுமை'யின் பெயரால் தட்டிக்கேட்கவில்லை. மாறாக இனவெறியினால் உந்தப்பட்டு அரசாங்கத்தை தட்டிக்கொடுத்தார்கள்.

### மொழிவழி பிரிந்தோம்

இந்நிலையில் மொழி வழி பிரிந்தால் வாழ்வோம் இன்றேல் வீழ்வோம். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற குரலெழுப்பி-தமிழ் பேசும் தொழிலாளர் துயர் துடைக்கவும் இன விடுதலைக்கு ஊக்கம் கொடுக்கவும் தோன்றிய மொழி வழித் தொழிற்சங்கக் குடும்ப தலைப்பிள்ளையாக விளங்கும் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சார்பிலே-எங்கள் குடும்பத்தின் இன்னேர் கொழுந்தாக வளரும் இலங்கைத் தொழிலாளர்கழகத்தின் முதலாண்டுப் பேராளர் மாநாடு வாழ்க! வெல்க! என வாழ்த்துவதிலே பூரிப்படைகிறேன்.

தமிழ்பேசும் தொழிலாளி உலகிலேயே மிகக் கேவலமாக நடத்தப்படுகிறான். கன்னித் தமிழ் நாட்டார் அன்னியன்கீழ்ச்சென்று அல்லற்படுகின்றார்; அழிகின்றார் இலங்கையிலேயென்றாலென்ன, மலாயாவிலே என்றாலென்ன, ஆபிரிக்காவிலேயென்றாலென்ன, தமிழ்த் தொழிலாளி எங்கெல்லாம் வாழ்கின்றானோ அங்கெல்லாம் அவன் அடிமை. பிறர் வாழ தான் உழைத்துக் கொட்டும்வாயில்லாப் பூச்சி. ஏன் இந்த நிலைமை.

இலங்கையின் மதி மந்திரியாக இருந்த ஒருவர் மலசலம் சுத்தி செய்வதனுலும் அது தமிழனுக-பாராண்ட. திராவிட இனத்தின் மரபினராகத்தான் இருக்கவேண்டும் என்று வாய்க்கொழுப்பினால் பேச- அதையும் கேட்டுக்கொண்டு உல்லாசபுரியினரின் சுகவாழ்வுக்கு உழைத்துக் கொட்டதான் தமிழ் தொழிலாளர்களினால் முடிகிறதே. எம்மை இழித்தவனை-பழித்தவனை ஏன் என்று கேட்க முடிகிறதா?

இந்த இழி நிலைக்குக் காரணம் என்ன? தமிழினம் தன் மானமிழந்து விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்கும் வரைக்கும் தமிழ் தொழிலாளியின் வாழ்வு மலர முடியுமா?

தொழிலாளியாக மட்டுமல்லாது தமிழனுகவும் பிறந்து விட்டவனுக்கு வாழ்வேது? வளமேது! பிறர் வாழ தான் உழைப்பதும் அவமானங்களைத் தாங்கி அடிமையாக வாழவேண்டுமென்பது தானே இன்று அவனுடைய நியதி:

### ஒரு அணியில் திரள்வோம்

இந்த இழிநிலை நீங்க பிறர் உதவமாட்டார்கள்? ஏன் அவர்களுக்கு எங்கள் அழிவிலே லாபமிருக்கின்றதல்லவா! ஆகவே நாம் செய்யக் கூடியது என்ன? எமது ஒன்று

மலை நாடு

பட்ட பலத்தினால் எமது உரிமைகளுக்காகப் போராடுவதுடன்— தாழ்ந்துவிட்ட தமிழினத்தின் தன்மானத்தைக் காத்து, விடுதலை இழந்த தமிழினம் விடுதலை பெற துணை நின்று செயல் படுவதே எமக்கு முன் உள்ள ஒரே வழி. இந்தத்தத்துவத்தின் அடிப்படையிலேஎழுந்த மொழிவழித் தொழிற் சங்கங்களிலேயே இன்று பலம் மிக்க சங்கமாக உள்ளது இலங்கைத் தொழிலாளர் கழகம்.

மலையகத்திலே மிக வேகமாக வளர்ந்து வருகிறது கழகம். கழகம் மேலும் மேலும் வளர வேண்டும். வெகு விரைவிலேயே மலைநாட்டுத் தொழிலாளர் அனைவரையும் தனது அணியில் திரட்ட வேண்டும். கழகத்தின் கட்டுப்பாடான, உறுதியான வளர்ச்சியிலே தான் மலைநாட்டு தமிழ் தொழிலாளரின் வருங்கால வாழ்வு, உரிமை வாழ்வு தங்கியிருக்கிறது என்பதை மலைவாழ் தமிழ்த் தொழிலாளர்கள் மறந்துவிடக் கூடாது

கழகத்தின் தலைமையிலே மலைநாட்டுத் தொழிலாளர்களும், இதர மொழி வழித் தொழிற் சங்கங்களின் தலைமையிலே ஏனைய தமிழ் தொழிலாளர்களும் ஒன்று திரண்டு உரிமைப் பாதையிலே—விடுதலைப் பாதையிலே விரைந்து செல்வோம்.

## மலையகத்தில் இ. தொ. கழகத்தின் வளர்ச்சி

### தமிழரசுத் தலைவர் பாராட்டு

'இதற்கு முன் நான் இருமுறை இதே இடத்தில் நடைபெற்றஎமது கழக கூட்டத்திற்கு வந்துள்ளேன். அக் கூட்டங்களை விட இன்று இம் மாபெரும் சன சமுத்திரத்தைக்கண்டவுடன் எமது கழகம் மலையகத்தில் அதி விரைவில் முன்னேறுகின்றது என்பதை நினைத்துப்பெருமையடைகிறேன் அத்துடன் ஊர்வலத்தில் ஒலிக்கப்பட்ட'ஈழநாடு எங்கள் நாடு, எமது இனம் தமிழ் இனம், எமது மொழி தமிழ்மொழி' என்ற மூன்று கோஷங்களையும் நான் வரவேற்கிறேன்' என்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் கங்குவத்தை பஸ் நிலையத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

கூட்டம் நடைபெறும் இடத்துக்கு மஸ்கெலியா இலங்கைத் தொழிலாளர் கழக அலுவலகத்திலிருந்து தமிழரசுத்தந்தையை லக்ஸபான தோட்டத் தொழிலாளர்களால் அன்பளிப்புசெய்யப்பட்ட ரதத்தில் வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு. எஸ். களியபெருமான் பேசுகையில் கூறியதாவது:-

'எமது கழகம் மலையகத்திற்குவந்ததையிட்டு மாற்று கட்சிகள் ஏன் எதிர்க்கின்றன என்பது விளங்கவில்லை. தொழிலாளர்களுக்கு எந்த தொழிற் சங்கத்திலும் சேரவோ, விலகவோ உரிமையுண்டு. இதைத் தடுக்க யாராலும் முடியாது மற்றக் கட்சிகளில் சேர வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனுல் எமது கழகத்தில் சேர விடாதபடி மற்றக்கட்சிகள் பெரும் பிரயத்தனப்படுகின்றன. இதையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு இம் மலையகத்தில் எமது கழகத்தை முன்னணியில் நிற்கச் செய்வார்கள் நம் மக்கள்.'

அடுத்து பேசிய திரு. கரிகாலன் கூறியதாவது:-

'உழைத்து உழைத்து உருக்குலைந்த இப் பாமரத் தமிழ்த் தொழிலாளர்களை [illegible] படு பாதாளத்தில் தள்ளி



வேடிக்கை பார்க்க முனைந்துள்ளது இந்திய அரசு.

மலையகத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை, குடியுரிமை,மொழியுரிமை,கல்வியுரிமை, பிரசாவுரிமை, இப்படிப்பட்ட அத்தியாவசியமான உரிமைகள் அனைத்தும் மீண்டும் பெற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் கழகம், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகிய மலையகத்தின் மூன்று பிரதான கட்சிகளும் முன்வந்து செயல்பட வேண்டும்அப்படி செயல்படத் தயங்கும் கட்சிகளை இம் மலையக மக்கள் மலையகத்தை விட்டே விரட்டவேண்டும்.

கடைசியாகப் பேசியஜனப் மௌசூர் மௌளானுபேசியதாவது:-

### அமைப்பு விதிகளில் மாற்றம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் அமைப்புவிதி 6 (இ) 1 பிரிவு இவ்வாரம் நடைபெறும் மாநாட்டில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

அமைப்பு விதி 6 (இ) 1 'அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் 50 சதம் மாதமொன்றிற்கு உறுப்புரிமைப் பணமாகச் செலுத்த வேண்டும். இத்தொகையை ஆண்டுப் பொதுக்கூட்டம் அல்லது சிறப்புக் கூட்டம் மாற்றலாம்' என்று இருக்கிறது. இவ்விதிபின்வருமாறு திருத்தப்படும்: 'உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை ரூபா 2,50 உறுப்புரிமைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். இத் தொகையை ஆண்டுப் பொதுக்கூட்டம் அல்லது சிறப்புப் பொதுக்கூட்டம் மாற்றலாம்.'

'இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒரே குடும்பமாக வாழும் தமிழ் மக்களை தாய் வேறு, தந்தை வேறு, பிள்ளை வேறாகப் பிரித்து நசுக்கியழிக்க கொண்டுவரப்பட்ட ஒப்பந்தமாகும். மலையகத்திலுள்ள கலியாண வயதுள்ள பருவ ஆண்களும், பெண்களும் ஐந்தேகால் லட்சத்தில் கலியாணம் செய்வதா? அல்லது மூன்று லட்சத்தில் கலியாணம் செய்வதா? என்ற கவலையில் மூழ்கியுள்ளார்கள். இப்படிப்பட்ட இன்னல்கள் தமிழர்களுக்கன்றி வேறுஇனத்திற்கு ஏற்படமுடியாது. தமிழர்கள் எந்த நாடு சென்றாலும் சிறுபான்மையோராகத் தான் வாழவேண்டும்; ஆகவே தமிழ்மக்கள் இருக்கும் நாட்டையே தன் நாடாகக் கொண்டு செயலாற்றவேண்டும்.

## 'தேயிலைத்தொழிலாளர்'

—கவியோகி சுத்தானந்த பாரதியார்—

"பறித்த தேயிலையை உலர்த்திப்
பாடஞ் செய் ஆலையிலே
பொறிகள் சுழன்றுடும்—அங்கே
பொங்கி வரும் பணமும்

அடித்திடும் கருவி—இடித்ததைச்
சலித்திடும் கருவி
பொடித்திடும் கருவி—கசடைப்
போக்கிடும் கருவி

வாட்டிடும் கருவி—நன்ருய்
வடித்திடும் கருவி
ஓட்டி உழைப்பவர்கள்—நாங்கள்
உண்மைத் தொழிலாளர்

இருட்டு மூலையிலே—சுடும்
இயந்திர வாலையிலே
உருட்டும் ரோதைகளில்—எங்கள்
உயிரைத் தந்துழைப்போம்"

தொகுப்பு:- சி. கே. முருகேசு
எட்டியாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாணப் — புதினம்

# சமசமாஜிஸ்டுகளின் 'சமத்துவம்'

சமசமாஜக் கட்சி 1960 ம் ஆண்டு மொழிக் கொள்கையில் அடித்தகுத்துக்கரணத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு வட பகுதியிலிருந்து வந்த ஓரளவு செல்வாக்கையும் இழந்தனர். என்றாலும் தொழிலாளர் மத்தியில் அவர்களுக்கு சிறிதளவு செல்வாக்கு இருந்து வந்தது. இந்த ஆண்டு நடுப் பகுதியில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்ததினால் அச் செல்வாக்கையும் சமசமாஜக் கட்சி படிப்படியாக இழந்து வந்தது. சிறி பஸ் வண்டிகள் வட பகுதிக்கு படையெடுத்ததும் தொழிலாளர்கள் சமசமாஜக் கட்சியினரைப் பகிரங்கமாகவே கண்டிக்க முன் வந்தனர். என்றாலும் சமசமாஜக் கட்சியினர் சிறி பஸ் வண்டிகளுக்கு வட பகுதியில் வரவேற்பிருப்பதாக பிரசாரத்தின் மூலம் காட்டிக் கொள்ள முற்பட்டனர்.

இந்த முயற்சியில் சமசமாஜக் கட்சியினர் தோல்வியுற்றதுடன் பல பிரச்சினைகளுக்குள்ளும் தங்களை மாட்டிக் கொண்டனர். குறிப்பாக தெல்லிப்பழைச் சந்தியில் சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் மூவர் சிறி பஸ் வண்டிக்கு மாலை போட்டு வரவேற்று, அதை மக்கள் வரவேற்பாகக் காட்டிக் கொள்ள முயன்றனர். இந்த மாலை போட்டு வரவேற்பு நடாத்திய மூவரில் ஒருவர் கிராமசபை உறுப்பினர். இவர் ஒரு சிகை அலங்கார (சலூன்) நிலையத்தின் சொந்தக் காரரும் கூட. இந்த சிகை அலங்கார நிலையத்தில் இன்று வரை சிறுபான்மைத் தமிழர்களுக்கு சிகை அலங்காரம் செய்வது கிடையாது. ஆனால், சிறி பஸ் வண்டிக்கு மாலை போட்டு வரவேற்று தன்னையும் ஒரு குட்டித் தலைவராகக் காட்டிக் கொள்ள இவர் முயன்றதும், சிறுபான்மைத் தமிழர்கள் இச் சிகை அலங்கார நிலையத்தில் தங்களுக்கும் சிகை அலங்காரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். 'கிணறு வெட்டப் பூதம் தோன்றியது' போன்று, இச்சிகை அலங்கார நிலைய உரிமையாளருக்கு சிறுபான்மைத் தமிழர்களின் வேண்டுகோள் பெரும் பிரச்சினையைக் கொடுத்துள்ளது.

சிறி பஸ் வண்டிக்கு மாலை போட்ட மறு நாளிலிருந்து இந்த சமசமாஜப் பிரமுகர் தனது சிகை அலங்கார நிலையத்தின் பக்கமே செல்வதில்லையாம். இதனால் தெல்லிப்பழைக் கிராமத்திலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் பெரிதும் ஏமாற்ற மடைந்துள்ளனர். சமசமாஜிஸ்டுகளின் சமத்துவம் 'இது தானா' என்று அவர்கள் சமசமாஜத் தலைவர்களைக் கேட்கிறார்கள்.

●

வட பகுதியில் மீண்டும் இராணுவத்தின் அட்டகாசம் தலை தூக்கியுள்ளது. கடந்த வாரம் தொல்புரத்தைச் சேர்ந்த காலம் சென்ற சுப்பிரமணியம் முத்துக்குமாருவின் அந்தியேட்டி கிரிகைகள் செய்வதற்காக ஒரு கோஷ்டியினர் மோட்டார் வண்டியில் சுழிபுரம் திருவடி நிலைக்குச் சென்றனராம். அந்தியேட்டி கிரிகைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரும், அவர்கள் சென்ற மோட்டார் வண்டிச் சாரதியும் கடற்கரையோரமாக இருபதிற்கு மேற்பட்ட ஓவல்ரின் குவளைகள் இருப்பதைக் கண்டனராம். அவ்விடத்துக்குச் சென்று ஓவல்ரின் குவளைகளைப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு இராணுவக் கோஷ்டியினர் அவ்விடம் வந்து அவர்கள் இருவரையும் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டிக் கைது செய்து காங்கேசன் துறையிலுள்ள இராணுவ தலைமை நிலையத்திற்கு அழைத்துச் சென்றனராம். அங்கு விசாரணை நடாத்திய பின்னர் அவர்கள் இருவரையும் ஒருவாரத்திற்குள் மீண்டும் இராணுவ நிலையத்திற்கு வருமாறு கூறி விடுதலை செய்துள்ளார்களாம்.

திருவடி நிலைக் கடற்கரைக்கு ஓவல்ரின் குவளைகள் எப்படி வந்து சேர்ந்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது. இது இராணுவத்தினரின் செயல் என்று பலரும் அபிப் பிராயப்படுகிறார்கள். திருவடி நிலையத்தில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் அப்பகுதி மீனவர்களை துன்புறுத்தும் நோக்கத்துடனேயே இச்செயலில் முனைந்திருக்கலாம் என்றும் சில வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

●

யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது சென்ற ஆண்டு நடுப் பகுதியிலிருந்து சில காலம் செயலற்று நின்றுவிட்ட இச் சங்கம் மீண்டும் புனருத்தருணம் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் முன்னாள் காப்பாளரான திரு. ச. குலசிங்கம் அவர்களுடைய உருவப்படம் கடந்த வாரம் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது யாழ்ப்பாண வர்த்தக ஊழியர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

—சங்கிலியன்

## "இவரும் ஒரு வேட்பாளராம்"

பாராளுமன்றம் 17-ம் திகதி கலைக்கப்படும் என்று செய்தி அறிவிக்கப்பட்டதும், மூலையில் தூங்கிக் கிடந்த ஓய்வு நேர அரசியல் வாதிகள் எல்லாம் சால்வையைத் தட்டித் தோளில் போட்டுக் கொண்டு தேர்தல் களத்தில் குதிக்க தயாராகியுள்ளார்கள். எங்கும் தேர்தல் பற்றியே பேசப்படுகிறது வட பகுதியில் கிளிநொச்சித் தொகுதியும், யாழ்ப்பாணத் தொகுதியுமே தேர்தல் களத்தில் முன்னணி வகிக்கின்றன.

யாழ்ப்பாணத் தொகுதியில்—சுடச் சுட சுவர்ச்சிகரமான தலைப்புகளை கொடுத்து செய்திகளை வெளியிடும் நாளாந்தக் கண்ணாடி (டெயிலி மிரர்) யின் ஆசிரியர்-திரு. ரெஜி மைக்கேல் அவர்களும் ஒரு வேட்பாளராக முன் வருவார் என்று தெரிகிறது. பாண்டுங் மாநாட்டு செய்திகளை சேகரித்து பெருமை பெற்ற இவரே வட பகுதியின் கேந்திர நிலையமான யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதியாக இருக்கத் தகுதியுடையவர் என்று ஒருவர் கூறியுள்ளாராம். இவர் தேர்தலில் வெற்றி பெற்றாலும் தொடர்ந்து பத்திரிகை ஆசிரியராகவும் கடமையாற்றுவாராம். திரு. ரெஜி மைக்கேல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக யாழ்ப்பாணத் தொகுதிக்கு நிறுத்தப்பட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கெதுவுமில்லையென்றும் பேசிக் கொள்ளப்படுகிறது.

தமிழ்க் காங்கிரஸ் வட்டாரங்களிலும், செய்திகளைத் திரித்து வெளியிடக் கூடிய பத்திரிகையாளர் ஒருவரே யாழ்ப்பாணத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயம் நிலவுகிறதாம்.

## இருவரும் ஒருவரே

இலங்கை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் வெளிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்ன) போன்றவர்களுடன் சேர்ந்து நீங்களும் எங்களை எதிர்க்கிறீர்களா என்ற கேள்வியை எங்களிடம் பல சந்தர்ப்பங்களில் கேட்கிறார்கள். இன்று அவர்கள் சேர்ந்திருக்கும் கூட்டரசாங்கத்திற்கும் வெளிமடைப் பிரதிநிதி போன்றவர்களுக்கும் இடையில் ஒரேயொரு வித்தியாசம்தான் உண்டு. வெளிமடைப் பிரதிநிதி வாயால் பேசுவதைக் காரியத்தில் செய்து முடிப்பவர்கள் இந்தக் கூட்டரசாங்கத்தினர் இப்படி இந்தக் கூட்டரசாங்கத்தில் சேர்ந்திருப்பவர்கள்தான், இந்த சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் என்பதை எங்களால் ஒரு போதும் மறக்க முடியாது. ஆனபடியால், தமிழ் பேசும் மக்களின் பிரதி நிதிகளாகிய எங்களைப் பொறுத்த வரையில் வெளிமடைப் பிரதிநிதி பொன்றவர்களுக்கும் கூட்டரசாங்கத்தில் சேர்ந்திருக்கும் இவர்களுக்கு (சமசமாஜிஸ்டுகள்) மிடையில் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. ஆனால், இந்த நாட்டு மக்களில் ஒரு சாராரின் பிரதிநிதி என்ற முறையில் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்க்க வேண்டியது எமது கடமையாகும்.

ஃ

## மதமும் மார்க்சீயமும்

சிம்மாசனப் பிரசங்கத்திலே மூன்றாவது அம்சமாக, பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்கப்போகிறோம் என்று குறிப்பிட்டார்கள். இதில் ஆச்சரியமென்ன வென்றால் "மதம் மக்களுக்கு அபின்" என்று கூறிய மார்க்சிய வாதிகள், கௌரவ தெகிவளை—கல்கிசைப் பிரதிநிதி (திரு. கொல்வின் ஆர். டி. சில்வா) கௌரவ நிதி அமைச்சர் போன்றவர்கள், மதம் மக்களை மயக்கும் அபின் என்ற கொள்கையில் ஊறியவர்கள். இவர்கள் கூட இதனை வரவேற்கிறார்கள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம் இது. "மக்கள் அவர்களுடைய கஷ்டங்களிலிருந்து, வறுமையிலிருந்து தம்மை மறந்து, தாங்கள் சுரண்டப்படுகிறோம். என்பதை அவர்கள் உணராது மறைப்பதற்காக மதத்தை முதலாளி வர்க்கம் உபயோகிக்கின்றது" என்று கார்ல்மார்க்ஸ் கூறினார். இன்று நாட்டிலுள்ள விசித்திரம் என்னவென்றால், முதலாளி வர்க்கத்தின் விரோதிகள் நாங்கள் என்று தம்மைக் கூறுகின்ற, சோஷலிசவாதிகள் நாங்கள் என்று தம்மைக் கூறுகின்ற, அவர்களுடைய இந்த அரசாங்கத்தினர் மதத்தை உபயோகித்து மக்களை மயக்கப் பார்க்கின்றனர். எதற்கு? இரண்டு காரியங்களுக்கு மதத்தை உபயோகிக்கின்றது. மக்களை மயக்க மதுவை உபயோகித்துப் பார்த்தார்கள். அது சரிவரவில்லை. அதை விட்டு, இப்பொழுது மதம் என்ற அபினை உபயோகிக்கப் பார்க்கிறார்கள். மக்களை மயக்கி அவர்களின் அறிவுகளை அகற்றி அவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு மார்க்சீய வாதிகள் இந்த மதம் என்ற அபினை உபயோகிக்கின்ற விசித்திர நிலைக்கு இலங்கை மாறி விட்டது.

பாராளுமன்றத்தில்,
—திரு. அ. அமிர்தலிங்கம்.

# உங்கள் வாழ்வினை ஆராயுங்கள்

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் உங்கள் கவலைக்கான அத்தனை விடயங்களையும் ஆராய்ந்து அவற்றிற்கேற்ற எமது புத்திமதிகளை நாம் தயாரிப்பது ஓரளவு சிரமமானதுதான். நீங்கள் அனுப்பிவைக்கும் விடயங்களை காலப்பிரமாணத்துடன் தான் நான் பிரசுரிக்க முடிகிறது போதுமான இடவசதியின்மையினால் ஒவ்வொரு வாரமும் வெகு சிலரின் பிரச்சினைகளையே ஆராய்ந்து பதில் அளிக்கிறோம். சுருக்கமாகவே உங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து பதில் அளிக்கிறோம். சுருக்கமாகவே உங்கள் பிரச்சினைகளை எழுதி அனுப்புவதன் மூலம் எமக்கு உதவுங்கள் தயவு செய்து வெறுமனே உங்கள் பெயர் முகவரிகளைத் தந்துவிடுவதுடன் திருப்தியடையாதீர்கள் என்று மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—ஆனந்தன்.

'காளி'

உடற்கவர்ச்சியைக் காணும் நீங்கள் அந்தக் கவர்ச்சியுள் புதைந்துள்ள தீமையைக் காணவில்லை. உடலுறவு பற்றிய நூல்களைப் படித்து பாலுணர்ச்சியில் கவனம் செலுத்தாமல் இயற்கையில் பொதிந்துள்ள இரகசியங்களைக்காண முயலுங்கள் உங்கள் வாழ்க்கை எப்படி அமைந்தது என்பதைச் சிந்தியுங்கள். எப்போதும் பாலுணர்வைத் தூண்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு பிற விடயங்களைக் கவனியுங்கள். இது வெல்லாம் சாதாரணமான பழக்கம். மற்றவர்களின் தீய பழக்கத்திற்கு அடிமையாகி விட்டதைக் குறித்து நீங்கள் வெட்கப்படவில்லையே.....!

துன்பப்படும் மக்களைப் பற்றிச் சிந்திக்கவில்லையே...!

ஓய்வான பொழுதில் துன்பப்படுவோருக்காக ஏதாவது சேவை புரியுங்கள். அதில் உங்கள் நேரம் நல்ல முறையில் செலவழியும். முடியுமானால்...வழமையான தினசரி(சொந்த)ப் பழக்கங்களை சிறிது மாற்றிக் கொள்ளுங்கள். பெரியோர்கள் உள்ள இடத்திலிருப்பது நன்று.

நா.
திருகோணமலை

உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, உடலுக்கு ஏற்படப் போகும் தீங்கைத் தடுப்பதானால், உங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொள்வதே நல்லது. சுற்றம் சூழல் மாறுபட்டால் ஓரளவு நன்மை கிடைக்கும் ஏதாவது பொது விடயங்களில் மனத்தை ஈடு படுத்துங்கள். உடல் நன்றாகக் களைப்படையும் வண்ணம் ஏதாவது வேலை செய்யுங்கள். பக்தியூட்டும் நூல்களைப் படியுங்கள். தனியே எப்போதும் இருக்காதீர்கள். நன்றாகத் தூக்கம் வரும்வரை படுக்கைக்குச் செல்லவேண்டாம். கண் விழித்ததும் உடன் எழுந்து ஏதாவது அலுவலில் ஈடுபடுங்கள்.

சுந்தரம்
டிககோயா

நல்ல முடிவுதான். கூடுமானால் இதைப் பெரியோர்களின் ஒத்துழைப்புடனே செய்தல் மிக நன்று. உங்கள் பெற்றோர்களிடம் இதைத் தெரிவித்து அவர்கள் ஆசியைப் பெறுங்கள்.

ஆனந்தன்,
'கவலை வேண்டாம்'
த. பெ. இல. 1183
கொழும்பு-12

'அறிவியல் அரங்கு'
அடுத்த இதழில்
வெளியாகும்.

## கவலை வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோகரின் இலங்கேஸ்வரன் 526-வது முறை அரங்கேறியது

## பிருதிவிராஜ் பாராட்டு

இலங்கேஸ்வரன் மனோகரின் 'இலங்கேஸ்வரன்' நாடகம் 526வது மேடையேற்றம் பம்பாயில் பிரபல வட இந்திய நடிகர் பிருதிவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

மனோகரின் நடிப்புத் திறமையையும், நாடகத்தில் அவர் கையாளும் திறமையான உத்திகளையும் பிருதிவிராஜ் பாராட்டி மனோகரை தனது இளைய மகன் என்று ஆரத்தழுவி அணைத்துக்கொண்டபோது கரகோஷம் வானைத் தொட்டது.

பிரபல நடிகர் ராஜ்கபூரின் தந்தையே பிருதிவிராஜ் என்பது தெரிந்ததே.

நவம்பர் மாதம் 19ம்திகதி முதல் 30ம்திகதிவரை மனோகரின் நாடகக் குழுவினர் பம்பாயில் பல நாடகங்களை நடத்தினர். 'சாணக்கிய சபதம்', 'உலகம் சிரிக்கிறது', ஆகிய நாடகங்கள் இரசிகர்களின் பெரும் பாராட்டுகளைப் பெற்றன.

மேடைக்குப் பின்புறமாக வைத்து மனோகர் நாடகக் குழுவினர் அனைவரும் பழம்பெரும் நடிகப் புலவரான பிருதிவிராஜ் அவர்களின் அடிதொழுது ஆசீர்வாதம் பெற்றனர்.

இலங்கேஸ்வரன் நாடகத்தில் சூரிய சந்திரோதயக் காட்சிகள், இராமபிரான் ஓடத்தில் செல்வது போன்ற காட்சிகள் மிகவும் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தமை வட இந்திய இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. இந்நாடகம் மனோகர் குழுவினரால் இலங்கையிலும் சில வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### நடந்தவை

## ஊவாக்கல்லூரி கலைவிழா

ஊவாக் கல்லூரி தமிழ் மாணவ மன்றத்தினர், தங்களுடைய நான்காம் கலைவிழாவை கடந்த 28ம் திகதி நடத்தினர். திரு. ச. ஆறுமுகராஜா தலைமை வகித்தார்.

விழாவில் பிரதம சொற்பொழிவாளர்களாக திரு. தேவன், திரு. கந்தசாமி வித்துவான், கவிஞர் யுவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்கீத பூஷணம் எம். ஏ. சீலநாதன் அவர்களின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

புரட்சிப் புலவன் அம்பிகாபதி, கலைப்பித்தன், ஜூலியஸ் சீசர், டைரக்டர்-டமாரம், அந்தஸ்து, மானங்காத்த மாவீரன், ஆகிய நாடகங்கள் நடைபெற்றன.



உலகத்தில் எந்த நீதியும் எந்தப் பாசமும் ஒரு கட்டழகியின் கண் வலைக்கு ஈடுஇணையாக நிற்கப் போவதில்லை என்பதை புரட்சி நடிகர் சரோஜாதேவியின மருட்டும் விழிகளின் உருட்டிலே செயலிழந்து நிற்பதைக் கொண்டு அறிந்து விடலாம் அல்லவா? சினிமாஸ் திரைகளுக்கு வரும் 'நீதிக்குப் பின் பாசம்' படத்தில் இக் கட்டத்தைக் காணலாம்.

## சிவாஜியின் ஒரே மாதப்படம்

ஒரே மாதத்தில் சிவாஜி கணேசன் ஒரு படத்தைத் தயாரித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளார். புதிய பறவைக்கு அடுத்து சிவாஜி சொந்தத்தில் தயாரிக்கும் இப்படம் ஒரு புதுமைச் சித்திரமாக விருக்குமாம்.

சிவாஜியுடன் இப்படத்தில் தேவிகாவும் தோன்றுவார். காஞ்சனமாலா, தாம்பரம் லலிதா, குமாரி காஞ்சனா, சீதாலட்சுமி, ஓ. ஏ. கே. தேவர், நம்பிராஜன், சந்தானம் முதலிய சிவாஜி நாடக மன்ற நடிகர்கள் இப்படத்தில் தோன்றவிருக்கின்றனர். இப்படத்தில் மொத்தம்



நான்கு பாடல்கள் தான் இருக்குமாம்.

டி. ஆர். ரகுநாத் இப்படத்தை டைரக்ட் செய்யப் போகிறார்.



வாஞ்சையோடு ஓடிவந்த பாலகன் பாபுலுவை வாரி அணைத்து ஆறுதல் கூறுகிறார் வட இந்திய திரை அழகி ரான மீனாகுமாரி. நெஞ்சுருக்கும் இக் காட்சியை கொழும்பு கப்பிட்டல் திரையில் காணபிக்கப்படும் ஏ. வி. எம். தயாரித்தளித்த 'மெயின் சூப் [illegible] ஹூங்கி' இந்திப் படத்தில் காணலாம்.




## ஒரு லட்சம் டாலர் செலவில் நடிகைக்கு உடை

இலங்கையில் அண்மையில் திரையிடப்பட்ட பரிசு (THE PRIZE) படத்தில் தோன்றிய அழகி எல்க்சோமர், ஜோ ஹிம்ஸ் என்ற எழுத்தாளரை மணம் செய்யப்போகிறார். ஜெர்மனியில் பிறந்த எல்க்சோமர் தன்னுடைய தந்தையார் ஜெர்மனியில் ஏற்படுத்திய தேவாலயத்தில்வைத்து ஜோவைக் கைப்பிடிக்கப் போகிறார்.

திருமண வைபவங்களை முடித்துக்கொண்டு ஹாலிவூட் திரும்பியதும் 'பணவலை' (THE MONEY TRAP) என்ற படத்தில் கிளென்போர்ட், ரீட்ட ஹைவோர்த் ஆகியோருடன் படப்பிடிப்பு வேலைகளில் ஈடுபட விருப்பதாகத் தெரிகிறது.

இப்படத்தில் எல்க்சோமர் ஒரு லட்ச டாலர் பெறுமதியான ஒரு உடையை அணிவாராம்.

கிளென் போர்ட் என்ற நடிகருக்காக எம். ஜி. எம். நிறுவனம் ஒரு அலங்கார அறையை அமைத்துள்ளது. இதற்கான செலவு 15000 டாலர். இந்த அறையை



எல்க் சோமர்

வேண்டிய இடங்களுக்கெல்லாம் கொண்டு செல்லலாம். வானொலி, வர்ண டெலிவிஷன் எல்லாம் இவ்வறையில் பொருத்தப்பட்டிருக்கிறதாம்.

## 9 வேடங்களில் நாகேசுவரராவ்

நவராத்திரி படத்தை சாவித்திரி தெலுங்கில் தயாரிக்கப் போவதாக சென்ற வாரத்தில் நாம் செய்தி கொடுத்திருந்தோமல்லவா? தமிழில் சிவாஜி தோன்றிய நவரசபாகத்தை தெலுங்கில் நாகேசுவரராவ்



பொறுப்பேற்றுள்ளாராம். இப்படத்தை ஏ. சுப்பராவ் டைரக்ட் செய்கிறார். படப்பிடிப்புகள் [illegible] மாகும்.

## படகோட்டி அமெரிக்கா போகிறார்



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடித்த 'படகோட்டி' தமிழ் வர்ணப் படம் அமெரிக்கா போகிறது. இப்படத்தை 9 ஆயிரம் அடிகளாகக் குறைத்து அமெரிக்காவில் திரையிட சரவணா பிலிம்ஸ் வேலுமணி எண்ணியுள்ளார். இந்திய நாட்டு மீனவர்களின் வாழ்க்கை முறையினைச் சித்தரிக்கும் படமாதலால் அமெரிக்காவில் வெற்றியீட்டும் என்று வேலுமணி கருதுகிறார்.

### நடக்கவிருப்பவை

## மலைநாட்டில் எமன்

நோர்வூட் பழையகலைக்கு இராசாத் தோட்டத்திலுள்ள பாரதி மன்றத்தாரின் நாலாவது நாடகவிழா தமிழர் திருநாளன்று நடைபெறும். 'காதலுக்கு அப்பால்', 'ஓடாதே நில்', 'மலைநாட்டில எமன்' ஆகிய மூன்று நாடகங்கள் அன்று அரங்கேற்றப்படும்.

இந்நாடகங்களுக்கு கதை வசனம் எழுதி இயக்குநராகவும் இருப்பவர் என். கருப்பையா. காதலுக்குப் பின் நாடகத்தில் இவர் பிரதான பாகத்தில் நடிக்கிறார்: மற்றும் பஞ்சாட்சரம், லெட்சுமணன், பாக்கியம், சூரியநாதன், ராமு, பொன்னையா, முத்தையா, கந்தையா, செபஸ்தியான், கணபதி, சுப்பிரமணியம், முத்துலிங்கம் ஆகியோரும் தோன்றுகின்றனர்.

## காதலித்தால் போதுமா?

'காதலிப்பவர்கள் தங்கள் கடமைகளையும் மறந்துவிடக் கூடாது' என்ற கருத்தைக் கருவூலமாக வைத்து எழுதப்பட்ட 'ஜெயா புரடக்ஷன் சாரின்' 'காதலித்தால் போதுமா' எனும் சமூகநாடகம் 20-12-64ல் மேட்டுத் தெரு அர்ச். அன்னம்மாள் பாடசாலை மண்டபத்தில் மேடையேற்றப்படும்.

நாடகத்தின் சிறப்பை அதிகரிக்கும் அழகான காட்சியமைப்புக்களை இதன் தயாரிப்பாளரான பி. எஸ். கே. சாமி அவர்களே கவனித்து வருகிறார். சுப்பு ஒப்பனையாளராகக் கடமையாற்றும் இந்த நாடகத்தின் பாடல்களை கவிஞர் அருண்மொழி எழுத, பிரான்சிஸ் சேவியர் இசையமைத்துள்ளார். இதன் டைரக்டர் ஸ்ரீபாலகிருஷ்ணன்.

நடந்தவை
நடக்கவிருப்பவை
கலைப்பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத்தின் சிந்தனைக்கு

# யார் முற்போக்கு வாதிகள்?

## இன்றைய அரசியல் நோக்கு

ஆரியனை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சனப்பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதத்தில் சுதந்திர-சமசமாஜ கூட்டரசாங்கம் தோல்வியடைந்து விட்டது. ஆட்சி பீடத்தைத் தோற்கடித்த பெருமை சகல எதிர்கட்சியினருக்கும் இருந்த போதிலும், தமிழரசுக் கட்சியின் பங்கு தனிமுக்கியத்துவம் பெறுகிறது.

நாலு ஆண்டுகளுக்கு முன்னரும் இதே நிலையை இந்நாட்டு அரசியலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கியது. 1960ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி கூடுதலான அங்கத்தவர்களைப் பெற்றிருந்ததினால் ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. ஆனால், அரியணை உரை விவாதத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்த பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரியது.

### போற்றலும் தூற்றலும்

அன்று, தமிழரசுக் கட்சி ஐ. தே. கட்சியை எதிர்த்து வாக்களித்ததை ஒரு சாரார் பாராட்டினார்கள்; அதே நேரத்தில் மற்றுமொரு சாரார் பகிரங்கமாகவே கண்டித்தார்கள். கண்டனம் தெரிவித்தவர்கள்; நல்லதொரு சந்தர்ப்பத்தை தமிழரசார் நழுவ விட்டு விட்டனர் என்றார்கள். ஐ. தே. கட்சியை எதிர்த்து வாக்களித்ததின் மூலம் தமிழினத்திற்கே தமிழரசுக் கட்சி துரோகம் செய்துவிட்டது என்றும் கூறினார்கள்.

பாராட்டியவர்கள்; வானளாவ வாழ்த்தினார்கள். பிற்போக்குச் சக்திகளை முறியடிக்கும் பணிக்கு தமிழரசார் தலைமை தாங்குகின்றனர் என்றனர். முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து வாக்களித்ததின் மூலம் தமிழினத்திற்கு பெரும் நன்மையைத் தமிழரசார் செய்துள்ளனர் என்றார்கள். இப்படி வாழ்த்தியவர்கள், மார்க்சிய வாதிகள் என்று கூறிக்கொள்ளும் சமசமாஜ, கம்யூனிஸ்டுவாதிகளே.

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகச் செயற்படும் எந்த சிங்கள ஏகாதிபத்தியத்தையும் எதிர்ப்பதுஎமதுகடமை என்றனர் தமிழரசார். அந்தக் கொள்கையை அடுத்து நடந்த யூலை மாதப்பொதுத் தேர்தலில் முன்வைத்தனர்; முன்னரிலும் பார்க்கப் பெரும் வெற்றியையும்பெற்றனர்.

### இடைக்கால நிகழ்ச்சிகள்

தமிழரசார் ஐ. தே. கட்சியை எதிர்த்து வாக்களித்ததின் மூலம் அடுத்து வந்த யூலைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற வசதி ஏற்படுத்திக்கொடுத்தனர். ஆட்சி பீடத்தில் சுதந்திரக்கட்சி அமர்ந்ததும் ஏறிய ஏணியை எட்டி உதைத்தனர். அதன் முடிவு; ஓராண்டு காலத்திற்குள் வரலாறு

**பூங்குன்றன்**

காணாதஒருபெரும் போராட்டத்தை நாடுகண்டது. சுதந்திரக்கட்சியின் நிர்வாகம் வட-கிழக்கு மாகாணத்தில் செயலற்றது. இந்த உண்மையைப் பிரதமர் சிறிமாவோ அவர்களே மூதவையில் பகிரங்கமாகக் கூறினார்.

தொடர்ந்து பல அரசியல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த ஆண்டு நடுப்பகுதியில் உசலாடிக்கொண்டிருந்த சுதந்திரக்கட்சி அரசாங்கத்திற்கு, பதவிமோகங் கொண்ட சமசமாஜிஸ்டுகள் உயிர் கொடுத்தனர். சமசமாஜக் கட்சி பல ஆண்டுகளாகக் கட்டிக் காத்து வந்த கொள்கைகளைப் பலியிட்டு கூட்டரசாங்கத்தைத்தோற்றுவித்தது. ஆனால் சமசமாஜிஸ்டுகளின் கூட்டும்-முறிந்து விழுந்துகொண்டிருந்த சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றமுடியாது போய் விட்டது. அத்துடன் சமசமாஜிஸ்டுகளும் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக் கொண்டனர்.

### ஏற்றியவர்களே இறக்கினார்கள்

நாலரை ஆண்டுகளுக்குப் பின்னர் தனிச்சிங்களக் கூட்டரசாங்கத்தை முறியடிக்க மீண்டும் தமிழரசாருக்குஒரு சந்தர்ப்பம்கிட்டியது. தமது பணியை நிறைவேற்றினார்கள். 1960ம் ஆண்டு யூலைமாதம் அரச கட்டிலில் அமர சுதந்திரக் கட்சியினருக்கு உதவிய அதே தமிழரசார், மீண்டும் சுதந்திரக் கட்சியை அரச கட்டிலில் இருந்து இறக்கிவைத்துள்ளனர். அரச கட்டிலில் ஏற ஏணியாக உதவிய தமிழரசாரை அன்று உதைத்துத் தள்ளினார்கள் சுதந்திரக்கட்சியினர். இன்று தமிழரசார் சுதந்திரக் கட்சியினருக்கு நல்லபாடம் படிப்பித்து விட்டனர்.

நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் எந்தக் கொள்கையைத் தமிழ்பேசும் பொது மக்கள் முன் வைத்து சம்மதம் பெற்றார்களோ; அதே கொள்கையை இன்று அமுல் நடாத்தியுள்ளனர் தமிழரசுக் கட்சியினர். தமிழரசாரின் இன்றைய முடிவைக் கண்டு அன்று (1960 மார்ச்) தூற்றிய சக்திகள் இன்று பாராட்டவில்லை. ஆனால், அன்றுபாராட்டிய சக்திகள்-மார்க்சிய வாதிகள் என்று கூறிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகளும், சமசமாஜிஸ்டுகளும் இன்று தூற்றுகின்றனர். நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் இதே சமசமாஜ, கம்யூனிஸ்டுகள் தமிழரசாரை முற்போக்கு வாதிகள் என்றார்கள். இன்று அதே சமசமாஜ, கொம்யூனிஸ்டுகள் தமிழரசாரைப் பிற்போக்கு வாதிகள் என்கிறார்கள்.

### முற்போக்கும் பிற்போக்கும்

இத்தனைக்கும் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அன்று எந்தக் கொள்கைகளையும், இலட்சியங்களையும் கடைப்பிடித்து வந்ததோ, அதே கொள்கைகளையும் இலட்சியங்களையும் சிறிதும் மாற்றமின்றி இன்றும் கடைப்பிடிக்கிறது. ஆனால் கம்யூனிச, சமசமாஜக் கட்சிகளின் கண்ணுக்கு இன்று தமிழரசுக் கட்சி பிற்போககுச் சக்தியாகக் காட்சியளிக்கிறது.

சமசமாஜ, கம்யூனிசக்கட்சிகளைப் பொறுத்தவரையில் நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் கடைப்பிடித்த கொள்கைகளிலிருந்து இன்று நீண்ட தூரம் பிரிந்து சென்று விட்டனர் கடந்த ஆகஸ்ட் மாதம் அதி தீவிர வகுப்புவாதியான திரு. கே. எம். பி. இராசரத்தினா தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில் நெற்காணி மசோதா ஒன்றிற்கு கொண்டு வந்த திருத்தத்தை சமசமாஜிஸ்டுகள் ஆதரித்து வாக்களிக்கும் நிலைக்கு தீவிரசிங்கள வகுப்புவாதிகளாகி விட்டனர். எனவேதான் இவர்களின் கண்ணில் நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் முற்போக்கு வாதிகளாக விளங்கிய தமிழரசார் இன்று பிற்போக்கு வாதிகளாகக் காட்சி கொடுக்கிறார்கள் போலும்.

### காரணம் என்ன?

இத் திங்கள் 4ம் திகதி இரவு தோற்கடிக்கப்பட்ட பிரதமர் திருமதிசிறிமாவோ வானொலி மூலம் விடுத்த அறிக்கையில், டட்லி ஒப்பந்தத்தையும், புத்தமதத்தை அரசமதமாக்கும் திட்டத்தையும் அமுல் நடாத்த விடாது பிற்போக்கு சக்திகள் முறியடித்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார். எனவே தான் சமசமாஜக் கட்சியினரையும், கம்யூனிஸ்டுக் கட்சியினரையும் கேட்கிறோம்; இத் தற்கொலைக்கு ஒப்பான திட்டங்களை அமுல் நடாத்த முன்வராததனாலேயால்தான் அன்று முற்போக்கு அணியில் நின்ற தமிழரசுக்கட்சி இன்று பிற்போக்கு அணிக்குத் தள்ளப்பட்டுள்ளதா? இல்லையென்றால் நீங்கள் கூறும் காரணம்தான் என்ன?

நாலு ஆண்டு காலத்திற்குள் மலைவாழ் இந்தியத் தொழிலாளர்பற்றிய கொள்கையில் சமசமாஜிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் அடித்த குத்துக்கரணத்தை தமிழரசுக் கட்சியும் அடிக்கத் தவறியமையால் பிற்போக்கு அணிக்குத் தமிழரசுக்கட்சி தள்ளப்பட்டுள்ளதா?

### இதனால் பிரச்சினை தீராது

மார்க்சியதத்துவத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் சிங்கள வகுப்புவாதிகளான சமசமாஜிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் தமிழினத்தின் ஏகப் பிரதிநிதியான தமிழரசுக் கட்சியினரை பிற்போக்கு வாதிகள் என்றோ, முற்போக்குவாதிகள் என்றோ காலத்திற்குக் காலம் தங்கள் விருப்பம்போற் கூறுவதினால் தமிழ்பேசுமினத்தின் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதுமில்லை, தமிழரசுக்கட்சி தனது நோக்கத்திலிருந்து மாறிவிடப் போவதுமில்லை. இந்த உண்மையை சகல சிங்களக் கட்சிகளும் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

---

## அன்றும் இன்றும்

ஐ. தே. கட்சி பௌத்த ஜெயந்திக்கு நிதி ஒதுக்கிய போது, சமய அடிப்படையில் ஆட்சி அமையக் கூடாதென டாக்டர் பெரேரா சீறி எழுந்தார். ஆனால், இன்று அவர் மத அடிப்படையில் ஆட்சி நடத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கிறார்.

அளவெட்டியில்
—திரு. வி. தர்மலிங்கம் பா. உ.

---


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


---

# சங்கப் பலகை

## கொய்யாக் கனிகள்

ஆசிரியர்:
திமிலைத்துமிலன்,
வெளியீடு:
இராஜம் பிரசுரம்
திமிலைதீவு, மட்டக்களப்பு.
விலை: ரூ. 2.00

எண்ணங்களுக்கு எல்லை இல்லை. அதன் வேகத்துடன் இணைந்து செல்லுவோர் தாம் எத்தனையோ!...

ஆனால், இயற்கையுள் பொதிந்துள்ள பிரதிபலிப்புக்களைச் சாதாரணமாக யாருமே கருத்தூன்றிக் கணிப்பதில்லை.

இவ்வுண்மைகளை நமக்குக் கலைஞர்களும், கவிஞர்களும், தத்துவகர்த்தாக்களும் எத்தனையோ வழிகளில் நமக்களித்துள்ளனர்.

கவிஞர் திமிலைத்துமிலன் அவர்கள் ஆக்கியுள்ள 'கொய்யாக்கனிகள்' இவ்வுண்மையைத் தாங்கி நிற்கின்றது.

பண்டைய காவியங்கள் நமது இலக்கியம் வளரவும், இனம், மொழி பண்பாடு வளரவும்; எவ்வளவுக்கெவ்வளவு துணை நல்கினவோ அவைபோன்று இன்றைய இருபதாம் நூற்றின் கடைசி எல்லையில் வதியும் நமக்கு இத்தகைய காவிய நூல்கள் வேண்டற்பாலது. அதனைக் கவிஞர் திமிலைத்துமிலன் சாதித்திருப்பதும் வியப்பன்று.

'கொய்யாக்கனி'யில் இயற்கையுறவை மட்டும் [illegible] இயற்கையின் உள்ளும் புறமும் உணர்த்தும் குமுறல்களை உணர்த்தியிருக்கிறார்.

இம்மட்டும் அவர் விட்டு வைத்தாரா இல்லை...மனித உள்ளங்களையும் அவர் அகக்கண்களூடுருவிப் பார்வையைச் செலுத்தியுள்ளன.

உள்ளங்களின் கொந்தளிப்பை, குமுறலை, அன்பை, ஆவலை, பண்பைப் பல கோணங்களிலிருந்தும் பகுத்துணர்த்துகிறது.

முல்லையும், ராதையும், அனுலாவும், முரளியும், தங்கள் இதயங்களையே கவிஞரிடம் அர்ப்பணித்துவிட்டார்கள். அவைகளைச் சரியாகப் புரிந்துகொண்ட கவிஞர் அவ்விதயங்களின் குமுறற் காவியத்தை நமக்குத் தருகிறார்.

கவிஞரின் உள்ளத்தை, உந்தும் தியாகப் பண்பும், தேசபக்தியும், இனப் பெருமையும், பழிகண்டு குமுறும் துடிப்பும் கவிதைகளின் உயிர்நாடியாகத் தொனிக்கின்றன.

'பெற்ற அன்னை பிறந்த
மண்ணிலும்
பேணு சொர்க்கம்
இழிந்ததாம்.
கற்றவர் சொலும் வாய்
மொழி யெனின்
கண்டிலோம் மறுநல்வழி!
உற்ற நாட்டில் குனிவதை விட
மற்ற நாட்டில் தவழலாம்;
குற்றமில்லை யென்
றெண்ணினுன் முதற்
கூலியானது மிங்குதான்.'

என்று பாத்திரங்கள் மூலம் சொல்லுகிறார் கவிஞர்.

தமது பாத்திரங்கள் வாயிலாகக் கூறும் அவரது இலட்சியம் வெறும் கற்பனை [illegible]...கனவல்ல...கதையுமல்ல!...'உள்ளத்துப் பொங்கித் ததும்பி வழியும் உறுதியின் தொனி.'

ஆம்! 'கொய்யாக் கனிகள்' கூறும் காவியம் 163 கவிதைகளைக் கொண்டிலங்குகிறது எனினும் ஒவ்வொரு கவிதையும், காவியத்திற் கேற்ற சூழலையும், சந்தர்ப்பங்களையும், உவமைகளையும் நயம்பட உணர்த்துவனவாயுள்ளன.

கவிஞரது உவமைகளும் சொல்வளமும், கருத்தாழமும், கவிதாநயமும் நம்மை வசமாக்கிக் கொள்கின்றன.

'கொய்யாக்கனிகள்' பத்துப் பகுதிகளாக எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தலைப்புக்கும் 'கிருஷ்ணாவின்' சித்திரங்கள் விளக்கந் தருகின்றன. அட்டைப்படம் மூவர்ணங்களில் தீட்டப்பெற்றுள்ளது. கவிஞர் 'திமிலைத்துமிலனின்' 2 வது வெளியீடு இந்நூல். இந்நூலுக்கு வித்துவான், பண்டிதர், சைவப் புலவர் திரு. க. வேந்தனார் அவர்களின் மதிப்புரை வெண்பாவும், வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களின் விளக்கவுரையும் இராஜம் பிரசுர நிர்வாகியின் வேண்டுகோளும் இந்நூலுக்குச்சிறப்பளிக்கின்றன.

—சக்தி எஸ். பாலையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

# மனிதன் சந்திரனை வென்ருல்...

மனிதனுடைய சிந்தனு சக்தி விரிந்தது; எல்லையற்றது. மனிதன் பறவையைக் கண்டான், அதனுடைய பிரதிபிம்பமாக விமானத்தைப் படைத்தான். ஊக்கம், விடாமுயற்சி இவையிரண்டையுமே தன்னுடைய இலட்சியத்தை வெல்வதற்கு ஆயுதங்களாக மனிதன் பாவித்தான். அதற்குச் சான்றுகளாகக் "கென்றி போர்டு" மோட்டார் வண்டியையும், ரைட் சகோதரர்கள் ஆகாய-விமானத்தையும், இட்டீவின்சன் நீராவி வண்டியையும், எடிசன் சலனப் படக் கருவியையும் கண்டு பிடித்து நம்முலகிற்கு நவின்றனர்.

அத்துடன் மட்டும் மனிதனின் ஆசை நின்றுவிட்டதா? இல்லவே-இல்லை. மனிதனுடைய சிந்தனு சக்தியைப் போலவே அவனுடைய ஆசையும் அளவற்றது. அதனுல் மனிதன் பூமிக்கு அருகிலேயுள்ள சுக்கிரன், சந்திரன் முதலிய கோள்களையும் தானே கைப்பற்ற எண்ணினன் "எண்ணினுர், எண்ணியதை நண்ணினுர்" என்பது போலத் தன்னுடைய ஆசையை நிறைவேற்ற எண்ணினன் மனிதன்.

இதைக் கண்டவர் 'சிலர் "என்ன இருந்தாலும் மனிதனின் புத்தியே குரங்குப் புத்திதானே!" என்கிருர்கள். இது எந்தப் பகுதியிலிருந்து யார் சொன்னுலும் அவன் பகுத்தறிவு-உலகறிவு இல்லாதவன் என நிச்சயமாகக் கூறலாம். ஏனெனில் உலகப் புள்ளிவிவரத்தின் படி இன்னுஞ் சில ஆயிரம்-வருடங்களிற்குள்ளாக உலகிலேயே ஒரு மனிதனிற்கு ஒரு சதுர அடி பரப்பு நிலம்தான் கிடைக்கும்! மனிதர் ஒருவருடன் ஒருவராக நெருக்கிய வாறு இருக்க வேண்டும், என எண்ணப்படுகிறது. அதற்குப் பரிகாரமாகவே மனிதன் தண்ணிலவை வீசும் வெண்ணிலவை நாடுகிருன்.

### உணவுப் பிரச்சினை

மனிதன் சந்திரனைப் பிடித்து அங்கே குடியேற வழிதேடி விட்டால்; மனிதனின் சக்தியே சத்திதான். அதன் பின் பூவுலக மக்களிடையே "இடமில்லாமை" என்ற சொல்லிற்கே இடமில்லாற் போய் விடும். அம்புலியைப் பிடிக்கக் குழந்தைகள் கையை நீட்ட மாட்டாது; அம்புலியிலேயே சென்று தங்கி உல்லாசமாக இருக்கவும் கூடும். ஆனுல் சந்திரமண்டலப் பிரயாணம் அவ்வளவு சுலபமானதாக இல்லை. முக்கியமாகச் சந்திர மண்டலத்திற்கு மனிதன் செல்லும் போது தனக்கு வேண்டிய உணவு வகைகளைப் - பொட்டலங்களாகவோ, டப்பாக்களில் அடைத்தோ கொண்டு செல்ல முடியாது. அங்ஙனம் கொண்டு செல்லின் "ராக்கெட்"டின் நிறை அதிகரித்து அது செல்ல முடியாததாகிவிடும். இக்குறை தீர்க்க முடியாத குறையாக இருக்கிறது.

இதற்கும் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிருர்கள். அதாவது ராக்கெட்டிலே இருக்க வேண்டி உபகரணங்களான கதிரை, மேசை முதலியவற்றை ஒருவித அட்டையாற் தயாரிக்கிருர்கள். இந்த அட்டை உணவுகளினுலும், சத்து வகைகளினுலும் ஆக்கப்பட்டதாயிருக்கும். இதனுலாக்கப்பட்ட கதிரை, மேசைகளே "ராக்கெட்"டிலே உபகரணங்களாகப் பாவிக்கப்படும். "ராக்கெட்டிலே செல்லும் பிரயாணிகள் பசிக்கும் பொழுது அவ்வுபகரணங்களையே உண்டு பசியாறலாம். இதனுல் "ராக்கெட்"டின் நிறை குறையுமேயொழிய அதிகரிக்கமாட்டாது. இதையே தற்போதையத் திட்டமாகக் கொண்டுள்ளார்கள்.

### குடியேறிவிட்டால்...

சந்திரனிற்கு மனிதன் குடியேறிவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது இவ்வுலக் மக்களிடையே — அறிவியல் அறிவு ஒவ்வொருவரிடையேயும் இருக்கவேண்டும். பழைய மூட நம்பிக்கைகள் அகலவேண்டும். ஏனெனில் இப்பொழுதும் கிரகணத்தன்று ராகு என்ற பாம்பு சந்திரனை விழுங்குகின்றது என்ற நம்பிக்கை சிலரிடையே திடமாக உள்ளது. சில சமயம் ஒரு மகன் தந்தையைப் பூமியிலே விட்டு விட்டுச் சந்திர மண்டலத்திற்கு உல்லாசப் பிரயாணம் செல்லலாம். அப்பொழுது சந்திர கிரணம் வரக்கூடும். அவனது தந்தை மூடநம்பிக்கையுள்ளவராயிருக்கலாம். அப்பொழுது அவர் 'சந்திரனைப் பாம்பு விழுங்கும்பொழுது எனது மகனையும் விழுங்கிவிடுமே' என்று கவலைப்படுவாரன்ருே! இதனுலே சந்திரனைப் பற்றிய மூட நம்பிக்கைகள் மனிதனிடமிருந்து அகலவேண்டும். இல்லாவிடில் சந்திரனிற்குச் செல்வது சாத்தியமாகினுற் கூட மக்கள் சந்திரனிற்குச் செல்ல முன்வரமாட்டார்கள்.

மனிதனுடைய சிந்தனை வளர்கிறது. அவனுடைய செயற் திறனுல் அவனிற்குப் பல சக்திகள் பணிபுரிகின்றன. மின்சார சக்தியும், அணு சக்தியும் மனிதனின் வேலைகளைப் பகிர்ந்து செய்கின்றன. இவ்வுயர்ச்சியினுல் மனிதன் சந்திரனை மட்டுமல்ல, சுக்கிரன் முதலியவற்றையும் பிடித்து அங்கே குடியேறினுலும் வியப்படைவதற்கில்லை.

து. இந்திரலிங்கம்,
அரியாலை.

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(25)

—அன்ரனி பெர்னுண்டோ, கிரிலப்பனை—

## வானை முட்டும் மாளிகை

வானை முட்டும் மாட மாளிகையொன்று அமெரிக்காவில் இருக்கிறது 'எம்பயர் ஸ்டேட் கட்டடம்' என அழைக்கப்படும் இந்த மாளிகை தான் உலகிலேயே மிக மிக உயரமான கட்டடம்.

இந்த உயரமான கட்டடம் போல் மூன்று மடங்கு உயரமான கட்டடமொன்றை மேற்கு ஜெர்மனியில் கட்டப்போகிருர்கள். அதன் உயரம் என்ன தெரியுமா? மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பது அடிகள். நிலத்தின் மேல் முன்னூற்றி ஐம்பத்தாறு மாடிகள். நிலத்தினுள்ளே பதினுறு மாடிகள், கட்டடத்தின் அகலம் ஆயிரத்து இருநூறு அடிகள்.

அப்பாடா! எவ்வளவு பெரிய கட்டடம். கற்பனை செய்யக்கூட முடியாதே. இந்தக் கட்டடத்தில் சுமார் இருபத்தையாயிரம் பேர் வசிக்க முடியுமென்றும் கணக்குப் பண்ணியிருக்கிருர்கள். இந்த ஒரே கட்டடத்தில் மக்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் இருக்கும். கார்களை வைப்பதற்கு நாலாயிரம் 'கராஜ்'கள், இருக்கும். ஒரு நாட்டிய மண்டபம், பல சினிமாப்பட மாளிகைகள், பொலீஸ் நிலையம், நகராதிபதி காரியாலயம், எல்லாம் இதற்குள் இருக்கும். இதனுள் இடத்துக்கிடம் செல்வதற்கு பெருந்தொகையான மின்சார ஏணிகள் இருக்கும். இக்கட்டடம் அமைக்கப் பட்டதும் அது ஓர் அழகான சிறு நகரமாக விளங்குமென்று சொல்லித் தெரிய வேண்டியதல்லவே?

இந்தக்கட்டடத்தின் உச்சியைநிலத்திலிருந்து அண்ணார்ந்து பார்த்தால் எப்படி இருக்குமென்று நினைக்கிறீர்கள்? கட்டடத்தின் பாதிவரைதான் தெரியும். மேற் பாதியை மேகங்கள் சூழ்ந்து மறைத்திருக்கும். ஆம்; அவ்வளவு உயரம்! மேகங்களுக்கு மேல் மிக உயரத்தில் கூட மனிதர்கள் வசிப்பார்கள்.

'கொலோன்' நகரிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் 'மினிஸ்டர் பீல்' என்ற இடத்தில் இக்கட்டடத்தைக் கட்டப் போகிருர்கள். வேலைகள் தொடங்கு முன்பே அதில் வாடகைக்கு அறை வேண்டுமென்ற விண்ணப்பங்கள் கிடைக்கத் தொடங்கி விட்டன. அறிவர்கள், வான சாஸ்திரிகள் போன்ருேரே அதிகமாக விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர்.

இந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்கப் பத்து வருடங்கள் பிடிக்குமாம். இருபத்தைந்து கோடி ரூபாய்களுக்கு மேல் பணமும் செலவாகுமென்று மதிப்பிட்டிருக்கிருர்கள்.

# பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ருர்



ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கே. எப். சேவியர் தம்பதிகளின் புதல்வன் செல்வன் பாலேந்திரன் சேவியர், அண்மையில் கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றுள்ளார். இப் பேச்சுப் போட்டியில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்கள் பதினன்கு வயது நிறையப் பெற்ற இவ் விளைஞரின் பேச்சுத் திறமையை வெகுவாகப் பாராட்டினுர்கள். செல்வன் பாலேந்திரன் அனேக நாடகங்களில் குறிப்பாக இலங்கை வானெலி பல நாடகங்களில், பங்கு கொண்டு பலரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார்.

# காலை வனப்பு

பூமாதேவி என்ற அணங்கு இருண்ட பட்டாடையால் இறுகப் போர்த்துக் கொண்டு அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுது பூமியின் கீழ்த் திசை வெளுத்துத் தோன்றுகின்றது. பூமியைக் கௌவி விழுங்கிக் கொண்டிருந்த காரிருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. கீழ்வானத்தில், விளங்கிக் கொண்டிருந்த விடிவெள்ளி மங்குகிறது. கிழடி வானத்தில் பொன்னிற ஒளிக்கதிர்கள் காணப்படுகின்றன. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பத்தரை மாற்றுப் பசும் பொன் விதானம் போலத் தக தகவென இலங்குகிறது.

அவ்வேளை; கீழ்த்திசைக் கடலின் அடியிலிருந்து சூரியன் வட்டத் தங்கத் தகட்டைப் போல மிக்க பிரமையுடன் மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருந்தது. இளஞ் சூரியன் தனது தங்கக் கம்பி போன்ற மெல்லிய பொற் கதிர்களை நாற்றிசையும் நீட்டி பாரெங்கும் பரப்பி ஒளியை, எங்கும் அள்ளி வீசுகிறது.

மரக்கொம்பர்களில் மறைந்துறங்கும் பல்வேறு வகைப் பறவைக் கூட்டங்கள் துயிலெழுந்து, காலைக் கதிரவனை வரவேற்று ஒளி பெறுகின்றன. கோடிச் சேவல்கள் நாற்புறமும் மாறிக் கூவுகின்றன. காகங்கள் கரைகின்றன. குருவிகள் கீச்சிடுகின்றன. மரக்கிளைகளிற் பள்ளி கொண்ட குயிலினம் உள்ளக்களிப்பால் குக்கூ எனக் கூவுகின்றது. கிள்ளைகள் பேசுகின்றன. பூவைகள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன.

அழகிழந்து கூம்பிக்கிடந்த தாமரை மலர்கள் இதழ் விரிந்து வனப்புற மலர்கின்றன. இரவெல்லாம் இதள் பரப்பி மகிழ்வுற மலர்ந்து நின்ற குமுத மலர்கள் கூம்புகின்றன. ஞாயிறு வரரைக் கண்டு மகிழ்ந்த மலர்த்தருக்களும், மலர்ச் செடிகளும் பூமாரி சொரிகின்றன. நறுமணம் கமழ்ந்து மலர்ந்த மலர்களில் தீந்தேனுண்டு வண்டும் தும்பியும் ரீங்காரம் பாடுகின்றன.

இரவெல்லாம் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பரவர் விரைவாகக் கரையை நோக்கி வருகின்றனர். ஆ காக்கும் இடையர் ஆ நிரைகளை கட்டவிழ்த்து பசும் புற்றரை நாடி ஒட்டிச் செல்கின்றனர். உழவர் உலகின் உயர்ந்த உழவுத் தொழிலை நயந்து வயலுக்குப் போகின்றனர். மங்கையர் குடங்களை ஏந்திக் கொண்டு கிணற்றுக்கும் ஆற்றுக்கும் சென்று நீராடி நீருடன் திரும்புகின்றனர்.

ஆலயங்களில் சங்கநாதமும்,கணீர் கணீரென மணியோசையும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. கண் விழித்த மாந்தர் காலைக் கடன் கழித்து கோயில் சென்று கடவுளைக் கைதொழுது இறைஞ்சி வேண்டுகின்றனர். என்னே காலை வனப்பு!

—செல்வி ராணி நவமணி

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 2

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

____________________ ____________________

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி ததும்பும் 3வது வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (அட்டன்)

கோடானுகோடி செல்வம் கொட்டிக் கிடந்துதான் என்ன?
காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடைவழிக்கே!

என்ற உயர்ந்த தத்துவத்தை உலகினுக்களித்த

## பட்டினத்தார்



இன்னிசைச் செல்வர் டி. எம். சௌந்தரராஜனே பட்டினத்தாராக தோன்றுகிறார்

மற்றும்

எம். ஆர். ராதா, ஜெமினி சந்திரா, செருகளத்தூர் சாமா, ராமராவ்,
எஸ். டி. சுப்புலட்சுமி, சி. கே. சரஸ்வதி

# வெற்றி முரசு கொட்டும் 7வது வாரம்!

உணர்ச்சிக் கொந்தளிப்பும், உள்ளத்தை உருக்கும் சம்பவங்களும் நிறைந்த கதைக்கு உயிர்த் துடிப்புடன் கூடிய நடிப்பு மெருகூட்டுகிறது!

**இன்றே பாருங்கள்!**



கமலா பிக்சர்ஸ்

## அன்னை இல்லம்

சிவாஜி கணேசன், ரங்கராவ், முத்துராமன், நம்பியார், நாகேஷ், தேவிகா, குமாரி சச்சு, ஜயந்தி

முதலியோர் நடித்துள்ளனர்

**சென்ட்ரல்** (மருதானை) ❁ **ராணி** (யாழ்ப்பாணம்)

**மற்றும் 5 திரைகளில்!**

சிலோன் தியேட்டர்சார் அளிக்கும்
புதுவருட விருந்து!

சிவாஜி கணேசன, சரோஜாதேவி, எம். ஆர். ராதா, ராமச்சநதிரன், ரங்கராவ், முத்துலட்சுமி, சிதாலட்சுமி தோன்றும்



## கல்யாணியின் கணவன்

# 7வது
## கடைசி வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

**மற்றும் 9 திரைகளில்!**

எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
நம்பியார், நாகேஷ், மனோரமா,
பாலாஜி, விஜயலட்சுமி
முதலியோர் தோன்றும்

## என் கடமை

18ம் உ வெள்ளிக்கிழமை முதல்!
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை)

யாழ்ப்பாணம் வின்சரில் 2வது வாரமாக நடைபெறுகிறது!

மல்யுத்த வீரர் தாராசிங், பெரோஸ்கான், மும்தாஜ் பானு, அமீதா நடித்த



## காட்டு வீரன் (தமிழ்)

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1964-ம் வருடம் டிசம்பர் மாதம்13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.